
அனுமதி இல்லாமல் நடிக்கமாட்டேன்

பக்கம் 8

பாட்டுக்கு வேட்டு

பக்கம் 9

கவிழ்ந்தது படகு

பக்கம் 10

அணுஆயுத மயமாகும் தென்னாசியா

பக்கம் 13



விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

பக்கங்கள் : 30

# உதயன்

சுடர் 27
கதிர் 208

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 07 வியாழக்கிழமை (21/06/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


## பச்சிளம் குழந்தையை கைவிட்ட தாய் வவுனியாவில் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 21

வவுனியா ஓமந்தை குஞ்சுக்குளம் பகுதியில் பிறந்து நான்கு நாள்களே ஆன பச்சிளம் குழந்தையை அநாதரவாகக் கைவிட்ட தாய் ஓமந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது:

வவுனியாவில் ஓமந்தை குஞ்சுக்குளம் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரின் கணவர் கடந்த சில வருடங்களுக்கு முன் இடம்பெற்ற இறுதிப்போரில் உயிரிழந்திருந்தார்.

இவருக்கு ஒரு குழந்தையும் இருந்தது. இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன் இவர் திடீரெனக் கர்ப்பம் தரித்தார். இதற்குப்பின் கடந்த 13ஆம் திகதி வவுனியா வைத்திய

04↘

# மன்னிப்பளித்து தயவு காட்டுங்கள்

## தமிழ்க் கைதிகளின் பெற்றோர் ஜனாதிபதிக்கு மீண்டும் கடிதம்

கொழும்பு, ஜூன் 21

எமது பிள்ளைகள் மீது உங்களின் தயவைக் காட்டுங்கள். எங்கள் பிள்ளைகளின் விடுதலை தொடர்பாக முடிவெடுப்பதற்கு உங்களுக்குச் சகல அதிகாரங்களும் உண்டு. இனியும் தாமதியாது நடவடிக்கை எடுத்து எமது பிள்ளைகளைப் பொதுமன்னிப்பளித்து விடுவியுங்கள்.

இவ்வாறு கோரித் தமிழ் கைதிகளின் பெற்றோர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் தங்களது பிள்ளைகளுக்குப் பொது மன்னிப்பு அல்லது புனர்வாழ்வளித்து விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'நீண்ட காலமாய் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள எமது பிள்ளைகளை விடுதலை செய்வதற்குச் சாத்தியமான தீர்வுகளை முன்னெடுக்குமாறு வேண்டுகின்றோம். விடுதலைப் புலிகள் 11,000 பேரைப்

04↘

## ஐ.நா. குழுவுக்கு இலங்கை அனுமதி மறுத்தால்

# கடும் நடவடிக்கையில் குதிப்பார் நவிபிள்ளை

## அனைத்துலகப் போர்க்குற்ற நீதிமன்றுக்கு இந்த விவகாரம் செல்வதற்கும் வாய்ப்பு



ஜெனிவா,ஜூன் 21

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அதிகாரிகள் குழுவை இலங்கை அரசு நாட்டுக்குள் அனுமதிக்க மறுத்தால், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை [நவநீதம்பிள்ளை] இலங்கைக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளில் இறங்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளதாக ஜெனிவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஹேக்கில் உள்ள அனைத்துலகப் போர்க்குற்ற நீதிமன்றத்தின் முன்பாக இந்த விவகாரத்தைக் கொண்டு செல்லுமாறு அடுத்த ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் அவர் முன்மொழியக் கூடும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

04↘

## மேனனின் வருகை அரசுக்குத் தெரியாதாம்

கொழும்பு, ஜூன் 21

இந்தியப் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனின் கொழும்புக்கான பயணம் தொடர்பாக அதிகாரபூர்வமான தகவல் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

எனினும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம், இந்தியப் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் இந்த மாத இறுதியில் கொழும்பு வர

04↘

## பிடல் காஸ்ரோவைச் சந்திக்கும் மஹிந்தவின் முயற்சி தோல்வி

ஹவானா, ஜூன் 21

கியூபாவுக்கு அதிகாரபூர்வ பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கியூபாவின் முன்னாள் அதிபர் பிடல் காஸ்ரோவைச் சந்திக்க முயன்ற போதும் அந்த முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கியூபாவின் முன்னாள் அதிபர் பிடல் காஸ்ரோ, உலகில் மதிப்புக்குரிய தலைவர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். தற்போது ஓய்வில் உள்ள அவர்,

04↘

## தீர்வை முன்வைப்பதில் அரசுக்குள் முரண்பாடு

### லக்ஷ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 21

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைப்பது தொடர்பிலும், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தும் விடயத்திலும் அரசுக்குள் ஒற்றுமை இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும் கண்டி மாவட்ட

04↘

## சொந்த இடங்களே வேண்டும் வேறு காணிகளில் குடியமரோம்

### திருமுறிகண்டி மக்கள் திட்டவட்டம்

வவுனியா, ஜூன் 21

''எமது சொந்தக் காணிகளில் குடியமர அனுமதிக்கவேண்டும், வேறு எந்த இடங்களிலும் நாங்கள் குடியமர மாட்டோம்'' என திருமுறிகண்டிப் பகுதியில் உள்ள மக்கள் ஐக்கிய நாடுகள் சபைக்கான அகதிகள் நிறுவனத்திடம் (UNHCR) கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றைய தினம் தற்காலிகமாக மக்களை, மீளக்குடியமர்த்தல் தொடர்பாகவும் அவர்களுக்கான

04↘

## புலனாய்வாளர்களே மக்களைத் தாக்கினர்

### நாடாளுமன்றத்தில் சுமந்திரன் எம்.பி. சாடல்



கொழும்பு, ஜூன் 21

நிலங்கள் சுவீகரிக்கப்படுவதற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் ஜனநாயக ரீதியில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் வீடு திரும்பிக்கொண்டிருந்த மக்கள் மீது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே தாக்குதல் நடத்தினர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற மாலபே

04↘

## 9 நாகை மீனவர்கள் கடற்படையால் கைது

நாகப்பட்டினம் மீனவர்கள் 9 பேர் நேற்றுமுன்தினம் இரவு இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது இலங்கையில் காங்கேசன் துறைமுகம் கடற்படை முகாமில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து இலங்கையில் சிறை வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்கக் கோரி வேலைநிறுத்தம் செய்யப் போவதாக தமிழக மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

## கடத்தல்களுக்கு எதிராக நடவடிக்கை ஏதுமில்லை

### சிறுவர்கள், பெண்கள் கட்டாய விபசாரத்தில் இலங்கை மீது அமெரிக்கா குற்றச்சாட்டு

வொஷிங்டன், ஜூன் 21

இலங்கையில் சிறுவர்கள், பெண்கள் அதிகம் பாலியல் நோக்கத்துக்காக கடத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். அதிலும் பெண்களை விட சிறுவர்கள் பலாத்காரமாகக் கடலோரச் சுற்றுலாத்தள பகுதிகளில் பாலியல், விபசாரத்தில் ஈடு படுத்தப்படுகின்றனர் - என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மேலும், கடத்தல்களைக் குறைக்க இலங்கை அரசு முழுமையான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது. அமெரிக்

04↘

## இலங்கையை எச்சரிக்கிறது நாணய நிதியம்

வொஷிங்டன்,ஜூன் 21

இலங்கையில் வெளிநாட்டு நாணய மாற்று வீதம் அதிகரித்துள்ள நிலையில் பண வீக்கம் தொடர்பில் இலங்கை அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனச் சர்வதேச

04↘

## நில ஆக்கிரமிப்பை எதிர்த்து தமிழர் புலம்பெயர் நாடுகளிலும் போராட்டம்

பரிஸ், ஜூன் 21

தமிழர் தாயகத்தில் படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக எதிர்வரும் 26ஆம் திகதி தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என நாடுகடந்த தமிழீழ அரசு அறிவித்துள்ளது.

படையினரால் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்புக்கு எதிராக முறிகண்டி ஆலய முன்றிலில் எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை போராட்டம் ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்தவுள்ள நிலையில், நாடு கடந்த தமிழீழ அரசு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

தமிழர் தாயகத்தில் மேலெழும் சாத்வீகவழிப் போராட்டங்களுக்கு

04↘

# தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை ஆதிக்கவாதிகள் அச்சத்தில்

## அது தொடரவேண்டும் என்கிறார் மனோ

கொழும்பு,ஜூன் 21

பெரும்பாலான தமிழ் கட்சிகள் மத்தியிலே இன்று ஏற்பட்டுள்ள ஒற்றுமை தொடர வேண்டும். இதுவே இன்று உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். அநீதிக்கு எதிராகச் சாத்வீக ரீதியாக நாம் அணிதிரண்டு இருப்பது, இன்று ஆதிக்கவாதிகளையும், அவர்களுக்குத் துணை போகின்றவர்களையும் அசர வைத்துள்ளது என்று ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.



தமிழ்க் கட்சிகளின் இந்த ஒற்றுமை சர்வதேச சமூகத்தையும், தென்னிலங்கையையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. இந்த ஒற்றுமை தொடர வேண்டும். எமது இன்றைய இந்த ஐக்கியத்தைக் குழப்பும் எந்த ஒரு நடவடிக்கையையும், அதை எவர் செய்தாலும் தமிழ் மக்கள் அவற்றை ஒருபோதும் ஆதரிக்கக் கூடாது. இதுவே எனது கோரிக்கை எனவும் மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆரம்பித்து வைத்துள்ள மண்ணுரிமை இயக்கம் இன்று வடக்கில் சூடு பிடித்துள்ளது. இந்த இயக்கத்துக்கு ஆதரவு வழங்கியதுடன், அதைத் தொடர்ந்து முன்கொண்டுசெல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

'உரிமைக்கு குரல் கொடுப்போம் உறவுக்கு கை கொடுப்போம்' என்ற எமது கட்சியின் உறுதியான கொள்கையின் அடிப்படையில், இந்த இரண்டு கட்சிகளுக்கும், ஜனநாயக மக்கள் முன்னணி முழுமையான ஆதரவு வழங்குகிறது. நமது இந்த ஒற்றுமை, மக்களை அணிதிரட்டும் ஜனநாயகப் போராட்டக் களத்தில் ஏற்பட்டுள்ளது என்பதுதான் முக்கியமானதாகும்.

மண்ணுரிமை பறிப்பு என்பது வடக்கில், கிழக்கில் தமிழ் மக்களுக்கு மாத்திரம் உரிய பிரச்சினை அல்ல. அது முஸ்லிம் மக்களும் எதிர்நோக்கும் பெரும் பிரச்சினை ஆகும். எனவே முஸ்லிம் மக்களைத் தலைமை தாங்கும் கட்சிகளும், தமிழ் கட்சிகளின் ஜனநாயகப் போராட்டங்களுடன் தம்மை இணைத்துக்கொள்ளத் தயாராக வேண்டும்.

பொது நோக்கம் கொண்ட இத்தகைய ஒற்றுமை மலையகத்திலும் மேலோங்க வேண்டும். மலையகக் கட்சிகளும் தமது குறுகிய நோக்கங்களைத் தூரத்தள்ளி வைத்துவிட்டுப் பொது நோக்கங்களுக்காக ஒன்று திரளத் தயாராக வேண்டும்.

தமிழ், முஸ்லிம் மக்களின் மண்ணுரிமை கோஷங்களும், ஜனநாயகப் போராட்டங்களும் சாதாரண சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல என்ற விழிப்புணர்வை நாம் தென்னிலங்கையில் ஏற்படுத்துகிறோம். தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை உறுதி செய்வதே, உண்மையான தேசிய ஒற்றுமைக்கு அடித்தளம் என்ற செய்தியை நாம் தென்னிலங்கைக்கு சொல்கிறோம்.

இந்தப் பணியில் ஜனநாயக மக்கள் முன்னணி ஏற்கனவே ஈடுபட்டுள்ளது. தமிழ் கட்சிகள், தமது குறுகிய முரண்பாடுகளைத் தூரத்தள்ளி வைத்துவிட்டு ஒன்றுபடுவதன் மூலமாக இந்தப் பணியை மென்மேலும் உறுதியாக செய்ய முடியும்- என்றுள்ளது. (த)

## திருகோணமலை மீனவருக்கு பாஸ் நடைமுறையில் தளர்வு

திருமலை,ஜூன் 21

திருகோணமலை துறைமுகப் பகுதியில் மீன்பிடிக்கவென விடுக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு நேற்று புதன்கிழமையுடன் தளர்த்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இதுவரை காலமும் மீன்பிடிக்கச் செல்ல அனுமதி கோரல், பாஸ் பெறுதல் என்பன இனி நடைமுறைப் படுத்தப்படமாட்டாதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரமவின் ஆலோசனைக்கு அமைய இந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

எனினும் இவ்வாறு தகவல் வெளியாகியுள்ளபோதும் உத்தியோகபூர்வமாகத் தமக்கு அறிவிக்கப்படவில்லை என கடற்படை ஊடகப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார். (த)

## பொன்சேகாவின் முதலாவது மக்கள் சந்திப்பு மத்துகமவில்

களுத்துறை நகரிலிருந்து பேரணியாக சரத் பொன்சேகா மத்துகம நகருக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்.



கொழும்பு,ஜூன் 21

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் மக்களைச் சந்திக்கும் முதல் நிகழ்வு ஜூலை முதலாம் திகதி மத்துகமவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் மத்துகம அமைப்பாளருமான பாலித்த தெவரப்பெரும இந்த மக்கள் சந்திப்புக்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்.

களுத்துறை நகரிலிருந்து பேரணியாகச் சரத் பொன்சேகா மத்துகம நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 2 மணியளவில் பொதுக்கூட்டத்தை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொன்சேகாவின் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான அர்ஜூன ரணதுங்க, ஜயந்த கொட்டகொட, டிரான் அலஸ் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர். இதனைத் தவிர ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய, பாலித ரங்கேபண்டார, திலிப வெதஆராய்ச்சி, சுஜீவ சேனசிங்க, தயாசிறி ஜயசேகர ஆகியோரும் இதில் கலந்துகொள்ளவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (த)

## வடக்குச் சிறுவர்களுக்கு பாதுகாப்பு நிலையங்கள்

வட பகுதியில் சிறுவர்கள் பாதுகாப்பற்ற நிலைமைக்கு உட்படுத்தப்படுவதைத் தடுக்கத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பாதுகாப்பு நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் பாதுகாப்பு நிலையங்களை அமைப்பதற்குத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க குறிப்பிட்டார்.

சிறுவர்கள் பாடசாலையில் இருந்து வீடு திரும்பியதன் பின்னர் பாதுகாப்பற்ற நிலைமைக்குத் தள்ளப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். அதனைத் தடுப்பதற்காக அமைக்கப்படும் இந்தப் பாதுகாப்பு நிலையங்களில் பாடசாலை நிறைவு பெற்று வீடு செல்லும் சிறுவர்கள் மாலையில் பாதுகாப்பாக பராமரிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாதுகாப்பு நிலையங்களைக் கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (த)

## கைக்குண்டு தாக்குதலில் பெண் சாவு

மெதிரிகிரிய பகுதியிலுள்ள வீடொன்றின் மீது நேற்றுப் புதன்கிழமை அதிகாலை வேளையில் கைக்குண்டொன்று வீசப்பட்ட போது அந்த வீட்டிலிருந்த 36 வயதான பெண்ணொருவர் உயிரிழந்ததுடன், அவரது கணவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த நபர் மெதிரிகிரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (த)

## ஜூலாம்பிட்டிய அமரேயுக்கு விளக்கமறியல்

கொழும்பு,ஜூன் 21

அம்பாந்தோட்டை, கட்டுவன பிரதேச மக்கள் விடுதலை முன்னணி ஆதரவாளர்கள் கொலைச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் சரணடைந்த ஜூலாம்பிட்டிய அமரே என்று அழைக்கப்படும் ஜீ.ஜீ.அமரசிறியை எதிர்வரும் ஜூலை மாதம் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு தங்காலை மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி சந்தேகநபரை எதிர்வரும் 29ஆம் திகதி வலஸ்முள்ள நீதிவான் நீதிமன்றில் அடையாள அணிவகுப்பில் ஈடுபடுத்துமாறும் தங்காலை மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (த)

## தனியார் மருத்துவக் கல்லூரிக்கு அமைச்சர்கள் இருவர் எதிர்ப்பு

கொழும்பு,ஜூன் 21

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை ஸ்தாபிப்பதற்கு இரண்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த தனியார் மருத்துவக் கல்லூரி மூலம் நாட்டிலுள்ள இலவச கல்வி முறைக்கு அடி விழும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவும், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுமே அரச தரப்பு நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக உரையாற்றியுள்ளனர். (த)

## கட்டுவன தாக்குதலாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்

### சுதந்திரக் கட்சி கூறுகிறது

கொழும்பு,ஜூன் 21

கட்டுவனவில் இடம்பெற்ற ஜே.வி.பி. கூட்டத்தின்போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு இருவர் கொல்லப்பட்ட சம்பவத்திற்குப் பொறுப்பானவர்கள் அனைவரையும் உடனடியாகச் சட்டத்தின் முன் நிறுத்துவதும் அவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதும் அவசியம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூறியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அலகப்பெரும விடுத்துள்ள அறிக்கையொன்றில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வலஸ்முல்ல கட்டுவன பிரதேசத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரக் கூட்டமொன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கண்டிக்கிறது.

இந்த வன்முறையின் போது உயிரிழந்த திருமதி ஈ.எம். மாலினி மற்றும் நிமந்த ரொஷான் ஆகியோரின் குடும்பத்தினருக்கு நாம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கையில் அரசியல் வன்முறைகளில் பாதிக்கப்பட்ட ஒரு கட்சி என்ற வகையிலும் தேர்தல் அரசியலில் ஜனநாயகத்துக்காக, இரத்தம், சதை, உயிர்த் தியாகம் செய்த கட்சி என்ற வகையிலும் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பாக எமது கோபத்தையும் விசனத்தையும் வெளிப்படுத்த நாம் தயங்கவில்லை.

மேற்படி குற்றச் செயலுக்கு பொறுப்பானவர்கள் அனைவரையும் உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்துவதும் அவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதும் மிக அவசியமாகும். இதன் மூலமே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில், பயங்கரவாதத்தை தோற்கடித்த நாடு என நாம் பெற்றுக்கொண்ட கௌரவத்தை நாம் பாதுகாக்க முடியும்-என்றுள்ளது. (த)




ஐக்கிய நாடுகள் ரீயோ 20 மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரேஸில் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு றியோடி கலியாவோ சர்வதேச விமான நிலையத்தில் செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது. இதன்போது, பிரேஸிலுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த பாலசூரிய ஜனாதிபதியை விமான நிலையத்தில் வரவேற்றார். (த)

## நோயாளர் நலன்கருதி பகிஷ்கரிப்பு நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

புற்றுநோய் வைத்திய நிபுணர் ந.ஜெயக்குமாரனின் வீடு தாக்கப்பட்டதைக் கண்டித்து மீண்டும் இன்று தொடக்கம் நடத்த இருந்த வைத்தியர்களது பணிப்பகிஷ்கரிப்பு நோயாளர்களது நலன்கருதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பணிப் பகிஷ்கரிப்பைத் தொடர்வதா, இல்லையா என்பது பற்றி எதிர்வரும் திங்கட்கிழமை கலந்துரையாடப்படவுள்ளது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்க யாழ். கிளையின் தலைவர் எஸ்.நிமலன் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சை நிபுணர் ந.ஜெயக்குமாரனின் கந்தர்மடத்திலுள்ள வீடு இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டது. ஜன்னல் கண்ணாடிகள் சேதமாக்கப்பட்டன. கழிவு ஒயிலும் ஊற்றப்பட்டது.

இதனையடுத்து அன்றையதினம் யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

சம்பவம் தொடர்பாகத் தாம் விசாரணை செய்வதாகப் பொலிஸார் தெரிவித்ததையடுத்து இன்று மேற்கொள்ளவிருந்த பணிப் பகிஷ்கரிப்பு தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

எனினும் அது தொடர்பான விசாரணை நடவடிக்கையில் முன்னேற்றம் இல்லாதவிடத்து அல்லது திருப்தி இல்லாதவிடத்து தொடர் பகிஷ்கரிப்பில் ஈடுபட வேண்டிவரும். இதுபற்றி எதிர்வரும் திங்கட்கிழமை கலந்தாலோசிக்கப்படவுள்ளது என்று வைத்திய நிபுணர் நிமலன் தெரிவித்தார். தவிர யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாக ஆராயக் கொழும்பிலிருந்து வந்த குழு விசாரணை மேற்கொண்டு திரும்பியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

# கடல் கொந்தளிப்புத் தாக்கத்தை தவிர்க்க பாதுகாப்பு வேலி தேவை

### நீரியல் வளத்துறை அமைச்சுக்கு பாஷையூர் கடற்றொழிலாளர் மனு

யாழ்ப்பாணம், ஜூன் 21

***கடல் கொந்தளிப்பின் தாக்கத்தைத் தவிர்ப்பதற்காக பாதுகாப்பு வேலி அமைத்துத் தருமாறு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் செயலாளர் தமிந்த சொய்ஷாவிடம் பாஷையூர் கடற்றொழிலாளர் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பான மனு ஒன்றையும் அவர்கள் கையளித்துள்ளனர்.***

அமைச்சின் செயலாளர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்து ஐ.ஓ.எம் நிறுவனம் முன்னெடுத்துவரும் வேலைத் திட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டார்.

சேந்தான்குளம், மாதகல் ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் பாஷையூர் பகுதிக்குச் சென்றபோதே பாஷையூர் கடற்றொழிலாளர்கள் சார்பாக இந்த மனு கையளிக்கப்பட்டது.

பாஷையூர் புனித அந்தோனியார் கிராமிய கடற்றொழில் அமைப்பால் இந்த மனு கையளிக்கப்பட்டது.

இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது பகுதிக்கு வெளிச்ச வீடு அமைப்பது அவசியம் அது இல்லாத காரணத்தால் மீனவர்கள் திசைமாறிச் செல்லும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

மழை காலத்தில் இடி மின்னல் ஏற்படும் போது பாதிப்பு ஏற்படாமல் தவிர்ப்பதற்காகக் கிராமத்தின் நடுவில் இடி தாங்கிக் கோபுரம் அமைக்கப்படவேண்டும்.

மக்கள் நெருக்கமாக வாழும் எமது பகுதியில் கடற்றொழில் உபகரணங்களை உலர வைத்தல், சீர் செய்தல் ஆகிய நடவடிக்கைகள் வீதியில் வைத்தே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடற் கரையோரமாக இந்தச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வசதியாகச் சமதரை மேடை அமைப்பு ஒன்று அவசியம்.

கடல் கொந்தளிப்பின் போது பாதுகாப்பு பெறுவதற்காகப் பாதுகாப்பு வேலி கரையோரமாக அமைக்கப்பட வேண்டும்-என்றுள்ளது.

ஜனாதிபதி விசேட செயலணியின் வேண்டுகோளுக்கு ஏற்பவே யாழ்ப்பாணத்துக்கு வந்து ஐ.ஓ.எம் முன்னெடுத்து வரும் கடற்றொழிலாளர்களுக்கான வேலைத்திட்டங்களை பார்வையிடுவதாக அமைச்சின் செயலாளர் ஊடகங்களுக்கு கருத்துக் கூறுகையில் தெரிவித்தார்.

ஐ.ஓ.எம் இன் வேலைத் திட்டங்களைப் பார்வையிடும் குழுவில் அந்த நிறுவனத்தின் பிரான்ஸ் நாட்டுப் பிரதிநிதி பற்றிக் யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி மற்றும் திணைக்கள சிரேஷ்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ம-3-23)

# திருப்பி அனுப்பப்படுகின்றனர் சத்திரசிகிச்சை நிபுணர்கள்

### சத்திர சிகிச்சைக் கூடங்கள் இல்லையெனக் காரணம் கூறுகிறார் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்படும் சத்திரசிகிச்சைநிபுணர்களுக்கு அங்கு சத்திர சிகிச்சைக் கூட வசதிகள் போதுமானதாக இல்லை என்று கூறப்பட்டு வைத்தியசாலை நிர்வாகத்தால் அந்த நிபுணர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

அந்த நிபுணர்களது சிகிச்சை இங்கு கிடைக்கப் பெறாமையால் நோயாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். இந்த நிபுணத்துவ சிகிச்சையைப் பெறுவதற்காக நூற்றுக்கணக்கான நோயாளர்கள் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வாய், முகம், தாடை சத்திர சிகிச்சை நிபுணர், நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் ஆகியோர் அண்மையில் சுகாதார அமைச்சால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டனர்.

இங்கு போதிய சத்திரசிகிச்சைக்கூட வசதிகள் இல்லை என்று வைத்தியசாலை நிர்வாகம் கூறியதை அடுத்து அவர்கள் வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

சிறுநீரக சத்திர சிகிச்சை நிபுணர் மற்றும் நரம்பியல் சிகிச்சை நிபுணர்களை இங்கு நியமிப்பதில் இழுபறி நிலை இருந்து வருகிறது.

மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவர் கடந்த வருடம் நியமிக்கப்பட்டார். அவரும் பின்னர் திருப்பி அனுப்பப்பட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்பொழுது ஐந்து சத்திரசிகிச்சைக்கூடங்கள் உள்ளன. மகப்பேற்று சத்திர சிகிச்சைக்கூடம் மற்றும் பிரதான 3 சத்திர சிகிச்சைக் கூடங்களும் உள்ளன.

பல தசாப்தங்களுக்கு முன்னர் தேவையான சத்திர சிகிச்சை நிபுணர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கியிருந்தனர்.

தற்போது கட்டப்பட்டு வரும் கட்டடத்தொகுதியில் பல சத்திரசிகிச்சைக் கூடங்கள் அமையவுள்ளன. இந்த வருட இறுதியில் அந்த வேலைகள் பூர்த்தியடைந்துவிடும் எனவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் தேவையானளவு சத்திரசிகிச்சை நிபுணர்களை இப்பொழுதே உள்வாங்கி அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதைவிடுத்து காலம் கடத்துவதன் மூலமாக இங்குள்ள நோயாளர்களுக்கு சிறப்பான சேவையை வழங்கமுடியாத நிலையே தோன்றும்.

இது தொடர்பாக வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

இங்கு சத்திர சிகிச்சைக் கூட வசதிகள் போதுமானதாக இல்லை. அதனால் புதிதாக நிபுணர்களை உள்வாங்க முடியாதுள்ளது என்று பதிலளித்தார். (ம-4)


## மருதனார்மடம் சந்தியில் செயற்படாத மணிக்கூடுகள்

வலி. வடக்கு, ஜூன் 21

மருதனார்மடம் சந்தியில் அமைந்துள்ள மணிக்கூண்டுக் கோபுரத்தில் பொருத்தப்பட்ட மணிக்கூடுகள் சுமார் ஐந்து வருடங்களுக்கும் மேலாக இயங்காத நிலையில் காணப்படுகின்றன.

இணுவில் லயன்ஸ் கழகத்தால் கட்டப்பட்ட இந்த மணிக்கூண்டுக் கோபுரம் பொதுமக்களுடைய பணத்தையும் கொண்டு நிர்மாணிக்கப்பட்டது.

இன்று இந்த மணிக்கூடுகள் எவையும் செயற்படாத நிலையில் எவரும் இதனைத் திருத்தும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை. பிரதேச சபையும் கூட மணிக் கூட்டைத் திருத்தி ஓடச்செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்று பொது மக்கள் குற்றம் கூறுகின்றனர்.



உரியவர்கள் இதற்கான நடவடிக்கையை எதிர்காலத்தில் மேற்கொள்ள முன் வரவேண்டும் என்று மக்கள் கேட்கின்றனர். (ம-86)

## யாழ்.- கற்பிட்டிக்கு இ.போ.சவின் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணத்துக்கும் ச பிட்டிக்கும் இடையிலான இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ்சேவை கடந்த திங்கள் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலையால் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டதாக சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம் தெரிவித்தார்.

இந்த பஸ் சேவை தினமும் காலை 7 மணிக்கு யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்தும் கற்பிட்டி பஸ் நிலையத்திலிருந்தும் இடம்பெற்று வருவதாக சாலை முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

பஸ் சேவை சங்குப்பிட்டி, நாச்சிக்குடா, மன்னார், எழுவன்குளம் ஊடாக இடம்பெறுகிறது. சேவைக்கான ஒரு வழிக் கட்டணமாக 437 ரூபா அறவிடப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

# உள்ளூராட்சி சபைகளின் சந்தைகளில் வரி அறவீட்டு விவரம் பார்வைக்கு வைக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளால் நடத்தப்படும் சந்தைகளில் வரி அறவீட்டுக் கட்டண விவரங்கள் பார்வைக்கு வைக்கப்படாததால் பொருள்கள் கொண்டு வருவோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளின் சந்தைகளும் அவற்றால் நிர்வகிக்கப்பட்டு வருடாந்தம் பெருந்தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்படுகிறது.

எந்தவொரு சந்தையிலும் வரி அறவீட்டுக் கட்டண விவரங்கள் இல்லாததால் வரி அறவிடுவோர் தாம் நினைத்த தொகையை பொருள்கள் கொண்டு வருவோரிடம் அறவிடுகின்றனர் என்று கூறப்படுகிறது.

மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு சந்தையிலும் ஒவ்வொரு விதமாக சந்தைக் கட்டண அறவீடு இடம்பெறுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

சந்தையில் கட்டண அறவீடு தொடர்பான விவரங்களை நிரந்தரமாக காட்சிப்படுத்தினால் மக்கள் அளவுக்கு அதிகமான கட்டணம் செலுத்த வேண்டி ஏற்படாது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## மரபுரிமை கழகம் ஆரம்பம்

வலி வடக்கு, ஜூன் 21

யாழ். மாநகர எல்லைக்குள் காணப்படும் தமிழ் மக்களின் வரலாற்றுச் சின்னங்களை பாதுகாக்கும் முகமாக யாழ். மாநகர மரபுரிமைக்கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் யாழ். மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை இந்த அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

இந்தக் கழக அங்குரார்ப்பணக் கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள், பொதுமக்கள் மற்றும் கல்வியியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-86)

## புத்தாக்கம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜூன் 21

இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவால் நடத்தப்படவுள்ள தேசிய புத்தாக்குநர் கண்காட்சிக்கு நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட புத்தாக்கங்களைக் காட்சிப்படுத்த விரும்பும் படைப்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப் புத்தாக்கக் கண்காட்சியில் வெற்றி பெறுவோருக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் அமைச்சால் வழங்கப்படவுள்ளன. அத்துடன் ஒவ்வொரு பிரிவிலும் அதிசிறந்த புத்தாக்கங்களுக்கும் விருது வழங்கப்படும் .

ஆர்வமுடையவர்கள் நல்லூர் விதாதா வளநிலையத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தைப் பெற்று எதிர்வரும் ஜூலை மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கலாம் என்று பிரதேச செயலாளர் பா .செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார் (ம-14)

## கலந்துரையாடல்

யாழ் முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டின் ''நிலவள முன்னேற்றம் தொடர்பில் இலங்கையின் அனுபவம் '' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மொறட்டுவ பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர், பொறியியல் கலாநிதி உடேனி பி.நவகமுவ சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொள்வார். (ம-14)

## தீர்வை...

நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-


இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காணும் விடயமாக இருந்தாலும் சரி, நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை அமுல்படுத்தும் செயற்பாடாக இருந்தாலும் சரி இந்த விடயங்கள் தொடர்பில் அரசிடம் ஒற்றுமை என்பது இல்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாவதற்கு முன்னர் அறிக்கையில் பரிந்துரைக்கப்படுபவை முழுமையாக அமுல்படுத்தப்படும் என அரசு கூறியது. ஆனால், தற்போது அறிக்கை வெளியாகியுள்ள நிலையில், ஒரு பகுதியையே நடைமுறைப்படுத்துவோம் எனக் கூறுகின்றது.

மாலபேயில் தனியார் மருத்துவ பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு முதலீட்டு சபையின் அனுமதியோ அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியோ கிடைக்கப்பெறவில்லை எனக் குறிப்பிட்டார் லக்ஷ்மன் கிரியெல்ல.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல உரையாற்றிக் கொண்டிருக்கையில் அவருக்கும் ஆளுந்தரப்பு எம்.பி. அஸ்வருக்கும் இடையில் இடையிடையே கருத்துமோதல்கள் இடம்பெற்றன.

## இலங்கையின் உயர மனிதர் ஒரு முன்னாள் போராளி தான்



இலங்கையிலே மிக உயரமான மனிதராகக் கருதப்படுபவர் தற்போது பொலனறுவை மாவட்டத்திலுள்ள கண்டக்காடு புனர்வாழ்வு முகாமில், புனர்வாழ்வு பெற்று வரும் ஒரு முன்னாள் போராளியாவார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த குணசிங்கம் கஜேந்திரன் (வயது - 33) என்ற இந்த முன்னாள் போராளியின் உயரம் 7 அடி 3 அங்குலமாகும். இவர் 2009 மே 17 ஆம் திகதி இராணுவத்தினரிடம் சரணடைந்து பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். கடந்த பெப்ரவரி 22 ஆம் திகதி கண்டக்காடு புனர்வாழ்வு முகாமுக்கு இவர் மாற்றப்பட்டார்.

## புலனாய்வாளர்களே...

வைத்தியக் கல்லூரி தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சர்ச்சைக்குரிய மாலபே வைத்திய கல்லூரியில் அதிகமான மாணவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அதிக பணம் செலவு செய்யப்பட்டுள்ளது.

இக்கல்லூரி தொடர்பில் சுகாதார அமைச்சு குழு ஒன்றை அமைத்தது. அக்குழு வெளியிட்ட அறிக்கையின் படி அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மூன்று, நான்கு வருடங்களாக இந்தக் கல்லூரி அதிகாரமின்றி இயங்குகின்றது. இந்தக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களின் நிலை என்ன? இவர்களை எப்படிக் கையாள்வது?

சட்டத்தின் அடிப்படையில் இப்பிரச்சினை கையாளப்படவேண்டும். சட்டத்தின் அடிப்படையில் இந்த நாட்டில் எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படுவதில்லை. ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கப்படுவதில்லை.

வடக்கில் தமிழ் மக்களின் நிலங்கள் சுவீகரிக்கப்படுவதற்கும் அங்கு இடம்பெயர்ந்த மக்கள் 25 வருடங்களாக மீளக்குடியேற முடியாமல் இருப்பதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து மக்களால் ஜனநாயக முறையில் ஆர்ப்பாட்டம் கூட நடத்த முடியாமல் உள்ளது.

ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காக பஸ்களில் சென்ற மக்களின் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தாக்குதல் நடத்தினர். இப்படித்தான் இந்த நாட்டின் ஜனநாயகம் உள்ளது - என்றார்.

## பச்சிளம் குழந்தையை..

சாலையில் இவருக்கு ஒரு குழந்தை பிறந்தது. இந்த நிலையில் வைத்தியசாலையில் இருந்து குழந்தையுடன் திரும்பிய தாய் ஒரு இடத்தில் குழந்தையை அநாதரவாக விட்டுவிட்டு வீடு திரும்பியுள்ளார். இது குறித்த தகவல் பொலிஸாருக்குக் கிடைத்ததை அடுத்து குழந்தை பாதுகாப்பாக மீட்கப்பட்டதுடன் குறித்த தாயும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (த-15-400)

## இலங்கையை...

நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது. வெளிநாடுகளில் திரட்டப்பட்ட மில்லியன் கணக்கான வர்த்தக வங்கிகளின் கடன்களை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. இது உள்நாட்டின் நாணயப் புழக்கத்தை அதிகரித்துள்ளது. இந்த நிலையில் புதிதாக நாணயங்கள் அச்சிடப்படுவதும் இலங்கையில் பணத்தின் பெறுமதி வீழ்ச்சி அடைகின்றமைக்குக் காரணம் என சுட்டிக் காட்டியுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரி ஜோன் நெல்மெஸ், இது தொடர்பில் இலங்கை அவதானமாக இருக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் வெளிநாடுகளின் முதலீடுகள் ஈடுபடுத்தப்படுகின்றமை வரவேற்கத்தக்க விடயம். எனினும், அவ்வாறான பாரிய நிதியினால் ஏற்படுகின்ற சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## கடும் நடவடிக்கையில்...

இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாக ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஏற்கனவே இலங்கை அரசுக்குத் தெரிவித்திருந்தார். அத்துடன் விசேட குழு ஒன்றையும் இலங்கைக்கு அனுப்புவதாகவும் அவர் அறிவித்திருந்தார்.

ஆனால், ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் கடிதத்துக்குப் பதில் அனுப்புவதில்லை என்று இலங்கை முடிவு செய்துள்ளதுடன், இந்த விவகாரம் குறித்து மௌனத்தைக் கடைப்பிடிக்கவும் முடிவு செய்துள்ளது.

இருந்தாலும், ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு இலங்கை அரசு அதிகாரபூர்வமற்ற பதில் ஒன்றை அனுப்பியுள்ளது.

அதில், நவநீதம்பிள்ளையின் பயணத்தைத் தாம் எதிர்க்கவில்லை என்றும், ஆனால் விசேட குழுவை அனுமதிக்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், நவநீதம்பிள்ளை இலங்கையின் இந்தக் கடிதத்துக்குப் பதில் அனுப்பவில்லை என்று ஜெனிவா வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நவநீதம்பிள்ளையுடன் விசேட குழு நாட்டுக்குள் வர இலங்கை அரசு அனுமதிக்க மறுத்தால், அவர் அடுத்த கட்டமாக நடவடிக்கை எடுப்பதற்கு இரண்டு வாய்ப்புகள் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்த இலங்கை அரசு தவறி விட்டதால், ஹேக்கில் உள்ள அனைத்துலகப் போர்க்குற்ற நீதிமன்றத்தின் முன்பாக இந்த விவகாரத்தைக் கொண்டு செல்லும்படி அடுத்த ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் அவர் முன்மொழியக் கூடும்.

அல்லது, ஐ.நா. மனித உரிமைகள் சபையில், எதிர்காலத்தில் இலங்கை எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான சிறப்பு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதுடன் சிறிலங்காவுக்கு எதிரான புதியதொரு தீர்மானத்தையும் அவர் முன்மொழியலாம்.

நவநீதம்பிள்ளையினதும் அவரது குழுவினதும் பயணத்துக்கு இலங்கை தொடர்ந்து முட்டுக்கட்டை போடுமேயானால், இந்த இரண்டுவாய்ப்புகளில் ஒன்றை அவர் தெரிவு செய்யக் கூடும் என்று தெரியவருகிறது. (த)

## மன்னிப்பளித்து...

புனர்வாழ்வளித்து விடுதலை செய்துள்ளீர்கள். அவர்கள் சமுதாயத்தில் நல்ல பிரஜைகளாக வாழ்ந்து வருகின்றார்கள்.

அதேபோன்றதொரு சந்தர்ப்பத்தை சந்தேகத்தின் பேரில் இலங்கையில் பல்வேறு சிறைச்சாலைகளிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள எமது பிள்ளைகள் 700 பேருக்கும் வழங்குமாறு விநயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

நீதிமன்றச் சட்டநடவடிக்கைக்கு ஊடாக விடுதலை செய்வதென்பது சாத்தியப்படாது. அவை ஒரு காலத்தை இழுத்தடிக்கும் செயற்பாடாகுமே ஒழிய கைதிகளின் விடுதலையை அவை துரிதப்படுத்தாது.

கடந்த காலங்களில் நீதி அமைச்சராக இருந்த மிலிந்த மொறகொட விசேட நீதிமன்றங்களை நான்கு இடங்களில் உருவாக்குவதாகவும் வழக்கு தொடர்ந்து விசாரணை செய்யப்படுகின்ற போது பிணையில் செல்வதற்கும் குற்றமற்றவர்களை விடுதலை செய்யவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

அதன் பிறகு கூட எவ்விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதன்பின்பு அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதை நாம் அறிந்து மிகவும் சந்தோசமாக இருந்தோம். மாற்றம் வருமா என்று எதிர்பார்த்திருந்தும் ஒன்றும் நடக்கவில்லை.

அதேபோன்ற விடயத்தைத் தான் 23.05.2012இல் சபை முதல்வாரன அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் கூறியிருந்தார். கொழும்பு, அநுராதபுரம், வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களில் விசேட நீதிமன்றங்களை அமைத்து வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்து விடுதலைக்கு நடவடிக்கை எடுப்பதாக கூறியிருந்தார்.

ஆனால் அவை அனைத்தும் காலம் கடந்த செயற்பாடுகளே நீதிமன்றங்களால் விடுதலை செய்யப்படுவதென்பது மிகவும் கஷ்டமான காரியம். கிட்டத்தட்ட 5 வருடம் தொடக்கம் 17 வருடம் வரை சிறையில் உள்ளவர்களுக்கு 5 தொடக்கம் 12 மாதங்கள் வரை தவணை இடப்படுகின்றதே ஒழிய விசாரிக்கப்படுவதில்லை.

ஜனாதிபதி அவர்களே, உங்களிடம் பணிவுடன் வேண்டிக்கொள்வது உங்களின் கண்காணிப்பின் கீழ் எமது பிள்ளைகளுக்குப் பொது மன்னிப்பளித்து அல்லது புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே.

எமது பிள்ளைகளுக்கு உங்களின் தயவைக் காட்டுங்கள். எங்கள் பிள்ளைகளின் விடுதலை தொடர்பாக முடிவெடுப்பதற்கு உங்களுக்கு சகல அதிகாரமும் உண்டு. இனியும் தாமதியாது நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தயவாய்க் கேட்டுக் கொள்கின்றோம்' என்றுள்ளது. (த)

## நில ஆக்கிரமிப்புக்கு...

வலுவூட்ட, அதற்குச் சமாந்தரமாக தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுமென நாடுகடந்த தமிழீழ அரசு ஏற்கெனவே அறிவித்திருந்தது. இந்நிலையில் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகள் எங்கிலும் எதிர்வரும் 26ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக நாடுகடந்த தமிழீழ அரசு தெரிவித்துள்ளது. இதில் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் கலந்துகொள்வர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (த)

## பிடல் காஸ்ரோவைச்...

கியூபாவில் இப்போதும் செல்வாக்குமிக்க ஒருவராகவே இருந்து வருகிறார்.

இவரைச் சந்தித்துப் பேச ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடாக முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். ஆனால் அவரது கியூபப் பயணத்தின் போது பிடல் காஸ்ரோவைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

கியூபா சென்ற பல வெளிநாட்டுத் தலைவர்களைப் பிடல் காஸ்ரோ சந்தித்த போதும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவர் சந்திக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை நேற்றுமுன்தினம் ஹவானாவில் உள்ள புரட்சியாளர் சே குவேராவின் இல்லத்துக்குச் சென்ற மஹிந்த ராஜபக்ஷ, அவரது மனைவி அலெடியாவையும். மகன் கமிலோ மற்றும் மகளையும் சந்தித்துள்ளார். (த)

## சொந்த இடங்களே வேண்டும்...

வீடமைப்பு மற்றும் போக்குவரத்து வசதிகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடச் சென்ற ஐ.நா. அகதிகள் நிறுவனத்தின் அதிகாரிகளிடம் திருமுறிகண்டி மக்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். அண்மையில் திருமுறிகண்டியில் இடம்பெற்ற கூட்டத்தில் மக்களை முதற்கட்டமாக, தற்காலிக இடங்களில் மீளக்குடியமர்த்த தீர்மானிக்கப்பட்டது. இது குறித்து சம்பவ இடத்திற்குச் சென்ற ஐ.நா. அதிகாரிகளிடமே மக்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

''கூட்டத்தில் படைப் புலனாய்வாளர்களும் கலந்து கொண்டிருந்ததால் எம்மால் அங்கு சுதந்திரமாகக் கருத்துக்களை கூற முடியவில்லை. நாங்கள் எமது சொந்த இடம் தவிர்ந்த வேறு எந்த இடங்களிலும் குடியேறத் தயாராகவில்லை. அவர்கள் கூறும் காணிகளில் அடிப்படை வசதிகளை பெறுவதில் சிரமங்கள் உள்ளன. எனவே நாம் அங்கு குடியேறத் தயாராகவில்லை என மக்கள் தெரிவித்தனர். (த-400)

## மேனனின் வருகை...

வுள்ளதை உறுதி செய்துள்ளது. ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள்சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் தொடர்பான விவகாரங்களின் தொடர்ச்சியாகவே சிவ்சங்கர் மேனனின் கொழும்புப் பயணம் இடம்பெறுவதாக இந்திய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

சிவ்சங்கர் மேனனின் கொழும்புப் பயணத்துக்கும் பிரேசிலில் றியோ 20 பிளஸ் மாநாட்டில் இந்தவாரம் நடைபெற்ற மன்மோகன்சிங் - மஹிந்த ராஜபக்ஷ சந்திப்புக்கும் தொடர்பு இல்லை. இந்தச் சந்திப்பு மிகவும் குறுகியதொன்றாகவே இருக்கிறது என்றும் அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

இலங்கைக்கு மிகவும் நெருக்கமான நட்பு நாடாக இந்தியா இருந்து வருகிறது. ஆனாலும், ஜெனிவாத் தீர்மானத்தை இந்தியா ஆதரித்த பின்னர், கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையிலான உறவுகளில் தேக்கநிலை உருவாகியுள்ளது.

இந்தநிலையைத் தொடர விடாமல் உறவுகளை சீர்படுத்துவதே சிவ்சங்கர் மேனனின் கொழும்புப் பயணத்தின் நோக்கமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (த)

## கடத்தல்களுக்கு...

காவின் வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள மனித கடத்தல் தொடர் பான வருடாந்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டன் வெளியிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தோட்ட உலர் மண்டல விவசாயத்துறை, மீன்-உலர்த்தி தொழில் துறை மற்றும் மீன் பிடித்துறையில் சிறுவர்கள் பலாத்காரமாக தொழிலுக்குச் சேர்க்கப்படுகின்றனர்.

தேயிலை தோட்டப்புற தமிழ்ச் சிறுவர்கள் சிலர் கொழும்பில் வீட்டு வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். அவர்கள் உடல், உள, பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டு ஊதியம் வழங்கப்படாமல் கட்டுப்பாடுகளுடன் அடக்கி வைக்கப்படுகின்றனர்.

மேலும், சிறு எண்ணிக்கையிலான தாய்லாந்து, சீனா உள்ளிட்ட தெற்காசிய, ஐரோப்பியப் பெண்கள் இலங்கையில் கட்டாய விபசாரத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர். கடத்தல்களைக் குறைக்க இலங்கை அரசு முழுமையான நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனாலும், இவற்றைக் குறைக்க குறிப்பிடத்தக்க முயற்சிகளை இலங்கை மேற்கொண்டுள்ளது.

இந்த வருடத்தில் எந்தக் கடத்தல் குற்றவாளிகளும் தண்டிக்கப்படவில்லை. இதனால் கடுமையான பிரச்சினை ஏற்பட்டுள்ளது. கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு வழங்க அரசு தவறியுள்ளதால் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

எனினும், அரசின் மாதாந்தக் கூட்டங்கள் மூலம் மோசடி ஆள்சேர்ப்பு குற்றங்கள் தொடர்புடைய இரண்டு தொழிலாளர் ஆள்சேர்ப்பு முகவர் நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக 17 நாடுகள் மனித கடத்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்காது அவற்றுக்கு உடந்தையாக இருக்கின்றன என்றும் அமெரிக்காவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## புதிதாகத் தோன்றியுள்ள கழிவெண்ணெய் கலாசாரம்

நாட்டில் கடத்தல்கள், காணாமற்போதல்கள், கப்பம் வசூலித்தல் எல்லாமே எதுவித தங்கு தடையுமின்றித் தொடர்ந்து நடந்து வருகின்றன. இவற்றுடன் இனந்தெரியாதவர்கள் என்று கூறப்படுபவர்களால் செய்யப்படும் படுகொலைகளும் ஓயவில்லை. போர் ஓய்ந்துவிட்ட நிலையிலும் மனிதப் படுகொலைகள் தொடர்கின்றன.

இவ்வாறனதொரு நிலையில், யாழ். குடாநாட்டில் புதிய பாணியில்- புதிய 'கலாசாரம்' ஒன்று தலைதூக்கியுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி கந்தர்மடத்தில் மருத்துவ நிபுணர் ஜெயக்குமாரன் வீட்டின்மீது கல்வீசி, கண்ணாடி யன்னல்களை உடைத்தவர்கள் அவர் வீட்டுக்குள் கழிவெண்ணெயையும் ஊற்றிவிட்டுச் சென்றிருந்தார்கள். இத்தனைக்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றிருந்த சில முறைகேடுகள் தொடர்பாக இந்த வைத்திய நிபுணர் பொது நோக்குடன் முன்னின்று செயல்பட்டமைதான் காரணம் என்று கருதப்பட்டது.

அதைத் தொடர்ந்து அதே பாணியில் யாழ். நகரில் பிறவுண் வீதி, இரண்டாம் ஒழுங்கையிலும் கழிவு எண்ணெய் வீச்சுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சாதாரண குடிமகன் ஒருவரின் வீட்டின் மீதே இந்த அநியாயம் புரியப்பட்டது.

இப்பொழுது கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து அங்குமிங்குமாக அல்லாடிக்கொண்டிருக்கும் வலிகாமம் வடக்கு மக்கள் தம்மைத் தமது சொந்த இடங்களில் மீளவும் குடியமர அனுமதிக்கும்படி கோரி தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய முன்றிலில் நடத்திய அமைதி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு தம் இருப்பிடம் நோக்கி திரும்பிக்கொண்டிருந்த வேளையில் கூட்டத்தினர் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். 4 மோட்டார் சைக்கிள்களில் வந்துள்ள இவர்கள் மக்கள் பயணம் செய்த மினிவானின் பின் பக்கக் கண்ணாடியைக் கற்களை வீசி உடைத்திருப்பதுடன் தாங்கள் எடுத்து வந்த கழிவு எண்ணெயையும் மக்கள் மீது ஊற்றித் தெளித்துவிட்டு ஓடித் தப்பியிருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் தார்பூசும் கலாசாரம் ஒன்று இலங்கையில் நிலவியதுண்டு. வடக்கு கிழக்கில் சிங்கள எழுத்துக்களையும் தென்னிலங்கையில் தமிழ் எழுத்துக்களையும் தார் பூசி அழிப்பதான அந்தக் கலாசாரம் சிங்களம் மட்டும் சட்டத்தின் பெறுபேறுகளில் ஒன்று. அதனால் ஏற்பட்ட அழிவுகளை கணக்கிடமுடியாது. அதன்பின் குண்டெறிதல்- குண்டு வைத்தல், இறுதியில் நேரடி மோதல் என்ற நிலைக்கு வந்து தமிழர் தாயகமே இன்று முற்றுகை நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

இலங்கை அரசும் இராணுவமும் தமிழ் மக்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து விட்டதாக உலகுக்கு பிரசாரம் செய்கின்றன. மக்களை விடுவித்தது உண்மையானால் அவர்களை தமது முந்திய இடங்களில் அமைதியாகச் சென்று குடியமர விடுவதுதானே நியாயம். அதற்கான வழி முறைகளை- வசதிகளைச் செய்து கொடுப்பதல்லவா உங்கள் அடுத்த நடவடிக்கையாக இருந்திருக்கவேண்டும்.

ஆனால் புலிகள் இருந்து விட்டுச் சென்ற இடமெல்லாம் சிங்களவர்களுக்கு சொந்தம் என்பதுபோல் அல்லவா காரியங்கள் நடைபெறுகின்றன.

தமிழ் மக்களை விடுவிப்பதாகச் சொல்லிக்கொண்டு உள்ளே புகுந்த இராணுவம் இன்று தமிழ்ப் பகுதிகளை முற்றுகையிட்டு எங்கும் வியாபித்து நிற்கிறது. மக்கள் தமது சொந்தக் காரியங்களைக் கூட இராணுவத்துக்கு அறிவிக்காமல் செய்யமுடியாத இக்கட்டு நிலையே தொடர்கிறது.

போர் முடிவுற்று மூன்று வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர அனுமதிப்பதற்கு என்ன தடை இருக்கிறது? இந்தக் கோரிக்கையை முன்னிறுத்தி ஆர்ப்பாட்டம் செய்ய எத்தனித்த மக்களுக்கு அந்த உரிமை கூட வழங்கப்படவில்லை. கோயில் முன்றிலில் ஆயுதம் ஏதுமின்றி அமைதியாக ஆண்களும் பெண்களும் சிறுவர்களுமாக ஒன்றுகூடி, அரசின் அசமந்தப் போக்கை திசை திருப்பி தமது பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி கோரமுற்பட்டவர்களைக் கலைப்பதற்கு ஆயுதங்களுடனும், கண்ணீர் புகைக்குண்டுகளுடனும் குண்டாந்தடிகளுடனும் ஏதோ குழப்பம் விளைவிப்பவர்களை அடக்குவதற்குப் போன்று பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தமை கவலையளிப்பதாகும். பொலிஸாரின் இந்த நடவடிக்கை தமது சொந்த இடத்தைக் கோரிக் குரல் எழுப்புவதற்கும்கூட தமிழ் மக்களுக்கு உரிமையில்லை என்பதையே காட்டுகிறது.

பொலிஸார் மேலிடத்தின் கட்டளையின்படி நடப்பவர்கள். ஆனால் அவர்கள் சாத்விகப் போராட்டத்துக்கு வந்தவர்களுடன் நடந்துகொண்டவிதம் கண்டிக்கத்தக்கது. மீள்குடியேற்றத்தைக் கேட்டு வந்தவர்களை ஏதோ வன்முறையாளர்களை அடக்குவது போன்று பொலிஸாரின் நடவடிக்கை அமைந்திருந்தது.

அவை ஒரு புறமிருக்க, வாழ்வுரிமைப் போராட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு திரும்பிக்கொண்டிருந்தவர்களை வழியில் தாக்கியவர்கள் யார்- அவர்களுக்குக் கழிவெண்ணெய் கொடுத்து அனுப்பி வைத்தவர்கள் யார்?

இந்தச் சூத்திரதாரிகளை- அடிவருடிகளை பொலிஸார் கண்டறிந்து சட்டத்தின் முன் கொண்டுவந்து நிறுத்துவார்களா? இவை தான் மக்கள் மனங்களில் இன்று எழுந்து நிற்கும் கேள்விகள்.

# கணினிப் பட்டதாரி ஆசிரியர் 29 பேருக்கு வடக்கில் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

கணினிப் பட்டதாரிகள் ஆயிரம் பேருக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது. இதில் வடமாகாணத்துக்குச் சுமார் 70 கணினிப் பட்டதாரிகள் நியமனம் செய்யப்படவுள்ளனர் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

**நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது**

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நேற்று முற்பகல் நடைபெற்ற பாடசாலைகளுக்கு தொலைக்காட்சி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கே கணினிப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர். வடமாகாணத்தில் சுமார் 70 பட்டதாரிகள் நியமனம் செய்யப்படுகின்றனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வடமாகாணத்தில் 100 பாடசாலைகளுக்கு தொலைக்காட்சி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி கடந்த வருடம் 25 பாடசாலைகளுக்கு ஒவ்வொரு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. 20 பாடசாலைகளுக்கு 22 அங்குல தொலைக்காட்சிகள் தலா ஒவ்வொன்றாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உட்பட வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பலர் கலந்துகொண்டனர். (ம-4)

## காணிகள் சுவீகரிப்புக்கு எதிராகத் தீர்மானம்

தென்மராட்சிப் பகுதியிலுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு எதிராக சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதியிலுள்ள அரச மற்றும் தனியார் காணிகள் 300 ஏக்கர்களை இராணுவம் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவது அம்பலமாகியுள்ளதை அடுத்து அப்பகுதி மக்கள் அதிர்ச்சியும் கவலையுமடைந்துள்ளனர்.

இந்த நடவடிக்கைக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். கடந்த கால போர் முடிவுற்று சமாதான காலம் நிலவும் இந்த வேளையில் இராணுவத்தினரால் காணிகள் சுவீகரிக்கப்படுவது மக்கள் மத்தியில் அச்ச நிலையையே தோற்றுவித்துள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக கடந்த 13 ஆம் திகதி புதன்கிழமை பிரதேச சபை மண்டபத்தில் சபையின் தலைவர் எஸ். துரைராஜா தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத் தீர்மானம் தொடர்பாக யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத்தளபதி மஹிந்த ஹத்துருசிங்கவுக்கும் சாவகச்சேரி பிரதேச செயலருக்கும் மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-16-131)

## நிரந்தர வருமானம் அற்றோருக்கு மூன்றாம் கட்ட வீட்டுக் கடன்

யாழ்ப்பாணம், ஜூன் 21

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீட்டுத் திட்டக் கடனில் நிரந்தர வருமானம் அற்றோருக்கு கடன் வழங்கும் திட்டத்தில் 3 ஆம் கட்டத்துக்கு தெரிவானவர்களுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிரந்தர வருமானம் அற்ற வீட்டுத் திட்டக் கடன் 3 ஆம் கட்டத்தில் 95 பேருக்கு வழங்கப்படவுள்ளது. இதற்காக 10.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 95 பேரில் 10 புதிய வீட்டுக்கான கடனும், 85 தரம் உயர்த்தலுக்கான கடனும் வழங்கப்படவுள்ளன.

நிரந்தர வருமானம் அற்றோருக்கு முதலாம் கட்டமாக 245 பேருக்கு 23.2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இதில் 28 புதிய வீட்டுக் கடனும், 180 தரம் உயர்த்தல் வீட்டுக் கடனும் வழங்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக ஒரு கிராமத்துக்கு ஒரு வீடு எனும் அடிப்படையில் 37 பேருக்கு புதிய வீட்டுத்திட்டக் கடனுக்கு 7.4 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.

இவற்றில் புதிய வீட்டுக் கடன் 2 லட்சம் ரூபாவும் தரம் உயர்த்தலுக்கு ஒரு லட்சம் ரூபா வரையிலும் வழங்கப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

# சமய, சமூகத் தொண்டர்கள் தென்மராட்சியில் கௌரவிப்பு

தென்மராட்சி, ஜூன் 21

தென்மராட்சிப் பிரதேசத்தில் சமய மற்றும் சமூக நல தொண்டாற்றுவோர் கௌரவிப்பும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்குச் சேமிப்பு புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கலும் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள சமய நிகழ்வுக்கு தென்மராட்சி திவ்வியஜீவன சங்கத் தலைவர் க.சி.ஆறுமுகம் தலைமை வகிக்கவுள்ளார்.

நிகழ்வில் மருத்துவர் ச.அம்பிகைபாகன், ஆலய தொண்டர்களான ம.கந்தையா, வீ.இராமலிங்கம், சுப்பிரமணிய சுவாமிகள், ஓதுவார் திருமதி க.திலகவதி ஆகியோருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார். அத்துடன் பிரதேசத்தில் வறுமை நிலையில் உள்ள 21 மாணவர்களின் பெயரில் வைப்பிடப்பட்ட வங்கிப் புத்தகம் மற்றும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

நல்லை ஆதீன நல்லைக் குருமணி சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சிவப்பிரம்மஸ்ரீ க.பரராசசேகரக் குருக்கள், இளைப்பாறிய நீதிபதி மு.திருநாவுக்கரசு, சாவகச்சேரி நகரசபை செயலாளர் சு.புத்திசிகாமணி ஆகியோர் உரையாற்றுவர்.

சமூக நிகழ்வு சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திருமதி த.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய பங்குத்தந்தை அருட்பணி யோ.பிரான்சிஸ் அடிகள், சாவகச்சேரி நகராட்சி மன்றத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ.இராஜாராம், தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக அலுவலர் க.கார்த்திகேசு, சாவகச்சேரிகைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்வர். (ம-9)

# மொழி புரியாமல் திணறும் முதியோர்

தென்மராட்சி, ஜூன் 21

புரியாத மொழியில் படிவம் வருவதால் மொழி புரியாமல் அதனைப் பூர்த்தி செய்ய முதியோர் அலைந்து திரிகின்றனர்.

70 வயதுக்கு மேற்பட்ட பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர், சமுர்த்தியாளர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஜூன் மாதம் தொடக்கம் வழங்கப்படும் என்று அரசினால் கடந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் முதியோர்களுக்கு பணம் வழங்குவதற்கான தேசிய சேமிப்பு வங்கியின் விண்ணப்பப் படிவங்கள் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டன.

சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சிடப்பட்ட, வங்கியில் கணக்கு ஆரம்பிப்பதற்கான படிவங்கள் 70வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு பிரதேச செயலகத்தால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் படிவங்களைப் பூர்த்தி செய்ய முதியோர்கள் அலைய வேண்டியுள்ளது.

சில படிவங்களில் கையெழுத்துக்குப் பதிலான இடது கைப்பெருவிரல் அடையாளம் பதிக்கப்பட்டுள்ளன. இதற்கான படிவங்கள் கொழும்பிலிருந்து யாழ்.செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள மக்களுக்கும் ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென தெரிந்திருந்தும் தேசிய சேமிப்பு வங்கி தமிழ் மொழியிலான படிவங்கள் வழங்காமல் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சிடப்பட்ட படிவங்களை அனுப்பி வைத்திருப்பது குறித்து முதியோர்கள் கவலை தெரிவித்தனர். (ம-9)

# கவனயீர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர் வவுனியா சுத்திகரிப்புத் தொழிலாளர்கள்

## பல்வேறு கோரிக்கைகளையும் வலியுறுத்தினர்


நெளுக்குளம், ஜூன் 21

வவுனியா நகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளை முன் வைத்துக் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை நேற்று நடத்தியுள்ளனர்.

தமது அடிப்படைக் கோரிக்கைகள் தொடர்பாகக் கடந்த மாதம் 11 ஆம் திகதியும் இந்த மாதம் 6 ஆம் திகதியும் வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதங்கள் அனுப்பி வைத்ததாகவும் ஆனால் சாதகமான பதில் எதுவும் கிடைக்காததால் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்தனர்.

மேலும் அவர்கள் தெரிவித்ததாவது:-

வவுனியா நகரசபையில் கடமையாற்றும் சுகாதார தொழிலாளர்களாகிய நாம் நீண்டகாலமாக அதிகாரப் புறக்கணிப்புக்கு மத்தியிலும் இடர்பாடுகளுக்கு மத்தியிலும் பல்வேறு பாதிப்புடன் கடமை புரிந்து வருகிறோம். இது தொடர்பாக சில வருடங்களாகச் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அறியத்தந்த போதிலும் ஏமாற்றம் அடைந்து துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்று தெரிவித்தனர்.



காலை 6 மணிக்கு இவர்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். சுகாதாரதொழிலாளர்கள் தமது சுகாதார பணிகளைப் புறக்கணித்து பல்வேறு சுலோகங்களைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் கீழ்வரும் கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் தமது போராட்டத்தை நடத்தினர்.

ஓய்வு பெற்ற சுத்திகரிப்பு ஊழியர்களின் வெற்றிடங்களுக்கு தற்காலிகமாகப் பணிபுரிவோருக்கு நியமனம் வழங்குங்கள், சுகாதார தொழிலாளர்களாகக் கடமையாற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றவர்களுக்கு சாரதி நியமனம் வழங்குங்கள், சுகாதாரப் பாதுகாப்பு கவசம் வழங்குங்கள், சுகாதாரத் தொழிலாளர்கள் ஆண், பெண் இருபிரிவினருக்கும் மலசலகூட தண்ணீர்த் தொட்டி, ஓய்வு அறைகள் அமைத்து வழங்கவும், பெண் தொழிலாளர்களைத் துன்புறுத்தல் நிறுத்தப்படல் வேண்டும், ஊழியர்களுக்கு விடுதி வசதி பெற்றுக்கொடுங்கள், உதவி மேற்பார்வையாளர் பதவி நிரந்தரமாக்கப்படவேண்டும், அமைய அடிப்படையில் சுத்திகரிப்பாளர் நியமனம் வழங்கப்படல் வேண்டும், சுகாதார பாதுகாப்பு கவசங்கள் அற்ற நிலையில் கால்வாய் சுத்திகரிப்பின் போது கால்களில் நோய்கள், புண்கள் என்பன ஏற்பட்டுள்ளன. தொழிலாளர்களின் பாதுகாப்புக் கருதி பூட்ஸ் கையுறை, முகவுறை என்பன வழங்கப்பட வேண்டும்.

(க-402-400)

# வவுனியாவில் மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகள்

## நடமாடும் சேவை மூலம் நடவடிக்கை

நெளுக்குளம், ஜூன் 21

வவுனியாவிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகள் வழங்கும் நடவடிக்கையில் ஆள்பதிவுத் திணைக்களத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம், இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, தமிழ் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு இவர்கள் வருகை தந்து அடையாள அட்டையை வழங்குவதற்கான நடமாடும் சேவையை மேற்கொண்டிருந்தனர். இந்தப் பாடசாலைக்கு அருகில் உள்ள பாடசாலைகளான கூமாங்குளம் பாடசாலை, அரபாநகர் பாடசாலை, விபுலானந்தாக் கல்லூரி, சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் இந்த நடமாடும் சேவையால் பயன்பெற்றுள்ளனர்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அற்றவர்கள் தவிர்ந்த ஏனையோருக்குக் குறுகிய காலத்தினுள் அடையாள அட்டையைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஆள்பதிவுத் திணைக்களத்தினர் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அற்றவர்கள் உடனடியாகச் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் ஆகியவற்றை நாடுமாறும் இவர்கள் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

க.பொ.த.சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் பரீட்சையின் போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முன்னோடியாக இந்த நடவடிக்கையை ஆள்பதிவுத் திணைக்களத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

தொடர்ந்தும் இந்த நடமாடும் சேவை போர் இடர்களால் பாதிக்கப்பட்ட வன்னிப் பிரதேசத்திலும் அதனை அண்மித்த பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு உதவியாக அந்தந்த பாடசாலை மாணவர்களின் ஆசிரியர்களைத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் நடமாடும் சேவையின் போது மாணவர்களின் தரவுகளைச் சீரான முறையில் வழங்குவதற்கு தம்முடம் இணைந்து பணியாற்றுமாறும், மாணவர்களை உரிய முறையில் வழிப்படுத்துமாறும் ஆள்பதிவுத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (க-402)

### அனைத்து மக்களுக்கும் பொதுவான மொழி இசை மட்டும்தான்

இந்த உலகத்திலே அனைத்து மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய பொதுவான மொழி உண்டென்றால் அது இசையாகத்தான் இருக்கும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் தமிழ்நேசன் அடிகளார். மன்னார் கலையருவி நிறுவனத்தில் இடம்பெற்ற 'வானவில்' இசைக் குழுவின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த மன்னார் வானவில் இசைக்குழு கடந்த 10 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் மன்னார் மறைமாவட்டச் சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. மன்னார் மாவட்டத்திலுள்ள பாடகர்கள், வாத்தியக் கலைஞர்கள், இசையமைப்பாளர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து இந்த இசைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதன் போசகராகத் தமிழ்நேசன் அடிகளாரும், தலைவராக ஜே.ஆர்.மயூரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(க-12)

# நாகதம்பிரான் பொங்கல் விழாவில் பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள்

வவுனியா, ஜூன் 21

வவுனியா, புளியங்குளம் புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழாவில் பல ஆயிரக்கணக்கான மக்கள் பக்தி சிரத்தையுடன் கலந்து கொண்டனர்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பொங்கல் விழாவில் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் மக்கள் பெரும் திரளாக வந்திருந்தனர்.

செதில் காவடிகள், பால் செம்புகள், கற்பூரச் சட்டிகள் என்பவற்றை ஏந்திய அடியார்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். தீமிதிப்பு நிகழ்வுகளும் இங்கு இடம்பெற்றன.

பொங்கல் தினத்தன்று மாலை 5மணியளவில் விசேட வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து பண்டமெடுக்கப்பட்ட பின்னர் எம்பெருமான் அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பரத்தில் வெளி வீதிவலம் வந்து அடியவர்களுக்கு அருட் காட்சி வழங்கினார்.

ஆலயச் சூழலில் மக்கள் வெள்ளம் போன்று அலை மோதினர். அர்ச்சனை மேற்கொள்வதற்கும், நாகதம்பிரானின் தோஷம் நீங்குவதற்கான காப்புக்கட்டுவதற்கும் மக்கள் நீண்ட வரிசையில் பலமணி நேரம் காத்திருந்தனர்.

அதிகாலை வேளையில் ஆலயத்துக்கு வழங்கப்பட்ட ஆடு, மாடு, கோழி என்பன ஏலத்தில் விடப்பட்டன. அதிகாலை 3 மணியளவில் விசேட பொங்கல் பூசைகள் இடம்பெற்றன.

ஆலயத்தில் சன நெரிசலைக் கட்டுப்படுத்துவதிலும், போக்குவரத்து ஒழுங்குகள் மற்றும் களவுகளைக் கட்டுப்படுத்துவதிலும் பொலிஸாரும், சாரணியர்களும் ஈடுபட்டிருந்ததைக் காண முடிந்தது. ( க-400)

# நேர்முகத் தேர்வில்369 பட்டதாரிகள்

வவுனியா,ஜூன் 21

வவுனியாச்செயலகத்தில் இடம்பெற்ற பட்டதாரிப் பயிலுநர்களை நியமிப்பதற்கான நேர்முகத்தேர்வில் சுமார் 369 பட்டதாரிகள் தோற்றியுள்ளனர்.

பட்டதாரிகளைப் பயிலுநர்களாக இணைத்துக் கொள்வதற்கான நேர்முகத்தேர்வுகள் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக வவுனியா மாவட்டப் பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு நேற்றுமுன்தினம் வவுனியாச் செயலகத்தில் இடம்பெற்றது. அழைக்கப்பட்டவர்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையோருக்கு நேர்முகத் தேர்வுகள் இடம்பெற்றன.

இதேவேளை நேர்முகத் தேர்வுக்கான கடிதங்கள் கிடைக்காதவர்கள் தமது விண்ணப்பப்படிவத்தின் பிரதியுடன் நேர்முகத்தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஒரே நாளில் மூன்று பிரிவுகளாக இந்த நேர்முகத் தேர்வுக்குத் தோற்றிய பட்டதாரிகளின் விவரங்கள் பட்டியலிடப்பட்டு உரிய அமைச்சர்களுக்கு அனுப்புவதற்கான பணிகள் இடம்பெற்று வருவதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (க.400)



*மல்லாவி நகரின் உள்வீதியொன்றைப் புனரமைக்கும் பொருட்டுக் கிரவல் மண் குவிக்கப்பட்ட நிலையில் காணப்படுகிள்றது. (415)*

# நெற் பயிர்களை அழிக்கும் கட்டாக்காலி கால்நடைகள்

அக்கராயன், ஜூன் 21

கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளம் கிராமத்தில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகள் சிறுபோக நெற் பயிர்களுக்கு பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு கமக்கார அமைப்புக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த அமைப்புக்கள் தமது பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றாமையால் தான் இத்தகைய அழிவுகள் ஏற்பட்டு வருகின்றன என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வன்னேரிக்குளத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்ட நிலப்பரப்பைவிட அதிகளவு வயல் காணிகளில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. இதனால் நீர் முகாமைத்துவத்தில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

கமக்கார அமைப்புக்கள் தமது பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றினால் மட்டுமேதாம் பாதிப்புக்களிலிருந்து விடுபடமுடியுமென வன்னேரிக்குளம் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

(க-18)

# கிளிநொச்சி ஆசிரியர், மாணவருக்கு போக்குவரத்து நெருக்கடிகள்

கிளிநொச்சி, ஜூன் 21

கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் சில பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்களும், மாணவர்களும் போக்குவரத்தில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். கண்டாவளைக் கல்விக் கோட்டத்திலுள்ள கல்லாறு, மயில்வாகனபுரம், பிரமந்தனாறு ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று வருவதில் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பூநகரிக் கல்விக் கோட்டத்திலுள்ள பூநகரி மகா வித்தியாலயம், முழங்காவில் மகா வித்தியாலயம் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளிலும் போக்குவரத்துப் பிரச்சினை காணப்படுகின்றது.

பாடசாலைகளுக்குச் சென்று வருவதில் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

அத்துடன் அக்கராயன் மகாவித்தியாலயம் மற்றும் அதனை அண்டிய பாடசாலைகளிலும் இதே நிலைமைதான். இறுதியாக இடம்பெற்ற கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்தப் போக்குவரத்து நெருக்கடிகள் தொடர்பாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க-18)

# கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவு

கிளிநொச்சி ஜூன் 21

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் பொதுமக்கள் தொடர்பாடல் அலுவலகமும் கருத்தரங்கு மண்டபமும் கடந்த திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட பொதுமக்கள் தொடர்பாடல் பொலிஸ் பொறுப்பதிகாரி எம். எல்ஆரிப்டீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி காமினி சில்வா, யுனிசெவ் பிரதிநிதி றோளன் கென்றீசன் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்.டி.நீல் தளுவத்த, கிளிநொச்சி பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரி எட்மன் மகேந்திரா, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் 57 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி ரேணுக நொபல் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

கருத்தரங்கு மண்டபத்தினை யுனிசெவ் பிரதிநிதி றோளன் கென்றீசன் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். தொடர்ந்து பொதுமக்கள் தொடர்பாடல் அலுவலகத்தினை வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி காமினி சில்வா திறந்துவைத்தார். நிகழ்வில் பொதுமக்கள், மாணவர்கள் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (க.6)

# தடையை மீறும் ஓட்டோக்கள்

## மன்னாரில் பெண்களுக்கு நாளாந்தம் தொல்லை

மன்னாரில் அமைந்துள்ள தனியார் பஸ் தரிப்பிடப் பகுதியில் தடையையும் மீறி உட்பிரவேசிக்கும் ஓட்டோ வண்டிகளால் பல்வேறு பிரச்சினைகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார், ஜூன் 21

அண்மைக்காலமாக மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்தில் பயணிகளுக்கு அசௌகரியங்களைச் சிலர் ஏற்படுத்தி வருகின்றமையினைக் கருத்தில் கொண்டு மன்னார் தனியார் பஸ் சங்கத்தினர் மன்னார் நகர சபையின் உதவியுடன் ஏனைய வாகனங்கள் பஸ் தரிப்பிடத்தினுள் செல்வதற்குத் தடை விதித்திருந்தனர். இந்த நிலையில் அண்மைக்காலமாக ஒரு சில ஓட்டோக்களில் வருபவர்கள் பலவந்தமாகத் தனியார் பஸ் தரிப்பிடத்தினுள் நுழைந்து பல்வேறு பிரச்சினைகளில் ஈடுபடுகின்றனர்.

சில ஓட்டோக்கள் இலக்கத் தகடு இன்றி வருவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. அவை மன்னார் ஓட்டோச் சங்கத்தில் பதியப்படவில்லை எனவும் தெரிய வருகின்றது.

குறித்த ஓட்டோக்களில் மன்னார் தனியார் பஸ் தரிப் படத்தினுள் வருபவர்கள் அங்கு நிற்கும் பெண்களை கேலி செய்வதோடு இளம் யுவதிகளுடன் நாகரிகமற்ற வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடுவதாகவும் தெரிய வந்துள்ளது.

கைக்குழந்தையுடன் நிற்கும் தாய்மாரைக்கூட அவர்கள் விட்டு வைப்பதில்லை. சில சந்தர்ப்பத்தில் தனிமையாக நிற்கும் யுவதிகளுடன் கதைத்து அவர்களுடைய கைத் தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளுகின்றனர்.

இவர்களுடைய அநாகரிகமான செயற்பாட்டினால் அந்த இடத்தில் மக்கள் சேவையில் ஈடுபட்டு வரும் ஏனைய ஓட்டோ சாரதிகளுக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு மன்னார் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(க-12)

# நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையை தரமுயர்த்த முதலமைச்சர் இணக்கம்

நிந்தவூர், ஜூன்21

நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையை சகல வசதிகளும் கொண்ட மாகாண தள வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதற்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் ஏற்பாட்டில் நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினருடனான சந்திப்பின் போதே முதலமைச்சர் இந்த இணக்கப்பாட்டை வெளியிட்டார்.

இச்சந்திப்பின்போது வைத்தியசாலையில் நிலவி வரும் குறைபாடுகள் தொடர்பாகவும் அவசர தேவைகள் தொடர்பாகவும் முதலமைச்சருக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டன. அத்துடன், இந்த மாவட்ட வைத்தியசாலையை மாகாண தள வைத்தியசாலையாகத் தரமுயர்த்தித் தரவேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட முதலமைச்சர் அதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

இதேவேளை, இந்த வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பிரிவை இப்பிராந்திய மக்களுக்குப் பயன் மிக்கதாக மாற்றியமைக்கும் மகப்பேற்று நிபுணர் ஒருவரை நியமித்து உதவுமாறும், வைத்தியசாலையில் நிலவும் சிற்றூழியர்கள் உட்பட ஆளணிப்பற்றாக் குறையையும் நிவர்த்திசெய்து தருமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளையும் முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

இந்த வைத்தியசாலையில் நிலவும் ஆளணி மற்றும் வைத்தியர்களின் குறைபாட்டால் பெறுமதிவாய்ந்த கருவிகள் கூடப் பயன்படுத்தப்படாமல் உள்ளன என அபிவிருத்திக் குழுவினர் கவலையுடன் எடுத்துக் கூறினர்.

இதனை ஏற்றுக் கொண்ட முதலமைச்சர், தன்னுடைய பதவிக்காலத்தில் முடியுமான உதவிகளை இவ் வைத்தியசாலைக்குச் செய்து தருவதுடன் சகல வசதிகளும் கொண்ட மாகாண தள வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளும் உடனடியாக எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ச)

## அம்பாறை மாவட்டத்தில்

# பிரதேச செயலர் பிரிவுகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

### தற்போதுள்ள 503 கிராம சேவையாளர் பிரிவுகளும், 550 பிரிவுகளாக விஸ்தரிக்கப்படவிருக்கின்றன.

அம்பாறை,ஜூன்21

அம்பாறை மாவட்ட மக்கள் தங்களுக்கான அரச வேலைகளைத் துரிதமாகச் செய்துகொள்வதற்காக செயலாளர் பிரிவுகளையும், கிராம சேவையாளர் பிரிவுகளையும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது மாவட்டத்தில் 20 பிரதேச செயலாளர் பிரிவுகள் செயற்பட்டு வருகின்றன. வரலாற்றுப் புகழ்பெற்ற பிரதேசமான தீகவாபியிலும், சங்கமான் கண்டியிலும் பிரதேச செயலாளர் பிரிவுகளை ஆரம்பிப்பதற்கான தரவுகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது 503 கிராம சேவையாளர் பிரிவுகளும், 550 பிரிவுகளாக விஸ்தரிக்கப்படவிருக்கின்றன. 4.415 சதுர கிலோமீற்றர் பரப்புள்ள பிரதேசத்தில் 710 கிராமங்கள் இருக்கின்றன. இந்தப் பிரதேசம் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள் ஆகியோர் அதிகமாக வாழும் மாவட்டம். இங்குள்ள மக்கள் விவசாயம், மீன்பிடி, கைத்தொழில்கள், மந்தை வளர்ப்பு ஆகிய துறைகளில் ஈடுபட்டு ஜீவனோபாயத்தைக் கழித்து வருகிறார்கள்.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் கிழக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகளுக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளும், கிராமசேவையாளர் பிரிவுகளும் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் ஆலோசனைகளுக்கு அமைவாகவே உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு இதனை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# முன்பள்ளி ஆசிரியருக்கு கருத்தரங்கு

கல்முனை, ஜூன் 21

கல்முனை கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இலவச பயிற்சிக் கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை சாய்ந்தமருதில் அமைந்துள்ள கொம்டெக் உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெற்றது.

கொம்டெக் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எம். ஜெமீலின் அனுசரணையுடன் முழுநாள் செயலமர்வாக இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் நூற்றுக்கு மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இந்தக் கருத்தரங்கில் வளவாளர்களாகக் கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கினர். (ச)

# தாய், சேய் சிகிச்சை

வவுனியா, ஜூன் 21

வவுனியாசுகாதாரவைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இன்று வியாழக் கிழமை முதல் ஒருவார காலத்திற்கு இடம்பெறும் தாய், சேய் நலச் சிகிச்சை தொடர்பான விவரங்களை வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் அறிவித்துள்ளனர்.

அந்தவகையில் இன்று வியாழக்கிழமை பண்டாரிக் குளம் தாய்,சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம் நெளுங்குளம் தாய், சேய் குடும்பத்திட்ட சிகிச்சை நிலையம், மகாறம்பைக்குளம் கர்ப்பவதிகளுக்கான சிகிச்சை நிலையங்களும்,

நாளை மறுதினம் சனிக் கிழமை சுகாதார வைத்திய அதிகாரி நிலையத்திலுள்ள தாய், சேய் குடும்பத்திட்டச் சிகிச்சை நிலையமும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை சாந்த சோலை தாய், சேய் குடும்பத்திட்டச் சிகிச்சை நிலையமும்,

26ஆம் திகதி பூந்தோட்டம் தாய், சேய் குடும்பத்திட்டச் சிகிச்சை நிலையமும், 27ஆம் திகதி மகாறம்பைக் குளம் கர்ப்பவதிகளுக்கான சிகிச்சை நிலையமும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலுள்ள சுகவனிதையர் சிகிச்சை நிலையங்களும்,

28ஆம் திகதி வியாழக் கிழமை சேமமடு தாய், சேய் குடும்பத்திட்டச் சிகிச்சை நிலையம், ஈச்சங்குளம் கர்ப்பவதிகளுக்கான சிகிச்சை நிலையம் என்பவற்றிலும் தாய், சேய் நலச் சிகிச்சை இடம் பெறவுள்ளது. (க-400)

# சாரணர் வேலை வாரம்

கிளிநொச்சி ஜூன் 21

கிளிநொச்சியில் சாரணர் வேலை வாரம் இடம்பெறவுள்ளது. நாளை மறுதினம் 23 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை இந்தச் சாரணர் வேலை வாரம் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கான வேலை வார அட்டைகள் நாளைய தினம் கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் வைத்து மாவட்டச் சாரணர் ஆணையாளரால் வழங்கப்படவுள்ளன. சாரணர் குழுக்களைக் கொண்ட பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்கள் இவற்றைப் பெற்றுச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர். (க-405)

# மல்லாவியில் ஒன்றுகூடல் நிகழ்வு

அக்கராயன், ஜூன் 21

மல்லாவி மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

இன்று முற்பகல் 9.30 மணியளவில் ஆரம்பமாகும் இந்த நிகழ்வுக்கு உயர்தர மாணவர் மன்றத் தலைவர் அமிர்தலிங்கம் கஜன்தலைமை வகிக்கவுள்ளார். முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்வார். (க-18)



கட்டப்பட்டு பல நாள்கள் ஆகியும் திறப்பார் எவருமின்றி மூடியபடியே கிடக்கும் முசலிப் பிரதேச சந்தைக் கட்டடத் தொகுதி. (12)

# மிரட்டும் படைப் புலனாய்வுத்துறை

கிளிநொச்சி, ஜூன் 21

கிளிநொச்சி கோரக்கன் கட்டுப் பகுதியில் உழவு இயந்திர உரிமையாளர்கள் பலரை இராணுவப் புலனாய்வாளர்கள் அச்சுறுத்தும் தொனியில் விசாரித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப் படுகின்றது.

அண்மையில் கண்டாவளைப் பகுதியில் வீட்டுத் தேவைக்கு மணல் ஏற்றிய மூன்று உழவு இயந்திர உரிமையாளர்களும், அவர்களது உதவியாளர்களும் இராணுவத்தினர் சிலரால் பணம் கேட்டுத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பத்திரிகையில் வெளிவந்த செய்தியைத் தொடர்ந்தே இராணுவப் புலனாய்வாளர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த செய்தியை பத்திரிகைக்கு வழங்கியது யார் என்றும் இவர்கள் விசாரித்துள்ளனர்.

(க-6)

# கடும் காற்றினால் புழுதி: மெனிக்பாம் மக்கள் அவதி

வவுனியா ஜூன் 21

அண்மைக் காலமாக வீசி வரும்கடும்காற்றினால்மெனிக்பாம் நலன்புரி முகாம் மக்களும் பாடசாலைச் சமூகமும் புழுதியால் அவலப்படுகின்றனர்.

கடந்த சில நாள்களாக கடுமையாக வீசும் காற்றினால் அந்தப் பகுதி எங்கும் புழுதிப் படலமாக காட்சி தருகின்றது. இதனால் பாடசாலையில் சீரான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியாதுள்ளது. இதனால் பாடசாலையை நேரத்துடன் மூட வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காற்றுக்கு மத்தியில் இருந்து கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் ஆசிரியர்களும், கற்றல் செயற்பாட்டில் ஈடுபடும் மாணவர்களும் புழுதியில் இருந்து பாதுகாப்பதற்காக தமது முகத்தை கைக்குட்டை, சேலை மற்றும் புத்தகங்களாலும் மூடிக்கொண்டே தமது நாளாந்தக் கடமைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

அத்துடன் தற்போது வீசும் கடும் காற்றினால் பாடசாலைக் கூரைகள் சேதமடைந்து வருவதுடன் தற்காலிக கொட்டகைகளின் கூரைத்தகடுகளும் கழன்று காற்றில் பறந்துவிடுகின்றன.

இதனால் எதிர்வரும் பருவமழைக்கு தாம் பெரும் நெருக்கடியைச் சந்திக்கும் சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதாக முகாமில் வசிக்கும் பொதுமக்களும், ஆசிரியர் சமூகத்தினரும் தெரிவிக்கின்றனர். (க-400)

## விற்பனைக்கு

குளிர்சாதனப்பெட்டி சிறிது, பெரிது (டிபிறிஜ்) மற்றும் பாவித்த ரீ.விகள் மிகவும் மலிவான விலையில் விற்பனைக்குண்டு. தொ.பே. 0776138978
(19615)(14.34)

## பணிப்பெண் தேவை

குழந்தை பராமரிப்புக்கு ஆள் தேவை. அளவெட்டி பகுதியில் உள்ள வீட்டுக்கு குழந்தை பராமரிப்பதற்கு ஆள் தேவை. 45 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு - 0778209447
(சி-930)(14.34)


# வடகிழக்கில் 304 பாடசாலைகளில் 50க்கு குறைவான மாணவர்கள்

கொழும்பு, ஜூன் 21

இலங்கையில் உள்ள அரச பாடசாலைகளில் 50 மாணவர்களை விடவும் குறைவான மாணவர்களைக் கொண்ட ஆயிரத்து 552 பாடசாலைகள் இருக்கின்றன என்றும், அவற்றில் வடக்கு, கிழக்கில் மாத்திரம் 304 பாடசாலைகள் உள்ளன என்றும் கல்வியமைச்சு நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தது.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க ''இலங்கையில் உள்ள அரச பாடசாலைகளில் 50 மாணவர்களை விடக் குறைவாக உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனை? இப்பாடசாலைகளின் எண்ணிக்கை மாகாணங்களின் பிரகாரம் தனித்தனியாக எத்தனை ஆகிய கேள்விகளை கல்வி அமைச்சரிடம் கேட்டிருந்தார்.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது திஸ்ஸ எம்.பியின் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டிய தருணத்தில் கல்வியமைச்சர் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

இதனால், இந்தக் கேள்விகளுக்கான பதிலைப் பிரதிக்கல்வியமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஸா சபையில் ஆற்றுப் படுத்தினார். அந்தப் பதிலில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

நாடளாவிய ரீதியில் இருக்கின்ற பாடசாலைகளில் 50 மாணவர்களை விடவும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் ஆயிரத்து 552 இருக்கின்றன.

மேல்மாகாணத்தில் 93 பாடசாலைகளும், மத்திய மாகாணத்தில் 242 பாடசாலைகளும், தென் மாகாணத்தில் 56 பாடசாலைகளும், வடக்கில் 189 பாடசாலைகளும், கிழக்கில் 115 பாடசாலைகளும் இருக்கின்றன.

அத்துடன், வடமத்திய மாகாணத்தில் 170 பாடசாலைகளும், ஊவா மாகாணத்தில் 157 பாடசாலைகளும், சப்ரகமுவ மாகாணத்தில் 258 பாடசாலைகளும் இருக்கின்றன எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.


## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTH DAY

சசிதரன் சைலஜா தம்பதியரின் செல்வப்புதல்வி

**கவீனா**



தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அன்ரா மாமாமார், அத்தைமார், அக்காமார், அண்ணன்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், அனைவரும் வண்ணை வீரமாகாளியம்மன் அருளால், பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

சரவணை கிழக்கு, வேலணை.

திரு.திருமதி சசிதரன் சைலஜா

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திதி: பூர்வபக்க துதியை

சுழிபுரம் கிழக்கைப்பிறப்பிடமாகவும், சுன்னாகம் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் சரவணமுத்து நடேசபாத இருதயன்**

அப்பா ........

ஈரொன்று ஆண்டுகள் கடந்தும்,
ஈரவிழிகளுடன், உங்கள் ஆத்மா
ஈடேற்றத்துக்காய்
ஈசனடி வேண்டுகின்றோம்.

முத்துக்கிருஸ்ணர் வீதி,
சுன்னாகம்.
(19611) (15-14) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



**ஸ்ரீ முருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகள்**

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மயூரா தச்சு, இரும்புத் தொழிலகம்,
திருணா அரிவு ஆலை,
மானிப்பாய். (19614)(14.34)


## தோஷம் நீக்கும் மரங்கள்

தென்மராட்சி, ஜூன் 21

35 வருடங்களின் பின்னர் திறக்கப்பட்டு திருவிழா நடைபெறும் ஆலய வளாகத்தில் தோஷங்கள் நீக்கும் ஆல், அரசு, வேம்பு ஆகிய மூன்று மரங்களும் ஒன்றிணைந்து வளர்ந்துள்ள அதிசயம் வரணியில் இடம்பெற்றுள்ளது.

வரணி வடக்கு சிமிழ் அம்மன் கோயில் 1977 ஆம் ஆண்டு திருவிழாக் காலத்தில் இரண்டு சமூகத்தினருக்கிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக மூடப்பட்டிருந்தது.

அப்பகுதி மக்களின் முயற்சியால் இரு சமூகத்தினரும் இணைந்து இந்த வருடம் திருவிழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வைகாசி விசாகப் பொங்கலுக்கு மறுநாள் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகியது. இந்த நிலையில் ஆலயவளாகத்தில் பற்றையாக காணப்பட்ட பகுதிகளைத் துப்புரவு செய்த போது பற்றைக்குள் தோஷ நிவாரணியான ஆல், அரசு, வேம்பு ஆகிய மரங்கள் ஒன்றிணைந்து ஓரிடத்தில் வளர்ந்திருந்ததைக் கண்டு மக்கள் அதிசயப்பட்டனர்.

தோஷ நிவாரணி மரங்களான மூன்று மரங்களும் ஒன்றிணைந்து வளர்வது அதிசயம் என்பதால் ஆலய வளாகத்தில் காணப்படும் இந்த மரத்தை வழிபட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(ம-9)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலாளராகச் சிறப்பாக சேவையாற்றி வடமாகாண உள்ளூராட்சி, புனர்வாழ்வு, புனரமைப்பு, கூட்டுறவு, கிராம அபிவிருத்தி, கைத்தொழில், சமூகசேவைகள் மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு அமைச்சின் செயலாளராக இன்று பதவி ஏற்கும்

**உயர் திரு இரா. வரதீஸ்வரன்**

இ.நி.சே. (விசேட தரம்) அவர்களை

பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெற்று வாழ்வில் உயர்வடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி பிரதேச செயலாளரும்,
உத்தியோகத்தர்களும், உத்தியோகத்தர்கள்
நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், கரவெட்டி

(சி-928)(15.14)

## மரண அறிவித்தல்கள்

### சிவசம்பு சிவநாயகம்

(சந்தம்புளியடி காரைநகர்)



காரைநகர் சந்தம்புளியடியைப் பிறப்பிடமாகவும், மலேசியா 'சுபாங் ஜெயா'வை வதிவிடமாகவும் கொண்டவரும், மலேசியா இறப்பர், ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரியும், கண்டுபிடிப்பாளரும் ஆன சிவசம்பு சிவநாயகம் நேற்று (20.06.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான, சிவசம்பு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் நடனராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சிவபாதம், சிவராஜா, சிவலிங்கம் மற்றும் சிவநேசன், சிவராமன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கந்தசாமி (R.R.I.) மற்றும் தர்மவதி, மத்மராணி, கனகாம்பிகை, காலஞ்சென்ற ஜெயலட்சுமி மற்றும் மனோன்மணி, குணநாயகம், இராஜநாயகம், (முன்னாள் அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி), இந்திராணி, ஜெயக்குமாரன் (முன்னாள் உபஅதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும், யோகேஸ்வரன், இரஞ்சிதமலர், சிவானந்தன், சிந்தனைச்செல்வி, சிந்தனைச்சோதி, முருகானந்தராஜா, பத்மானந்தராஜா, சிந்தனைச் சக்தி, காலஞ்சென்ற சிவசம்பு (ரவி) மற்றும் சிவகரன், சிவசெல்வி, சிவகலா, காலஞ்சென்ற சிவசீலன் மற்றும் சிவாஜினி, இராஜினிலைமன், இராஜ்மோகன், இராஜ்குமார், Dr. டிலானி, Dr. டினேஷ், டிலக்ஷன் ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.06.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நடனராணி (மனைவி),
சிவனேசன் (சகோதரன்),
சிவராமன் (சகோதரன்)

நேசன் தொலைத்தொடர்பகம்,
புது வீதி, காரைநகர். (19618)(14.34)

### சுப்பிரமணியம் சிவானந்தன்

(தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்க உத்தியோகத்தர்)



கயந்தப்பை வித்தகபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவானந்தன் நேற்று (20.06.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மாணிக்கவேல் மற்றும் இராசமலர் தம்பதியரின் மருமகனும் மனோகரியின் அன்புக் கணவரும் முருகானந்தன் (நோர்வே), கிருஸ்ணானந்தன் (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரனும் திருமதி லோகநாதன் - இந்திராணி தம்பதியரின் பெறாமகனும் சாந்தலெட்சுமி, சிவானி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2012) வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக வித்தகபுரம் குப்பிளாகடவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கயந்தப்பை,
வித்தகபுரம், தெல்லிப்பழை (19617) (15-14)

# மக்களின் இயல்பு வாழ்வை பாதிக்கும் மருதங்கேணி தெற்குத் தவறணை

## நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரச அதிபருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

மருதங்கேணி தெற்குப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணையால் பிரதேச மக்களின் இயல்பு நிலை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. அதனை வேறிடத்துக்கு இடமாற்றம் செய்யுமாறு மருதங்கேணி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ். மாவட்ட அரச அதிபரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மருதங்கேணி தெற்குப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கள்ளுத் தவறணையால் கிராம மக்களின் இயல்பு வாழ்வு பெரிதும் பாதிக்கப்படும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டபோதும் அவற்றைக் கருத்தில் கொள்ளாமல் அதே இடத்தில் புதிய கள்ளுத் தவறணை அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது புதிதாக அமைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணை 40 கிலோ மீற்றர் நீளமான வடமராட்சி கிழக்கின் மையப் பகுதியில் மருதங்கேணி கிராமத்திலும் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனை, வைத்தியசாலை ஆகிய பொது இடங்களுக்கு மத்தியிலும் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கள்ளுத் தவறணை அமைக்கப்பட்டுள்ள வீதி, வாரிவிட்டான் பிரதான வீதியாகும். இந்த வீதியூடாக மருதங்கேணி இ.த.க. பாடசாலை, உடுத்துறை மகா வித்தியாலயம் போன்ற பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் சென்று வருகின்றனர்.

கிராம மக்களின் அமைதியான வாழ்வு படிப்படியாகப் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் குடியிருப்பு, பாடசாலை, ஆலயம், வைத்தியசாலை உட்பட அனைத்துக்கும் பிரதான வீதி இதுவாகும். இந்த நிலையில் குறித்த கள்ளுத் தவறணையை அமைத்திருப்பது அந்தப் பகுதி மக்களை வேதனைப்படுத்தியுள்ளது.

எனவே இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுத்துக் கள்ளுத் தவறணையை இடமாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றுள்ளது. (ம-14)

## பட்டப் பகலில் சுன்னாகத்தில் திருட்டு

வலி வடக்கு, ஜூன் 21

வீட்டார் இல்லாத சந்தர்ப்பத்தில் பட்டப்பகல் வேளையில் வீட்டினுள் நுழைந்த திருடர்கள் சுமார் எட்டு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணம் போன்றவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் உள்ள ஆசிரியர் ஸ்ரீ சிவராதா என்பவரின் வீட்டில் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளர்களான ஆசிரியர்கள் பாடசாலை செல்ல அதனை பார்த்திருந்து திருடர்கள் வீட்டில் நுழைந்து மிகவும் துணிகரமான முறையில் அறைகளை சோதனையிட்டு இந்தத் திருட்டை நடத்தியுள்ளனர்.

பதினெட்டுப் பவுண் நகைகள் மற்றும் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பணம் என்பன இவ்வாறு திருட்டுப் போயுள்ளன என்று சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை முடிவடைந்து வீட்டுக்கு வந்த ஆசிரியர் வீட்டில் அலுமாரிகள் உடைக்கப்பட்டு உடுபுடைவைகள் சிதறப்பட்டிருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

இதனையடுத்து சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து விசேட பொலிஸாரை வரவழைத்து கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

## அச்சுவேலி கைத்தொழில் பேட்டை பங்குதாரர்களுடன் சந்திப்பு

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை பங்குதாரர்களுடனான சந்திப்பு ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கைத்தொழில் பேட்டையை மீள செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இதன் பங்குதாரர்களுடன் சந்திப்பு ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது பங்குதாரர்களின் கோரிக்கைகள், கைத்தொழிலாளர் கோரிக்கைகள், கைத்தொழில் பேட்டைக் காணிக்கு விண்ணப்பித்த கைத்தொழிலாளர்களுக்கு வழங்கக்கூடிய கடன் மற்றும் நன்கொடைகள்தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (ம)

## குறிப்பிட்ட நேரத்துக்கு அதிகமாக மின் தடை

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்கு குடாநாட்டின் ஒவ்வொரு பகுதிகளிலும் குறிப்பிட்ட தினங்களுக்கு காலை 8.30 மணியில் இருந்து மாலை 6 மணிவரை மின் விநியோகம் தடைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளபோதும் இந்த அறிவிப்புக்கு மேலாக சுமார் இரண்டு மூன்று மணித்தியாலங்கள் வரை மின்விநியோகம் தடைப்படுகின்றது.

இதனால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

திருநெல்வேலி, கல்வியங்காடு பகுதிகளில் தினமும் நீண்ட நேரம் மின்வெட்டு இடம்பெறுகிறது.

அந்தப் பகுதியில் உள்ள மக்கள் குறிப்பாக மாணவர்கள் பெரும் சிரமங்களை இதனால் எதிர் கொள்கின்றனர்.

மாலை 6 மணிக்கு மீண்டும் மின்வெளிச்சம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கும் மக்கள் இந்த நடவடிக்கையால் ஏமாற்றமடைகின்றனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 6 மணிக்கு மின்விநியோகம் கிடைக்கும் என்று எதிர்பார்த்த மக்கள் இரவு 9 மணிக்கே மின்சாரத்தை பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மீண்டும் 9.30 மணிக்கு அது தடைப்பட்டுவிட்டது.

குறிப்பிட்ட பகுதியில் மின் விநியோகம் மிகவும் மோசமாகவே உள்ளதாக மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (ம-9)

## சீனன்கலட்டி ஞானோதய பாடசாலையின் வளத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

சுன்னாகம்,ஜூன்.21

அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய பாடசாலையைப் புனரமைத்து அதன் மாணவ வளத்தை அதிகரிக்கும் முயற்சியில் பழைய மாணவர் சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலை இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த நிலையில் செயற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இந்தப் பாடசாலையின் பௌதிக மற்றும் மாணவ வளம் குறைவடைந்துள்ளது. இந்த நிலையை மாற்றி முன்மாதிரி ஆரம்பப் பாடசாலையாக இதனை உருவாக்கும் முயற்சியில் தாம் ஈடுபட்டுள்ளதாகப் பழைய மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

பழைய மாணவர் சங்கத்தின் ஐக்கிய இராச்சியக் கிளையின் அனுசரணையுடன் புதிதாக 80 இலட்சம் ரூபா செலவில் கட்டடமொன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவரான பொறியியலாளர் கலாநிதி பாலசிங்கம் பாலநந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரனும், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு. சண்முககுலகுமாரனும் கலந்துகொள்வர். (ம-38)

## மாவிலித் துறைமுகத்தில் மலசலகூட வசதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 21


நெடுந்தீவு கடற்படையினர் மாவிலி துறைமுகத்தில் படகுப் பயணிகளின் தேவைகருதி இரண்டு மலசலகூடங்களை அமைத்துள்ளனர்.

துறைமுகத்தில் கழிப்பிட வசதிகள் பல வருடங்களாக சேதமுற்று அழிந்துள்ள நிலையில் மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

துறைமுகத்தில் கழிப்பிட வசதிகளின் அவசியத்தை உணர்ந்த நெடுந்தீவு கடற்படை அதிகாரி என்.ஈ.ஏக்கநாயக்க வடக்கு கட்டளைத் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரட்ணவுடன் இது தொடர்பாகக் கலந்துரையாடியதை அடுத்து ஒரு லட்சம் ரூபா செலவில் தண்ணீர் வசதிகளுடன் கூடிய இரண்டு கழிவறைகள் அமைக்கப் பட்டுள்ளன. (ம-7)

## மாற்றுவலுவுடையோருக்கு விசேட அன்னதான மண்டபம்

### நயினையில் நேற்றுமுன்தினம் திறப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 21

நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபையின் மாற்றுவலுவுடையோருக்கென தனியாக அமைக்கப்பட்ட அன்னதான மண்டபம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது.

அன்னதான சபையின் தலைவர் த.சிவானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தொழிலதிபர் ஈ.எஸ். பி.நாகரத்தினம் மண்டபத்தை திறந்து வைத்தார்.

நினைவுக் கல்லை வேலணை பிரதேச செயலர் திருமதி எஸ்.மஞ்சுளாதேவி திரைநீக்கம் செய்து வைத்தார்.

முன்னதாக நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்று அம்பாளின் திருவுருவப்படம் ஊர்வலமாக அன்னதான சபை மண்டபத்துக்கு எடுத்துவரப்பட்டது.

மாற்றுவலுவுடையோர் வசதியாக கதிரைகளில் இருந்து உணவு உட்கொள்ளக்கூடியதாக பொதுமக்களின் உதவியுடன் 30 லட்சம் ரூபா செலவில் இந்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## காலாண்டில் 73 சிறுவர்கள் பக்கவாத நோயால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

12 வயதுக்கு உட்பட்ட 73 சிறுவர்கள் கடந்த காலாண்டுப் பகுதிக்குள் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர் என யாழ். போதனா வைத்தியசாலையின் தொழில்வழிச் சிகிச்சையாளர் ஆர்.கணேசலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஜனவரி மாதம் முதல் தற்போதுவரை 73 சிறுவர்கள் ஒரு பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்தக் காலாண்டுப் பகுதியில் வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் இருந்தும் சிகிச்சை பெற்றவர்களில் முதியவர்களை விட சிறுவர்களே அதிகம். பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அதிகமாக பாடசாலை செல்பவர்களாகவும் 12 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் காலாண்டுப் பகுதிக்குள் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் வன்னியில் இடம்பெற்ற போரின் போது ஷெல் துண்டுகள், துப்பாக்கி ரவைகள், கிபிர் தாக்குதலின் போது இடம்பெற்ற காயங்கள் காரணமாக உடலின் ஒரு பகுதியில் உணவற்றவர்களாக இருப்பதே காரணம்.

உடலில் ஷெல் துண்டுகளால் ஏற்பட்ட காயங்கள் நீண்ட நாள்களாக பராமரிப்பு அற்றுக் காணப்பட்டுள்ளன.

நலன்புரி முகாம்களில் தகுந்த சிகிச்சை இவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

எனினும் பெற்றோர்களும் அதனைக் கவனிப்பாரற்று விட்டதன் காரணமாக காயங்கள் சிதைவடைந்து உடலின் நரம்புகளைப் பல வீனமடையச் செய்துள்ளது.

தொழில் வழிச்சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைகள் வழங்கப்பட்ட போதும் எதுவும் பயனற்றதாக பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டவர்களாக தற்போதும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.-என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-14)

## வேலணை பிரதேச சபைப் பிரிவில் நான்கு அபிவிருத்தித் திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பெரிய அளவிலான 4 அபிவிருத்தித் திட்டங்கள் 2012 அபிவிருத்திக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக புறநெகும, நெல்சிப் உதவித் திட்டப் பணிப்பாளர் எந்திரி. எஸ்.ஸ்ரெயிலிதரன் இது குறித்துத் தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச சபைக்கான 4 அபிவிருத்தி திட்டங்களுக்கும் பிரதேச மட்டம், மாவட்ட மட்டம், மாகாணமட்டம், தேசிய மட்ட திட்ட இணைப்பு ஆகியவற்றின் அனுமதி கிடைத்துள்ளது.

இதில் மண்டைதீவுசுடலை வீதி புனரமைப்பு, துறையூர் சந்தை, மடத்துவெளி சந்தை ஆகியவற்றின் அபிவிருத்தி, வங்களாவடி சந்தியில் நவீன வடிவிலான இரு மாடி கடைத் தொகுதி அமைப்பு, நெல்சிப் அபிவிருத்தியில் கட்டம் II இல் நயினாதீவு - பெருங்குளவீதி அபிவிருத்தியை துரித கதியில் மேற்கொள்ளல் போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. (ம-41)

# ஜனாதிபதித் தேர்தலை தே.மு.தி.க. புறக்கணிப்பு


## விஜயகாந்த் அறிவிப்பு

சென்னை, ஜூன் 21

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தாலும் தமிழர்களின் பிரச்சினை எதற்கும் தீர்வு காணப்படாது என்பதால் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக தேசிய முற்போக்கு திராவிடக் கழகத் தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

அ.இ.அ.தி.மு.க. ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் மக்களவைத் தலைவர் பி.ஏ.சங்மாவை ஆதரிக்கப் போவதாகவும், தி.மு.க. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் பிரணாப் முகர்ஜியை ஆதரிக்கப்போவதாகவும் அறிவித்திருக்கும்



சூழலில், தொடர்ந்து தமிழகத்தின் நலன்களைப் புறக்கணிக்கப்படுகின்றன.

காவிரி, முல்லைப்பெரியாறு, கச்சதீவு, இலங்கைத் தமிழர் என தீராத பிரச்சினைகள் பல்லாண்டுகளாக இருந்தும் அவற்றைத் தீர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், யார் ஜனாதிபதியாக வந்தால் என்ன, வராவிட்டால் என்ன? தமிழ் நாட்டுக்கு என்ன பயன்? மாறாக ஜனாதிபதித் தேர்தலில் கலந்து கொள்ளாமல் இருப்பதே மாநிலத்திற்குச் செய்யும் நன்மை, எனவே தேர்தலை தே.மு.தி.க. புறக்கணிக்கும்.

கடந்த சட்டமன்றத்தேர்தல்களில் அ.இ.அ.தி.மு.க. அணியில் இடம்பெற்று 29 இடங்களில் வென்று சட்டமன்றத்தில் முதன்மை எதிர்க்கட்சியாக தே.மு.தி.க. விளங்குகிறது. ஆனால் ஒரு கட்டத்தில் அதற்கும் அ.இ. அ.தி.மு.கவிற்கும் இடையேயான உறவு முறிவடைந்தது குறிப்பிடத்தக்கது. (வ)

## நித்தியானந்தாவின் அனுமதி இல்லாமல் நடிக்க மாட்டேன்

### மனம் திறக்கிறார் ரஞ்சிதா



சுவாமி நித்தியானந்தாவின் உத்தரவு கிடைக்காமல் புதிய படங்களில் நடிக்க ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று அவரது சீடர் நடிகை ரஞ்சிதா தெரிவித்துள் ளார்.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு, இந்தியா முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்திய சம்பவங்களில் சுவாமி நித்தியானந்தா-நடிகை ரஞ்சிதா சம்பந்தப்பட்ட காணொலியும் ஒன்று.

அந்த சம்பவம் நடந்து பல மாதங்கள் ஆகியும் இன்னும் சில இந்து அமைப்புகள் ஏதாவது ஒரு விடயத்தில் அதை நினைவுபடுத்திக் கண்டனம் தெரிவித்து வருகின்றன.


தற்போது சுவாமி நித்தியானந்தா மதுரை இளைய ஆதீனமாக பதவியேற்றதும் பல அமைப்புகள் நடிகை ரஞ்சிதாவை மையப்படுத்தியே பிரச்சினையை எழுப்பின. ஆனால் இதுகுறித்து சம்பந்தப்பட்ட இருவரும் கண்டுகொள்ளவில்லை. அதை பொருட்படுத்தாமல் நடந்து கொண்டு வருகின்றனர்.

இந்தநிலையில் நடிகை ரஞ்சிதாவுக்கு தெலுங்கில் நடிக்க வாய்ப்பு வர, அதற்கு சுவாமியிடம் அனுமதி கிடைத்தால்தான் நடிப்பேன் என்று தெரிவித்துள்ளார். (வ)

## ஜூன் 28 இல் பிரணாப் வேட்பு மனுத் தாக்கல்

டில்லி, ஜூன் 21

ஜனாதிபதித் தேர்தலில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பிரணாப் முகர்ஜி, எதிர்வரும் 28 ஆம் திகதி, மனுத்தாக்கல் செய்யவுள்ளார். அவர் மனுத்தாக்கல் செய்வதற்காக, நான்கு தொகுதி வேட்பு மனுக்கள், 50 முன்மொழிவோர்கள் மற்றும் 50 வழிமொழிவோர்களுடன் தயாராகி வருவதாக, நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் பவன் குமார் பன்சால் தெரிவித்தார்.



மனுத்தாக்கல் செய்த பின்னர் பிரணாப், தன் மத்திய நிதி அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்வார். பிரணாப் வேட்பு மனுவை, பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா, மத்திய அமைச்சர்கள் மற்றும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தலைவர்கள் முன்மொழிவார்கள் மற்றும் வழிமொழிவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. நாடாளுமன்ற வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள அவரின் வேட்பு மனுவில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட வேண்டும் என்று பிரணாப்பின் தேர்தல் பிரசார மேலாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (வ)

## மதுரை ஆதீன நித்தி சர்ச்சையில் தமிழக அரசு தலையிடக் கோரிக்கை

சென்னை, ஜூன் 21

மதுரை ஆதீன விவகாரத்தில் தமிழக அரசு தலையிடக்கோரி தலைமைச் செயலகத்தில் முதல்வரின் தனிப் பிரிவுக்கு இந்து மக்கள் கட்சி சார்பில் மனு கையளிக்கப்பட்டது.



இந்த மனுவை கட்சியின் மாநிலத் தலைவர் அர்ஜூன் சம்பத், மதுரை மாவட்டத் தலைவர் எம்.சோலை கண்ணன் உள்ளிட்டோர் அளித்தனர். இதுகுறித்து, செய்தியாளர்களிடம் அர்ஜூன் சம்பத் தெரிவித்ததாவது:-

மதுரை ஆதீனம் ஆயிரத்து 500 ஆண்டுகள் பழமையானது. திருஞான சம்பந்தரால் தோற்றுவிக்கப்பட்ட இந்த மடம் இப்போது குற்றப் பின்னணி உள்ளவர்களின் புகலிடமாக இருந்து வருகிறது. இளைய ஆதீனமாக நியமிக்கப்பட்ட நித்தியானந்தாவையும் அவரை நியமித்த அருணகிரி நாதரையும் மடத்தில் இருந்து நீக்க வேண்டும். தமிழுக்கும், சைவத்துக்கும் அடையாளமாகத் திகழும் புதியவர் ஒருவரை ஆதீனமாக நியமிக்க வேண்டும்.

கர்நாடகத்தில் நித்தியானந்தா மீது பல்வேறு வழக்குகள் உள்ளன. அவர் நிபந்தனைம பிணை அடிப்படையில் வெளியே வந்துள்ளார். வழக்குகளில் இருந்து தப்பிக்க அவர் மதுரையில் ஒளிந்து கொண்டுள்ளார். மதுரை ஆதீன விவகாரங்களில் முதல்வர் தலையிட முடியாவிட்டாலும் அங்கிருந்து குற்றவாளிகளை நீக்க நடவடிக்கை எடுக்கலாம்.

நித்தியானந்தாவை நீக்கும் வரை அறவழியிலும், சட்ட வழியிலும் எங்களின் போராட்டம் தொடரும். பல்வேறு வடிவிலான போராட்டங்களை நடத்துவோம் - என்றார். (வ)

## 2 லட்சம் அகதிகள் இந்தியாவில்

இந்தியாவில் 2 லட்சத்துக்கும் அதிகமான அகதிகள் வாழ்கின்றார்கள் என்று சர்வதேச அகதிகள் தினமான நேற்று ஐ.நா. தூதரகம் வெளியிட்ட தகவலில் குறிப்பிட்டுள்ளது.

இவர்களில் இலங்கை மற்றும் திபெத்தைச் சேர்ந்த அகதிகளே 2 லட்சத்துக்கும் அதிகமாக இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆப்கானிஸ்தான் மற்றும் மியன்மாரைச் சேர்ந்தவர்கள் 17,380 பேர் உள்ளனர் என்று கூறப்படுகிறது. உலகரீதியில் கடந்த ஆண்டு மட்டும் சுமார் 8 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்களின் சொந்த நாடுகளை விட்டு வெளியேற வற்புறுத்தப்பட்டிருப்பதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.(வ)

## மீனவர் பிரச்சினையில் ஜெயா மௌனவிரதம்

### சாடுகிறார் கருணாநிதி

தமிழக மீனவர் பிரச்சினையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா மௌன விரதம் காக்கிறார் என்று தி.மு.க.தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கேள்வி, பதில் வடிவிலான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் தெரிவித்ததாவது:-

இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் விரட்டியடித்து விட்டதாகச் செய்தி வந்திருக்கிறது.


இது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். எமது மீனவர்களின் பிரச்சினை குறித்து மத்திய அரசுக்கு எத்தனையோ முறை நாம் வேண்டுகோள் விடுத்தும், அவர்களும் முயற்சித்துப் பலமுறை பேச்சு நடத்திய போதிலும் இலங்கைக் கடற்படையினரின் அட்டூழியம் நின்றபாடில்லை.

இந்தச்சம்பவம் தி.மு.கழகம் ஆட்சியிலே இருந்த போது நடைபெற்றிருந்தால், இந்தநேரம் எத்தனை கண்டன அறிக்கைகள் வெளிவந்திருக்கும் என்பதைத்தான் நினைத்துப் பார்க்கிறேன்.

மாநில அரசு என்று ஒன்று இருக்கிறதா? என்ன செய்கிறார்கள்? ஏன் பதவியை ராஜினாமாச் செய்யவில்லை? மத்திய அரசிலிருந்து விலக வேண்டியதுதானே? என்றெல்லாம் அடுக்கடுக்காக கேள்விக்கணைகளைத் தொடுத்திருப்பார்கள்.

ஆனால் தற்போது இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் விரட்டியடித்தது பற்றி வாயே திறக்கவில்லை!

தி.மு.க. ஆட்சியின் போது கேள்வி கேட்டு வாய் நீளம் காட்டியவர்கள் எல்லாம் இன்று கேளாக்காதினராயும், வாய் மூடி மௌனிகளாயும் மாறி விட்டார் கள்- என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)



அகில இந்திய காங்கிரஸ் கட்சி தலைவர் ராகுல் காந்தியின் பிறந்த தினத்தை முன் னிட்டு அவரது ஆதரவாளர்கள் புதுடில்லி அருகே உள்ள நொய்டாவில் யாகம் வளர்த் துக் கொண்டாடினர்.

## இராமேஸ்வரத்தில் பலத்த காற்று மீனவர் கடலுக்குச் செல்லத் தடை

மண்டபம், ஜூன்21

இராமேஸ்வரம், மண்டபம், பாம்பன் பகுதிகளில் பலத்த காற்று வீசுவதால் படகுகள் கடலுக்கு செல்ல 2ஆவது நாளாக அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் ஆயிரத்து 500 இற்கும் அதிகமான விசைப் படகுகள் கரையில் நிறுத்தப்பட்டுள்ளன.

இராமேஸ்வரம், மண்டபம், பாம்பன் கடல் பகுதிகளில் கடந்த இரு தினங்களாகச் சூறைக்காற்று வீசி வருகிறது. இதனால் கடந்த 18 ஆம் திகதி காலை இந்தப் பகுதி மீனவர்களுக்கு மீன்பிடித் துறையினர் மீன்பிடி டோக்கன் வழங்க மறுத்து விட்டனர். இதையடுத்து ஆயிரத்து 500 இற்கும் அதிகமான விசைப்படகுகள் கரையில் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன. இதனால் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் வேலை இழந்தனர்.

நேற்றும் மணிக்கு 45 - 55 கிலோ மீற்றர் வேகத்தில் சூறைக்காற்று வீசுவதால் இராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் ஆகிய பகுதிகளில் காலை 6 மணிக்கு மீன்பிடி ரத்து செய்யப்படுவதாக கடல்வளத் துறையினர் அறிவித்தனர். மீன்பிடித் தடைக்காலம் நீக்கத்திற்கு பின்னர் படகுகள் தொழிலுக்குச் சென்ற 3 ஆவது வாரத்தில் பலத்த காற்றின் வேகம் அதிகரிப்பால் 2 ஆவது நாளாக வேலை இழந்த மீனவர்களுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. (வ)

## திரைப்படமாகும் பத்மநாப சுவாமி கோயில் பொக்கிஷம்

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோயில் ரகசிய அறையில் உள்ள பொக்கிஷத்தை மையமாக வைத்து சினிமா தயாரிக்கப்பட்டுள்ளது.

கேரளாவில் உள்ள பிரசித்தி பெற்ற திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோயில் ரகசிய அறைகளில் பல லட்சம் கோடி மதிப்புள்ள பொக்கிஷங்கள் மீட்கப்பட்டன. கோயிலில் மொத்தம் 6 ரகசிய அறைகள் உள்ளன. இதில் 5 அறைகள் திறந்து பார்க்கப் பட்டன. இதில், ஓர் அறையில் மட்டுமே பல லட்சம் கோடி பொக்கிஷங்கள் இருந்தன.

இதுவரை திறக்கப்படாமல் உள்ள மற்றொரு அறையில், இதை விட அதிகமான பொக்கிஷங்கள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்நிலையில், இந்தப் பொக்கிஷங்கள் தொடர்பாக பத்ம வியூகம் என்ற பெயரில் சினிமா தயாரிக்கப்பட்டுள்ளது. பிஜோய் என்ற புதுமுக இயக்குநர் இயக்கியுள்ள இந்தப் படத்தில் புதுமுக கதாநாயகனாக நோபிதரியன் என்பவர் நடித்துள்ளார். சங்கர், மகாதேவன் உள்ளிட்ட முன்னணிப் பாடகர்கள் பாடியுள்ளனர். இந்தப் படம் அடுத்த மாதம் 6 ஆம் திகதி வெளியாகவுள்ளது. (வ)

# துருக்கியில் மோதல்


## இராணுவத்துக்கும் குர்திஷ் விடுதலைப் போராளிகளுக்கும் உயிரிழப்புகள்

அங்காரா, ஜூன் 21

துருக்கியின் தென்கிழக்குப் பகுதியில் இராணுவத்துக்கும் குர்திஷ் இனப் போராளிகளுக்கும் இடையே நடந்த மோதலில் 10 போராளிகளும் 8 இராணுவத்தினரும் உயிரிழந்தனர். 16 பேர் காயமடைந்தனர்.

துருக்கியில் மொத்தமுள்ள 7.5 கோடி மக்கள் தொகையில் 20 சதவீதம் பேர் குர்திஷ் இனத்தினர் ஆவர். அந்த நாட்டின் தென்கிழக்குப் பகுதியில் இவர்கள் கணிசமான அளவில் வசிக்கின்றனர். சிறுபான்மை இனமான இவர்கள் தங்களுக்கு முழுக் கல்வியையும் குர்திஷ் மொழியிலேயே அளிக்குமாறு கோரி வருகின்றனர்.

ஆனால், இந்தக் கோரிக்கையை ஏற்க துருக்கி அரசு மறுத்து வருகிறது. இந்தக் கோரிக்கை, நாட்டை இனரீதியாகப் பிளவுபடுத்தி விடும் என்று அரசு அஞ்சுகிறது. எனினும், குர்திஷ் இனத்தினருக்கு நிறைய கலாசார உரிமைகளை வழங்கி அவர்களைச் சமாதானப்படுத்த துருக்கி அரசு முயன்று வருகிறது.



இதை ஏற்காமல், நாட்டின் தென்கிழக்குப் பகுதிக்குத் தன்னாட்சி வழங்குமாறு கோரி குர்திஷ் போராளிகள் சண்டையிட்டு வருகின்றனர். அவர்கள் கடந்த 1984 ஆம் ஆண்டு முதல் நடத்தி வரும் தாக்குதல்களில் இதுவரை ஆயிரக்கணக்கானவர்கள் இறந்து விட்டனர்.


இந்த நிலையில், குர்திஷ் போராளிகள் துருக்கியின் தென்கிழக்குப் பகுதி ஹக்காரி மாநிலத்தில் உள்ள டக்லிகாவில் இராணுவ முகாம்கள் மீது நேற்று முன்தினம் திடீர்த் தாக்குதல் நடத்தினர். பதிலடியாக இராணுவத்தினரும் தாக்குதல் நடத்தினர். இரு தரப்புக்கும் இடையில் நடந்த மோதலில் 10 போராளிகளும் 8 இராணுவத்தினரும் உயிரிழந்தனர்.

இதே பகுதியில், குர்திஷ் போராளிகள் கடந்த 2007ஆம் ஆண்டில் நடத்திய தாக்குதலில் 12 இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

துருக்கியில் மொத்தமுள்ள 7.5 கோடி மக்கள் தொகையில் 20 சதவீதம் பேர் குர்திஷ் இனத்தினர் ஆவர்.

# பாட்டுக்கு வேட்டு

## பாகிஸ்தானின் பாடகி சுட்டுக்கொலை



இஸ்லாமாபாத், ஜூன் 21

பாகிஸ்தானிய பாடகி கஜாலா ஜாவித் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். பாகிஸ்தானின் பிரபல பாடகியும், நடன கலைஞருமான கஜாலா ஜாவித்துக்கு அதிக ரசிகர்கள் உள்ளனர். தலிபான்களின் ஆதிக்கம் மிக்க ஸ்வாத் பகுதியில் உள்ள பாஷ்தோவில் இவர் பிறந்தார்.

நடனமாடுவது, பாட்டுப்பாடுவது போன்றவை பாரம்பரியத்துக்கு விரோதமானவை என, தலிபான்கள் இவரை மிரட்டியதால், அந்தப் பகுதியிலிருந்து குடிபெயர்ந்தார். சில ஆண்டுகளுக்கு முன்பு, வர்த்தகர் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டார். பின்னர், அவரிடமிருந்து விவாகரத்துப் பெற்றார்.

இந்த நிலையில், பெஷாவரில் உள்ள வீட்டில், நேற்று முன்தினம் அடையாளம் தெரியாத நபர்கள் நுழைந்து கஜாலாவையும், அவரது தந்தையையும் சுட்டுக் கொன்று விட்டு தப்பிச் சென்றனர். குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலை நடந்துள்ளது என கஜாலாவின் சகோதரி தெரிவித்துள்ளார்.



மியன்மாரில் ஏற்பட்ட இனக்கலவரங்களைத் தொடர்ந்து பாதுகாப்புத் தேடி பங்களாதேஷ் நாட்டுக்குத் தப்பியோடிய மக்களை அந்த நாட்டு எல்லையோரக் காவல்படையினர் கைது செய்தனர்.

# வழி மறிக்கப்பட்டது ரஷ்யக் கப்பல்

ரஷ்யாவின் ஆயுத உபகரணங்களை ஏற்றிய கப்பலொன்றை அந்த நாட்டுக்கே தாம் திருப்பி அனுப்பி விட்டதாகப் பிரிட்டன் தெரிவித்துள்ளது. சிரிய அரசுக்கு ஆயுதங்களை விநியோகிப்பதை ரஷ்யா நிறுத்த வேண்டுமெனவும் பிரிட்டனின் பாதுகாப்புச் செயலாளர் கூறியுள்ளார்.

ஸ்கொட்லாந்தின் வட மேற்கு கடற்பரப்பில் வைத்து இடைமறிக்கப்பட்ட குறித்த கப்பல் சிரியாவுக்கு ஆயுதங்களைக் கொண்டு சென்றதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிரியாவிற்கு ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்துள்ளது என பிரிட்டன் நாடாளுமன்றத்தில் வில்லியம் ஹேக் குறிப்பிட்டுள்ளார். எனினும் இது தொடர்பாகப் பிரிட்டனிலுள்ள ரஷ்யா தூதரகம் எந்தவொரு கருத்துக்களையும் இதுவரை வெளியிடவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

# சீன பஸ் விபத்தில் 17 பயணிகள் சாவு

சீனா, ஜூன் 21


சீனாவின் கிழக்குப் பகுதியான ஜியாங்சு மாகாணத்திலிருந்து, கடலோர நகரமான பியூஜியன் மாகாணத்தின் ஷியாமெனிற்கு 45 பேரை ஏற்றிச் சென்ற பஸ் நேற்று அதிகாலை மலைச்சரிவிலிருந்து பள்ளத்தில் கவிழ்ந்ததில் 17 பேர் உயிரிழந்தனர் என சீன ஷின்ஹூவா செய்தி தெரிவிக்கிறது.

சீனாவின் இந்தப் பகுதியில் போக்குவரத்துக்கு இந்தச் சாலை மிகவும் அச்சுறுத்தலாகவே இருந்து வருகின்றது.

ஏற்கனவே இந்தப் பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் நடந்த பஸ் விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் நேற்று நடந்த விபத்தில் 17 பேர் உயிரிழந்து விட்டனர். மேலும் 3 பேருக்கு மோசமான காயம் ஏற்பட்டுள்ளது.

# முபாரக்கின் நிலை கவலைக்கிடம்



எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கின் உடல்நிலை கவலைக்கிடமாகவுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஹோஸ்னி முபாரக்கிற்குத் தொடர்ந்தும் சிகிச்சை அளிக்கப்பட்டுவருகின்றது எனக் கூறப்படுகின்றது.

எகிப்தில் புதிய ஜனாதிபதிக்கான தெரிவு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில் ஹோஸ்னி முபாரக் தொடர்பில் வெளியாகியுள்ள தகவல்கள் மேலும் நெருக்கடியை, தோற்றுவித்துள்ளது.

எகிப்தில் நீண்ட காலமாக ஆட்சிப் பொறுப்பிலிருந்த ஹோஸ்னி முபாரக், மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தால் பதவி கவிழ்க்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட அவர், விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு ஆயுள்கால சிறைத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார்.


அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பல்வேறு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தார் என ஹோஸ்னி முபாரக் மீது குற்றங்கள் முன் வைக்கப்பட்டிருந்தன.

# கிலானியின் பதவி பறிப்பு

இஸ்லாமபாத், ஜூன் 21

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசாக் கிலானியின் பதவியைப் பறிக்குமாறு பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தைத் தொடர்ந்து பிரதமராக பதவி வகிக்க கிலானிக்குத் தகுதியில்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதியான ஆசிப்அலி சர்தாரி, மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன. இது தொடர்பாக விசாரணை நடத்தும் படி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. எனினும் இந்த விவகாரத்தில் பிரதமர் யூசுப் ரசா கிலானி தாமதப்படுத்தி வந்தார் எனக் கூறப்பட்டது. இது தொடர்பாக அவர் மீது



தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் நேற்றுமுன்தினம் நடந்த விசாரணையில் கிலானி நீதிமன்ற உத்தரவை மதிக்காததால் அவர் பிரதமர் பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார் என உச்ச நீதிமன்றம் தெரிவித்தது. உச்சநீதி மன்ற உத்தரவால் கிலானியின் அரசியல் வாழ்க்கைக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

# போலியோ தடுப்பு மருந்து வழங்கத்தடை

# பாகிஸ்தானில் 8 லட்சம் குழந்தைகள் நிர்க்கதி

## தலிபானின் அறிவிப்பால் உலக சுகாதார நிறுவனம் திணறல்

இஸ்லாமாபாத், ஜூன் 21

போலியோத் தடுப்பு மருந்துக்குத் தலிபான் இயக்கம் தடை விதித்ததன் எதிரொலியாக வடக்கு பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் வாழும் குழந்தைகளை இந்தக் கொடிய நோய் தாக்கும் அபாயம் இருக்கிறது என்று தெரிய வந்திருக்கிறது. ஆங்கில நாளிதழ் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

பாகிஸ்தானில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் போலியோ தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டு வருகிறது. உலக சுகாதார மையம், யுனிசெவ் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளும் இந்த மருந்தளிப்புத் திட்டத்தில் முனைப்புக் காட்டி வருகின்றன.

பழங்குடியினர் வாழும் பகுதியான கைபர், பஜௌர், மொஹமண்ட், குரம் ஆகிய இடங்களில் வாழும் ஐந்து வயதுக்குக் கீழுள்ள சுமார் எட்டு லட்சம் குழந்தைகளுக்குப் போலியோ தடுப்பு மருந்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக 2 ஆயிரத்து 700 குழுக்கள் அமைக்கப்பட் டுள்ளன.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானை ஒட்டியுள்ள பாகிஸ்தானின் வடக்குப் பகுதியில் அமைந்திருக்கும் வஸிரிஸ்தான் மாகாணத்தில் வாழும் குழந்தைகளுக்குப் போலியோ தடுப்பு மருந்து வழங்குவதை அந்த இடத்தில் செல்வாக்கு மிகுந்துள்ள தலிபான் இயக்கத்தினர் தடை செய்துள்ளனர். இதனால் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளை இந்தக் கொடிய நோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

வஸிரிஸ்தானில் ஆளில்லா விமானங்கள் மூலம் அமெரிக்கா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதை எதிர்த்து தீவிரவாதிகளின் 'சுரா' என்கிற ஆட்சிக் குழு போலியோ தடுப்பு மருந்தளிக்கும் திட்டத்துக்குத் தடை விதித்தது.

இது தங்களுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்திருக்கும் ரகசிய திட்டம் என்பது இவர்களது நிலைப்பாடு. எனவே வஸிரிஸ்தான் பகுதியில் குழந்தைகளுக்குப் போலியோ தடுப்பு மருந்து அளிப்பதற்கு அவர்கள் தடை விதித்திருக்கின்றனர். அந்தப் பகுதியில் செல்வாக்குப் பெற்றுள்ள பாகிஸ்தானிய தலிபான்களின் தலைவரான ஹபீஸ் குல் பஹாதூர் போலியோ தடுப்பு மருந்து அளிப்பதற்குத் தடையை அறிவித்தார்.

போலியோ முற்றிலும் ஒழிக்கப்படாத மிகச் சில நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று என்கிற நிலையில் ஆயிரக் கணக்கான குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு மருந்து கிடைக்காமல் போவது சர்வதேச சுகாதார அமைப்புகளைக் கவலையில் ஆழ்த்தியிருக்கிறது.

மிகவும் கடினமான நிலப் பகுதியாக உள்ள வடக்கு பாகிஸ்தானில் ஏற்கெனவே பழங்குடியினிடையே போலியோ நோய்த் தாக்கம் பரவலாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நட்ட நடுக்கடலில் கவிழ்ந்தது படகு

### 27 பேர் சாவு; 58 பேர் மாய



இந்தோனேஷியாவில் 70 பேருடன் சென்ற படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27 பேர் உயிரிழந்தனர். மேலும் 58 பேர் காணாமற்போயுள்ளனர் என அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தோனேஷியாவின் அம்போன் நகரிலிருந்து 70க்கும் மேற்பட்டோர் படகு ஒன்றில் , உணவுப்பொருள்கள் மற்றும் கட்டுமானப் பொருள்களுடன் , அருகே உள்ள மாலுக் தீவுக்குச் சென்றனர்.

இவர்கள் சென்ற படகு புரூ தீவு அருகே சென்ற போது திடீரென நடுக் கடலில் முழ்கியது. இதில் 58 பேர் கடலில் முழ்கியுள்ளனர். காணாமற்போனவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது வரை12 பேர் மீட்கப்பட்டுள்ளனர். கடலில் இராட்சத அலை எழுந்ததால் படகு முழ்கியது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஒரு நாளைக்கு 16 தடவை சூரிய உதயத்தைப் பார்க்கிறோம்



விண்வெளிக்குச் சென்றுள்ள சீன வீரர்கள் மூன்று பேர், ஒரு நாளைக்கு 16 முறை சூரிய உதயத்தையும், சூரிய அஸ்தமனத்தையும் பார்க்கின்றனர். சீனா விண்ணில் ஆய்வு மையத்தை அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

வரும், 2020க்குள் இந்தப் பணிகளை முடிக்க, சீனா திட்டமிட்டுள்ளது. இந்த ஆய்வு மையத்துக்கு, 'டியான்காங்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஆய்வு மையம் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்காக, 'ஷென்சு-9' என்ற விண்கலத்தை, சீனா கடந்த வாரம் விண்ணில் செலுத்தியது. இதில், முதன் முறையாக, விண்வெளி வீரர்களுடன், லியூ யாங், என்ற பெண் விமானியும் சென்றுள்ளார்.

இவர்கள் விண்ணில், 13 நாள்கள் தங்கியிருந்து, பல்வேறு ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர். இதற்கிடையே, ஷென்சு விண்கலம், டியான்காங் விண்வெளி நிலையத்துடன், நேற்று முன்தினம் இணைந்தது. சீனாவின் தரைகட்டுப்பாட்டுத் தளத்திலிருந்து நேற்று, இவர்களுக்கு ஈ-மெயில் அனுப்பப் பட்டது.

ஈ-மெயிலில் போட்டோ, வாசகங்கள், காணொலி ஆகியவை அனுப்பப்பட்டன. இவைகள் தங்களுக்கு கிடைத்ததாக, மூன்று விண்வெளி வீரர்களும் பதில் அனுப்பியுள்ளனர்.

சீன நேரப் படி, காலை 6 மணிக்குத் தூங்கி எழுந்து விடுவதாகவும், ஒரு வீரர் தூங்கும் போது மற்றவர்கள் விழித் திருப்பதாகவும், தாங்கள் தங் கியுள்ள அறையின் வெப்பநிலை 22 முதல் 23 டிகிரி செல்சியஸ் வரை உள்ளதாகவும், தாங்கள் தங்கியுள்ள விண் ஆராய்ச்சி மையம், 90 நிமிடங்களுக்கு ஒரு முறை பூமியை சுற்றுவதால், 24 மணி நேரத்தில் 16 சூரிய உதயத்தையும், 16 சூரிய அஸ்தமனத்தையும் பார்ப்பதாக, இவர்கள் தெரிவித்துள்ளனர்.

# 24 வருடங்களுக்குப் பின்னர் குடும்பத்தைச் சந்தித்தார் சூகி

ஜனநாயக மீட்பு போராட்டம் நடத்தி வந்ததால் 15 ஆண்டுகளாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த மியன்மார் எதிர்க்கட்சித் தலைவி ஆங் சாங்சூ கி, 24 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் பிரிட்டன் திரும்பியுள்ளார், அங்கு தனது குடும்பத்தினரை சந்தித்தார். 24 வருட இடைவெளிக்குப் பின் நடைபெற்ற இந்தச் சந்திப்பு மிகவும் உணர்ச்சிபூர்வமாக அமைந்திருந்தது. அதற்குப் பின்னர் தனது 67ஆவது பிறந்தநாளை முன் னிட்டு டப்லின் சென்ற சூகிக்கு, பொதுமக்கள் சார்பாக பிறந்த நாள் கேக் பரிசளிக்கப்பட்டதுடன், வாழ்த்துப்பாடலும் பாடப்பட்டது. பிரிட்டிஷ்காரரான மைக்கேல்ஏரிஸ் என்பவரை திருமணம் செய்து கொண்ட சூகி, கணவர் மற்றும் இரண்டு மகன்களுடன் பிரிட்டனில் நீண்டகாலம் வசித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசியல் தஞ்சம் கோரினார் அசேஞ்

விக்கிலீக்ஸ் இணையத் தளத்தின் ஸ்தாபகர் ஜூலியன் அசேஞ் லண்டனில் உள்ள ஈகுவடோர் தூதரகத்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து ஈகுவடோர் அரசு பரிசீலித்துவருவதாக அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

லண்டனில் உள்ள ஈகுவடோர் தூதரகத்துக்கு சென்ற ஜூலியன் அசேஞ் அரசியல் தஞ்சம் தொடர்பில் தம்மிடம் பேசியதை தூதரக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பிரிட்டனிலிருந்து நாடு கடத்துவதற்கு எதிராக விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் ஸ்தாபகர் தாக்கல் செய்திருந்த மேன்முறையீடு பிரிட்டன் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நேபாள ஆளும் கட்சியிடையே பிளவு



நேபாளத்தின் ஆளும் மாவோயிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் சிலர் தாங்கள் அந்தக் கட்சியிலிருந்து விலகி தனிக்கட்சி தொடங்குவதாக நேற்று முன்தினம் அறிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கை கட்சித் தலைவர் பிரச்சண்டாவின் மீது கட்சியில் இருக்கும் கடும்போக்காளர்கள் முன்வைத்து வந்த விமர்சனங்களையும், மற்றும் கட்சிக்குள் இருந்து வந்த விரிசல்களையும், முறைமைப் படுத்துகிறது.

நேபாளத்தில் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததிலிருந்து , அந்த நாடு ஒரு அமைதி வழிமுறையை நடைமுறைப் படுத்தத் திணறிக்கொண்டிருக்கிறது.

நாட்டுக்கான புதிய அரசியல் சட்ட வடிவம் குறித்து, அரசியல்வாதிகள் உடன்பாடு ஒன்றுக்காக எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்ததை அடுத்து அங்கு தற்போது ஓர் அரசியல் குழப்ப நிலை நீடித்து வருகின்றது. இந்த நிலையில் ஆளும் கட்சிக்குள் உருவாகியிருக்கும் பிளவு நாட்டு நிலைமையை மேலும் மோசமாக்கும் என உள்ளூர் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.


## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட 'A' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

(19464)(6-8-9)


# சிரிய நிலைமைகள் குறித்து ஒபாமா - புடின் ஆராய்வு



சிரியாவில் நடைபெறும் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பது குறித்து, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் ஜி20 மாநாட்டின் போது கருத்துப் பரிமாறிக் கொண்டனர் எனத் தெரிய வருகின்றது.

மெச்சிக்கோவில் தற்போது நடைபெற்று வரும் ஜி20 மாநாட்டில் பங்கேற்பதற்காக அங்கு சென்ற இரு நாட்டு தலைவர்களின் சந்திப்புக்குப் பின்னர் அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

இதில், சிரியாவில் தலைவிரித்தாடும் வன்முறை கலவரங்கள் அடங்கி, அமைதி திரும்புவதையே அனைத்து தலைவர்களும் விரும்புவதாகவும் கூறப்பட்டிருந்தது. மேலும், சிரிய மக்கள் அவர்களாகவே சுதந்திரமாக ஜனநாயக ரீதியில் தங்களது எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதில், தாங்கள் ஒன்றுபட்டுள்ளதாகவும் இருவரும் கூறியிருக்கின்றனர்.


## Diploma in Psychology

with Counseling and Psycho Therapy
யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக
மருத்துவக்கற்கை நெறிகளின் முன்னோடி கே.யு வழங்கும் உளவியல் டிப்ளோமா

psychology

Learn From Experts ,Learn from Doctors

Duration : 6 Months(2 levels )Part time
Fee : 22,500/=(Each Level )
Commencement : 23/06/2012

Faculty of Medical Sciences
Knowledge Universe-Sri Lanka.
No 75,Temple Road,Jaffna. www.kugroup.info
(சி/718) Call (Day Times only): 0777302882

## அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

ஜினசேன
வன்னி மண்ணிலும்

ESTD 1905

அதி நவீன தொழில்நுட்பங்களுடனான நீர் இறைக்கும் இயந்திரங்கள், செட்ரிக் நீர் இறைக்கும் இயந்திரங்கள், றொபின் வில்சியர்ஸ் இயந்திரங்கள்

★விவசாய நீர்ப்பாசன தெளிகருவிகள், தூவல் தொழில்நுட்ப கருவிகள், சொட்டு முறை நீர்பாசனத் தொகுதிகள், அதி நவீன தொழில்நுட்பத்துடனான நீர் வடிகட்டி சுத்தப்படுத்தும் தொகுதிகள்.

5HP, 8 HP, 12 HP வலுவுள்ள இரு சில்லு உழவு இயந்திரங்கள், அறுவடை இயந்திரங்கள், சூடடிக்கும் இயந்திரங்கள், 47 HP நாற்சில்லு உழவு இயந்திரங்கள், கூட்டுப்பசளை, கால் நடைத்தீன் தயாரிப்பிற்காக துகளாக்கும் இயந்திரங்கள்.

நீங்கள் நாடவேண்டிய இடம்
விற்பனை சேவை நிலையம்.

இல.2, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
தொ.பே.0212280070

(19595)(2-6-9)

Robin
JINASENA CENTRIC WATER PUMPS
Agrimec

## தேவை

கொழும்பு வெள்ளவத்தையில் வசிக்கும் அரச பணிபுரியும் பெண்ணுக்கு, பிள்ளைகளுக்கு வீட்டு வேலைகள் செய்வதற்கான பெண் உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு:- 0752895902

(19485) (2-6-9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் கந்தையா நிமலச்சந்திரன்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 | 22 |
| 03 | 05 |
| 1977 | 2012 |

(22.05.2012) இறைவனடி சேர்ந்த அமரர் கந்தையா நிமலச்சந்திரன் அவர்களின் 31 ஆம் நாள் அஞ்சலி நிகழ் வினையொட்டி இன்று (21.06.2012) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொந்தி லேன்,
பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்

(19559) (45.6.9)

# வாய்ப்பு வரும் நேரம்

(09)

''ஒரு மனிதன் உயர்ந்த பதவியில் அமர்த்தப்படும்போது, அவன் பல வருடங்களாக அந்தப் பணிக்குத் தன்னைத் தயாராக்கிக் கொண்டுள்ளான் என்ற காரணத்தால் அமர்த்தப்படுகிறான். அவன் சூழ்நிலையைச் சாதகமாக்கிக் கொண்டான் என்ற காரணத்தால் மட்டும் அல்ல. அதிர்ஷ்டம் எப்போதும் தகுதியுள்ளவர்களுக்கே துணை நிற்கும்.''

ரஸ்கின் கூறினார்; ''இளமைப் பருவத்தின் எல்லா நேரமும், அறிவை வளர்த்துக் கொள்ளவும், தன்னை உருவாக்கிக் கொள்ளவும், தன்னை வழிநடத்திச் செல்லவும் அத்தியாவசியமான காலம் ஆகும். அது எதிர்காலத்தில் நிகழக்கூடிய நிகழ்ச்சிகளுடன் எந்நேரமும் இணைந்து ஆடிக்கொண்டிருக்கிறது. அதை ஒரு நொடிப் பொழுது தவறவிட்டாலும் குறிப்பிட்ட காலத்தில் ஏற்படும் வாய்ப்பை மறுபடியும் ஒரு போதும் பெற முடியாது அல்லது அந்த வாய்ப்பை இழக்க நேரிடும்.''

### சுய பயிற்சி

செயிண்ட் பெர்னார்டு கூறினார்; ''எனக்கு ஏற்படும் சேதத்துக்கும், துன்பத்துக்கும் காரணம் என்னையன்றி வேறெருவரும் இலர். நான் அனுபவிக்கும் இன்னல்களுக்கு எனது தவறுகளே காரணம்; மற்றப்படி உண்மையாகத் துன்பப்படுபவன் அல்லன்.''

புகழ் பெற்ற ஒரு இராஜதந்திரி சொல்கிறார். ''செயல் திறமைக்கு வாய்ப்பு பெறுவதில், பற்றாக்குறை ஒரு போதும் ஏற்ட்டுவதில்லை. திறமையைக் கண்டுபிடிக்காமல் இருக்க முடியாது. ஏனெனில், அதைத் தினமும் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் பலர் கண்டுபிடித்து விடுகின்றனர். வீடு கட்ட விரும்புபவர், பண்ணையில் பயிரிட விரும்புவர், சுரங்கம் தோண்ட நினைப்பவர், வலியிலிருந்து நிவாரணம் பெற விரும்புபவர், சட்டப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள விரும்புபவர் அல்லது பயனுள்ள வாழ்வுக்கு உதவும் செயலைப் புரிய விரும்புபவர் போன்ற அனைவரும் தங்களுக்கு உதவக் கூடிய தகுதியும் திறமையும் உடையவரைத் தீவிரமாகத் தேடுகின்றனர். இந்தத் தேடுதல் முழுமை பெற உலகெங்கும் மேற்குறிப்பிட்ட எல்லாத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கையையும் திறமையானவர்களின் எண்ணிக்கையையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

இந்தத் தேடுதல் வேட்டையிலிருந்து திறமையின் எந்த வடிவத்தையும் மறைத்து வைக்க முடியாது. திறமை பெற்றிருப்பவர் மறைந்திருக்க நினைத்தாலும், அந்தத் திறமையை உபயோகித்துப் பயன்பெற விரும்புபவரால் கண்டுபிடிக்கப்பட்டு அவர் அதை உபயோகித்து வேலை செய்யத் தூண்டப்படுவார். ஆகவே, ஒருவர் வெற்றியடைய ஏதாவது ஒரு தொழிலைச் செய்ய தன்னை முழுமையாகத் தகுதியாக்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனிதனும் சில விருப்பங்களை இயற்கையாகப் பெற்றுள்ளான்.

இன்று ஒவ்வோர் இளைஞனாலும் இந்த இயற்கையான விருப்பங்களைப் பயிற்சியின் மூலமாகப் பயனளிக்கும் திறமையாக மாற்றிக் கொள்ள முடியும். வாய்ப்புகள், சந்தர்ப்பங்கள் மற்றும் தொடக்கங்கள் ஆகியவற்றைப் பற்றிக் கவலைப்பட செலவழிக்கும் நேரம், வீணாக்கப்பட்ட நேரமாகும். ஏனெனில், ஒவ்வொரு திறமையான மனிதனுக்கும் ஒரு தொடக்கம் மற்றும் ஒரு வாய்ப்பு, என்பன எப்போதும் மற்ற மனிதர்களின் அவசியங்களால் அளிக்கப்படுகின்றன.''

வாய்ப்பு மனித சமுதாயத்தின் உண்மையான ஆதாரமாக மறைந்து உள்ளது. வாய்ப்பு நம்மைச் சுற்றியுள்ள எல்லா இடத்திலும் உள்ளது. ஆனால், அந்த வாய்ப்பைப் பறித்துக் கொள்ளத் தன்னைத் தயாராக்கிக் கொள்வதும், அதை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்வதும் ஒவ்வொருவரும் தானாக உருவாக்கிக் கொள்ள வேண்டியது ஆகும். ஒருவன் தன்னை சுயமாக உருவாக்கிக் கொள்ளலாம் அல்லது உருவாக்கிக் கொள்ளாமல் இருக்கலாம். ஜனாதிபதி கார்ஃபீல்டு சொன்னார், ''சந்தர்ப்பம் என்பது ஒரு ராணுவத்தைப் போர்க்களத்துக்கு வரவழைக்கும் ஊதல் ஒலி அழைப்பாக இருக்கக் கூடும். ஆனால், ஊதல் ஒலி அழைப்பு வீரர்களை உருவாக்குவதோ அல்லது போரில் வெற்றி அளிப்பதோ இல்லை''. வாழ்வைத் தவிர சிறந்த பயிற்சிப் பள்ளி உள்ளதா? சுயபயிற்சியைத் தவிர சிறந்த பயிற்சி உள்ளதா?

### தனி நபரின் திறமை

நாம் ஓர் அகராதியை இங்கும் அங்குமாகப் புரட்டித் திறந்து, எந்தவித நோக்கமும் இல்லாமல் சில சொற்களின் பட்டியலைத் தயாரித்து, ஒரு கட்டுரையை அல்லது புத்தகத்தை எழுதுவதென்பது அபத்தமானதாகும். ஆயினும், ஒருவன் நேரம் தவறாமை, நுணுக்கத்தன்மை, ஒழுங்குமுறை, செம்மை, துரிதம், விசுவாசம் போன்ற சில தன்மைகளைப் பெற்றுள்ளதால், வாழ்வின் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள முழுமையாக தயாராக உள்ளான் என்று சொல்வதைக் காட்டிலும், அபத்தமானது எதுவும் இருக்க முடியாது. ஏனெனில், இந்த எல்லாத் தன்மைகளுக்கும் எல்லாத் தகுதிகளுக்கும் பின்னால் தனிமனிதத் திறமை இருக்க வேண்டும்.

இதை வேறு விதமாகச் சொல்வதானால், விரீலண்ட் தானே கல் அள்ளும் கருவியுடன் இருந்த மனிதனுக்குப் பின்னால் இருந்திருக்க வேண்டும், ஸ்விட்சுடன் இருந்த மனிதனுக்குப் பின்னால் இருந்திருக்க வேண்டும், பிரேக்குடன் இருந்த மனிதனுக்குப் பின்னால் இருந்திருக்க வேண்டும். கண்டக்டரின் துளைக் கருவிக்குப் பின்னால் இருந்திருக்க வேண்டும் - அது அவரை வெற்றி பெற வைக்கும் விரீலண்டின் தனிப்பட்ட குணமாக இருந்திருக்க வேண்டும். அதன் மூலமாக வாழ்வில் வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக்கிக் கொண்டிருக்க வேண்டும்.

-கண்ணதாசன்

(தொடரும்)

# பிள்ளைகள் கலைத்துறையில் பங்குபற்ற பெற்றோர் ஊக்கப்படுத்த வேண்டும்

## வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆலோசனை

**பிள்ளைகளுக்கு கலை ஆர்வத்தை வளர்த்து அவர்களை கலைத்துறையில் ஈடுபடுத்துவதன் ஊடாக எதிர்காலத்தில் சிறந்த சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியும்**

காரைநகர், ஜூன் 21

உள்ளத்து உணர்வுகள் வெளிப்படவும், சமநிலை மற்றும் ஆளுமை விருத்தியடையவும் கலைகள் அவசியமாக அமைகின்றன. இதனால் இன்று கலைத்துறை செயற்பாடுகளுக்குப் பாட விதானத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் கலைத்துறையில் பங்குபற்ற பிள்ளைகள் தயக்கம் காட்டுகின்றனர். கலைத்துறையில் பிள்ளைகள் பங்குபற்ற பெற்றோர்கள் ஊக்கப்படுத்த வேண்டும். ஓய்வு நேரத்தில் பிள்ளைகளை கலைத்துறையில் ஈடுபடுத்துவதன் மூலம் சிறந்த ஒரு சமுதாய பழக்கவழக்கம் உடைய பிள்ளைகளாக வளர்த்தெடுக்க முடியும் என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

காரைநகர் கிழவன்காடு கலா மன்றம் நடத்திய வருடாந்த பரிசளிப்பு விழாவிலும் கலை விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக சிறப்பான கலைச் சேவையை கிழவன்காடு கலா மன்றம் ஆற்றி வருகின்றது. எங்கள் கலைத் திறமைகளை அடுத்த சந்ததியினருக்கு வழங்குவதிலும், கலைகளை அழிந்து போகாமல் பாதுகாப்பதிலும் காரைநகர் மக்கள் முன்னின்று செயற்படுகிறார்கள்.

வடமாகாணத்தில் வாராந்தம் பல நிகழ்வுகளை நடத்தி வருகின்றோம். அங்கெல்லாம் முதன்மை நிலையில் உள்ள மாணவர்கள் காரைநகரைச் சேர்ந்தவர்களே.

இந்த மக்கள் இங்கு மட்டுமன்றி யாழ்ப்பாணம் மற்றும் வெளிநாடுகளில் கூட முழு நாள் நிகழ்வுகளை நடத்த வல்லவர்கள். லண்டன், சுவிஸ், கனடா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் கூட எமது தனி அடையாளத்தை அழிய விடாது இந்த ஊரின் பெயரால் மன்றங்களை அமைத்து எமது தனி அடையாளத்தை பேணி வருவதுடன் மண்ணின் அபிவிருத்தியிலும் பங்கெடுக்கின்றனர்.

பிள்ளைகளுக்கு கலை ஆர்வத்தை வளர்த்து அவர்களை கலைத்துறையில் ஈடுபடுத்துவதன் ஊடாக எதிர்காலத்தில் சிறந்த சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியும் - என்றார். (எ-250)



மானிப்பாய் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு விழாவும், ஓய்வு பெற்ற அங்கத்தவர்கள், பணியாளர்கள், சிறந்த அங்கத்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சங்க எல்லைக்கு உட்பட்ட 10 முன்பள்ளியைச் சேர்ந்த 210 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் வழங்கினார். (எ-13)

# கணித வினாவிடைப் போட்டி முடிவுகள்

பண்டத்தரிப்பு, ஜூன் 21

வட மாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்ட கணித வினா விடைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் விவரம் வருமாறு:-

**தரம் - 6, ஆ ங்கில மொழி மூலம்**

1ஆம் இடம் -மோ. அ.றினோசன், (மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம்- சு.துவாரகன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), 3ஆம் இடம் ஞா. ரமாஜினி (உடுவில் மகளிர் கல்லூரி).

**தரம் -6, தமிழ் மொழி மூலம்**

1ஆம் இடம்- அ.சுபவர்சனா (முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி), 2 ஆம் இடம் - எஸ். சர்மிகா (இறம்பைக்குளம் மகா வித்தியாலயம், வவுனியா), 3ஆம் இடம்- ஆர்.துஷாரகன் (ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை).

**தரம் - 7,ஆங்கில மொழி மூலம்**

1ஆம் இடம்- கே. மாலன்பன் (ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம்- ந.விசுசன்(ஹாட்லிக் கல்லூரி), 3 ஆம் இடம்-ஆர் யதுசன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி).

**தரம் 7, தமிழ் மொழி மூலம்**

1ஆம் இடம்- எஸ் யதுர்ஷன் (ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம்- ஆர். ஆதிரையன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), 3ஆம் இடம் - எஸ். றிசோபிகா (வ/இறம்பைக்குளம் மகா வித்தியாலயம்).

**தரம் - 8, ஆங்கில மொழி மூலம்**

1 ஆம் இடம்- எல்.ஸ்ரீ ஹர்சன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), 2 ஆம் இடம்- எஸ்.சஞ்ஜித் (ஹாட்லிக் கல்லூரி), 3 ஆம் இடம்- எஸ். தர்சா(வ/இறம்பைக்குளம் மகா வித்தியாலயம்).

**தரம் - 8, தமிழ் மொழி மூலம்**

1 ஆம் இடம்- எஸ்.சிவதர்சன் (ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம்- என்.குமணன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), 3 ஆம் இடம் - ஆர்.ஸ்ரனின் டினோசன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி).

**கேத்திர கணித கற்றல் உபகரணம் தயாரிக்கும் போட்டி**

1 ஆம் இடம்- ரி.ஹம்சா (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), 2 ஆம் இடம்- ஜி.விஷாலினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்- கே.தற்சுதன், ரி.தனுசன் (வவுனியா கோவில் புளியங்குளம் மகா வித்தியாலயம்).

**கணித நாடகப் போட்டி சிரேஷ்ட பிரிவு**

1ஆம் இடம்- வ/புதுக்குளம் முத்தமிழ் வித்தியாலயம், 2ஆம் இடம்-யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, 3 ஆம் இடம்- காரைநகர் யாழ்ரன் கல்லூரி.

(எ-130)

# அமைச்சுகளின் செயலராக வரதீஸ்வரன்



வட மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளராக கரவெட்டிப் பிரதேச செயலாளர் இரா.வரதீஸ்வரன் பதவி உயர்வு பெற்று இன்று கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்கின்றார்.

இவர் வடமாகாண உள்ளூராட்சி, நிவாரணம், புனர்வாழ்வு, கூட்டுறவு, கிராம அபிவிருத்தி, கைத்தொழில் சமூக சேவைகள் மற்றும் நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் அமைச்சுகளின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான இவர், மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பிரதேச செயலர் பிரிவுகளில் 14 வருடங்கள் பிரதேச செயலாளராகவும், அதனைத் தொடர்ந்து 6 வருடங்கள் பருத்தித்துறைப் பிரதேச செயலாளராகவும் பணியாற்றி இறுதியாக இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் கரவெட்டி பிரதேச செயலாளராகப் பணியாற்றி வந்தார். (ஒ-8)

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## படையினர் வெளியேறுவரா?

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் யாழ். மாவட்டச் செயலகம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்காக ஆணையாளர் புஞ்சிஹேவா கொழும்பிலிருந்து வந்திருந்தார்.

நில உச்ச வரம்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதும், அளவுக்கு அதிகமான காணிகளைத் தம்வசம் வைத்திருக்கும் நபர்களிடம் இருந்து அவற்றை மீட்பதும் அரச காணிகள் தொடர்பில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுமே காணிச் சீர்திருத்த ஆணைகுழுவின் தலையாய பணிகள்.

இதுவரை காலமும் கொழும்பில் மட்டுமே இயங்கி வந்த இந்த அலுவலகத்தின் கிளை தற்போது யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ளது. அரச காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்காக வடக்கு மக்கள் கொழும்புக்கு அடிக்கடி செல்வதில் உள்ள சிரமங்களைக் குறைப்பதற்காகவே இந்த ஏற்பாடு என்று அரசு சொல்கிறது.

அதேவேளை, இலங்கை அரச படைகள் தமது முகாம்களுக்கான நிலத்தை மும்முரமாகத் தேடி வரும் பின்னணியில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவும் இங்கு தளம் அமைத்துக் கொண்டுள்ளமையைக் கவனிக்காமல் விட்டுவிட முடியாது.

இதற்கிடையே, யாழ்ப்பாணத்தில் காணியற்றவர்களுக்கு இரண்டு பரப்புக் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆணையாளர் தெரிவித்திருக்கிறார். அந்தக் காணிகளும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பளைப் பகுதியிலேயே வழங்கப்பட உள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

போதாததற்கு மக்கள் விவசாயம் செய்ய விரும்பினால் அவர்களுக்குக் குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறியிருந்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநரும் கலந்து கொண்டிருந்தார் என்பது ஆழ்ந்து நோக்குதற்குரியது.

யாழ்ப்பாணத்தவர்களுக்கு கொடுப்பதற்குக் காணிகள் இல்லை என்பதனாலேயே பளையில் அவர்களுக்கு, அதுவும் இரண்டே பரப்புக் காணியைத்தான் (கடந்த காலங்களில் ஏக்கர் கணக்கில் காணிகள் கொடுக்கப்பட்டன) கொடுக்க முடியும் என்று காணி மறுசீரமைப்பு ஆணையாளர் தெரிவித்திருக்கிறார். அதாவது யாழ்ப்பாணத்தில் அரச காணி இல்லை என்பதை ஆணையாளர் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால், அவர் அருகிலேயே நின்றிருந்த ஆளுநரோ சில தினங்களுக்கு முன்னர்தான் படையினருக்கு வழங்குவதற்காக அரச காணிகளை அடையாளம் காணுங்கள் என்று பிரதேச செயலர்களுக்கும் அரச அதிபர்களுக்கும் உத்தரவிட்டிருந்தார்.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கணக்குப்படி இல்லாமல்போன அரச காணிகளை, யாழ்ப்பாணத்தில் அரச அதிகாரிகள் எப்படித் தேடிப்பிடிப்பார்கள் ஆளுநருக்காக என்பது மண்டையைக் குடைகிறது. எப்படி யோசித்துப் பார்த்தாலும் பதில் கிடைக்காத இந்தக் கேள்விக்கு, விரைவில் ஏதோ ஒரு பதிலை அரச அதிகாரிகள் முன்வைக்கத்தானே போகிறார்கள். அப்போது அது வெளிச்சத்துக்கு வந்துவிடும்.

ஒருவேளை அரச காணிகள் எவையும் குடாநாட்டில் மிச்சம் இல்லை என்று அரச அதிகாரிகளும் உறுதிப்படுத்தி விட்டார்களானால், இங்கு நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அனைவரும் வெளியேறிவிடுவார்களா? ஏனெனில் அரச காணிகளை இனங்கண்ட பின்னர் படையினர் தனியார் காணிகளைக் கையளிப்பர் என்று ஆளுநர் கூறியிருந்தாரே!

# போலியான ஏகாதிபத்திய எதிர்ப்பு

■ மருதநிலவன்

நாம் வீட்டில் வளர்க்கும் நாய்கள் சிலவற்றுக்கு ஒரு விசேட குணம் உண்டு. வெளியிலிருந்து வேறு ஒரு நாய் வந்து எமது படலையில் எட்டிப்பார்த்து விட்டால் போதும். பெருங்குரலெடுத்துக் குரைத்துத் துரத்த ஆரம்பித்து விடும். எட்டிப்பார்த்த நாய் சிறுது தூரம் ஓடி விட்டு திருப்பிக் குரைக்க ஆரம்பித்தால், எமது விரட்டிய நாய் ஓடி வந்து வீட்டு எல்லைக்குள் புகுந்துநின்று கொண்டு, வேலிக்குள் நின்றே பெருங்குரலெடுத்துக் குரைக்க ஆரம்பித்துவிடும். எஜமான் பக்கத்தில் நின்றுவிட்டால் அதன் குரைப்புக்கு அளவு கணக்கே இல்லை. வீட்டு நாயின் வீரமெல்லாம் வேலிக்கு உள்ளே மட்டும்தான். வெளியில் இல்லை.



இப்போது இலங்கை அரசியலிலும் வீட்டுக்குள் நின்று குரைக்கும் வீரம் மேலோங்கி விட்டது. இன்று பல அரசியல்வாதிகள் தம்மை ஈடிணையற்ற தேசபக்தர்களாகவும், ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரர்களாகவும் காட்டுவதில் தங்கள் வீர சூரத்தனத்தைக் காட்டி வருகின்றனர். மேற்கு நாடுகளோ அல்லது இந்தியாவோ இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகவோ, தமிழ் மக்கள் மீது இடம் பெறும் இன ஒடுக்குமுறை தொடர்பாகவோ ஏதாவது ஒரு நியாயமான கருத்தை வெளியிட்டு விட்டால் இவர்கள் கொதித்தெழுந்து விடுவார்கள்.

இலங்கையில் சுயாதிபத்தியத்தை மீறுவதாகவும், உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகவும் அலறியடிக்க ஆரம்பித்து விடுவார்கள். ஆனால் சுற்றுலாத்துறை வளர்ச்சி, துரித அபிவிருத்தி போன்ற போர்வையில் இந்த நாடு பல துண்டுகளாக்கப்பட்டு தொன்னூற்றொன்பது வருடக் குத்தகைக்கு ஏகாதிபத்திய பல்தேசிய நிறுவனங்களுக்கு விற்கப்படுவதைக் கண்டு கொள்ளவே மாட்டார்கள்.

ஏகாதிபத்தியங்களில் நலன்களுக்கு இசைவாக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பன போடும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு ஏற்படுத்தப்படும் விலைவாசி அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு உயர்வு என்பன பற்றியோ சம்பளங்கள் போதியளவு அதிகரிக்கப்படாமை பற்றியோ, எரிபொருள் விலையுயர்வு பற்றியோ இவர்கள் வாய்திறப்பதில்லை. அந்நிய முதலீடுகள் என்ற பேரில் எமது நாட்டின் மூலவளங்களும், மனித உழைப்பும் ஏகாதிபத்திய சக்திகளால் கொள்ளையடிக்கப்படுவது பற்றி இவர்கள் அக்கறை கொள்வதில்லை. பொருளாதார ரீதியாக ஆடை ஏற்றுமதி, சுற்றுலாத்துறை போன்ற பல துறைகளில் எமது பொருளாதாரம் ஏகாதிபத்தியத் தேர்ச்சில்லில் கட்டப்பட்டு விட்டதைப் பற்றி இவர்கள் கவலைப்படுவதில்லை.

இவற்றிலிருந்து நாம் இவர்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு சுலோகத்தினதும், தேசிய சுயாதிபத்தியம் பற்றிய கூக்குரல்களின் அடிப்படைகளை நாம் புரிந்து கொள்ள முடியும். அண்மையில் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ரக்கின், இலங்கையின் வடக்குக் கிழக்கில் போர் முடிந்து மூன்றாண்டுகள் கழிந்து விட்ட நிலையில் இராணுவம் அகற்றப்பட வேண்டும் எனவும், அங்கு சிவில் நிர்வாகம் நிலை நிறுத்தப்பட வேண்டும் எனவும் கருத்து வெளியிட்டிருந்தார்.

இலங்கையின் அதிதீவிர தேசபக்த சக்திகளாகத் தம்மை காட்டிக் கொள்பவர்களுக்கு இந்தக்கருத்து பெரும் சினத்தை மூட்டிவிட்டது. பிரிட்டன் தூதுவரை நாட்டை விட்டே வெளியேற்ற வேண்டும் எனக் கூறுமளவுக்கு அவர்களின் தேசபக்தி கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது.

இது அப்படியொன்றும் ஆச்சரியப்படக் கூடிய நடைமுறையல்ல. தமிழ் மக்கள் தொடர்பாகவோ, தமிழ் மக்களுக்கு இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் அநீதிகள் தொடர்பாகவோ சர்வதேச அரங்கில் சில அக்கறைகள் காட்டப்படும் போது இவர்களால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை.

பிரிட்டன் தூதுவரின் கருத்துத் தொடர்பாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அவரை அழைத்துத் தனது அதிருப்தியைத் தெரிவித்தார். ஒரு நாடு வெளியிடும் கருத்து இன்னொரு நாட்டால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத நிலையில், தனது ஆட்சேபனையைத் தெரிவிப்பது வழமையான ராஜதந்திர நடைமுறை.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் அதிருப்தி தெரிவிப்புடன் அதிதீவிர தேசபக்தர்கள் திருப்தியடைந்து விடவில்லை. வேலிக்குள் நின்று குரைக்கும் வீராவேசத்தை ஆரம்பித்து விட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தில் விமல் வீரவன்சவைத் தலையாகக் கொண்டதும், ஆளும் தரப்புக் கூட்டணியில் அங்கம் வகிப்பதுமான தேசிய சுதந்திர முன்னணி ஒரு ஊடகவியலாளர் சந்திப்பை நிகழ்த்தியது. அதில் பிரிட்டன் தூதுவர் நாட்டுக்கு விரோதமான கருத்தை வெளியிட்டதாகவும், இது நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது எனவும், அதனால் அவரை நாட்டைவிட்டு உடனடியாக வெளியேற்ற வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளது. அதே வேளையில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் குணதாச அமரசேகர பிரிட்டன் தூதுவர் வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றி விட்டு, அங்கு பிரிட்டன் படைகளைக் கொண்டு வந்து நிறுத்தும் நோக்குடன் செயற்படுகிறார் எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

இவர்களின் கருத்துப்படி பிரிட்டன், இலங்கையைக் கைப்பற்ற நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு காத்திருக்கிறது எனச் சிங்கள மக்களை நம்ப வைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது புரிகிறது. இதன் நோக்கம் அவ்வளவு மட்டமாகத்தான் இருக்க முடியும். ஏனெனில் இப்படியான அசிங்கமான, அரசியல், நாகரிகமற்ற, எவ்வித ஆதாரங்களுமே இல்லாத, சிறுபிள்ளைத் தனமான கருத்துக்களை பிரிட்டனோ அல்லது வேறு எந்த ஒரு நாடுமோ பொருட்படுத்தப் போவதில்லை.

இவர்கள் பிரிட்டன் தூதுவரை இலங்கையின் விரோதியாகச் சித்தரிக்க, ஜனாதிபதியோ பிரிட்டன் மகாராணி முடிசூடி 60ஆவது நினைவு விழாவில் கலந்து கொண்டார். அங்கு தமிழர்கள் நடத்திய எதிர்ப்புப் பேரணிகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக பிரிட்டன் படைகளின் திரைக்குள் தான் ஒளிந்து கொள்ள வேண்டிய நிலையும் அவருக்கு ஏற்பட்டது.

இந்த அதிதீவிர தேசபக்தர்களால் எதிரிகளாகச் சித்திரிக்கப்பட்ட, இலங்கையை ஆக்கிரமிக்கப் போவதாகக் கூறப்பட்ட பிரிட்டன் படையினரே ஜனாதிபதிக்கு பாதுகாப்பு வழங்கினர். இது நகைப்புக்கிடமானதாக இவர்களுக்குப் படவில்லை. ஏனெனில் இவர்கள் காட்டும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பூச்சாண்டியில் ஒருபோதும் உண்மையிருப்பதில்லை.

இலங்கையில் போரின் இறுதி நாள்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு தனக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஐ.நா செயலர் பான் கி-மூன் ஒரு நிபுணர் குழுவை அமைத்தார்.

உடனே கொதித்து எழுந்த தேசிய சுதந்திர முன்னணி ஐ.நா செயலருக்கு எதிராகவும், ஐ.நா. சபைக்கு எதிராகவும் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. கொழும்பிலுள்ள ஐ.நா செயலகத்தின் மீது தாக்குதல் நடத்தி அதை ஒரு நாள் முடங்கச் செய்தது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச ஐ.நா நிபுணர் குழுவைக் கலைக்கக் கோரி சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினார். மூன்றாம் நாள் ஜனாதிபதி கொடுத்த இளநீருடன் போராட்டம் முற்றுப் பெற்றது.

ஐ.நா. நிபுணர் குழு கலைக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, அது விசாரணைகளை நடத்தி அறிக்கையும் சமர்ப்பித்துவிட்டது. அதை இலங்கை அரசு பிடிவாதமாக ஏற்றுக் கொள்ள மறுத்த போதும், அது போர்க்குற்றவாளிகளின் தலைக்கு மேல் தொங்கும் கத்தி என்பதில் எந்தவித ஐயமுமில்லை. விமல் வீரவன்ஸ அவர்களின் போராட்டம் வேலிக்குள் நின்று குரைத்த கதையாகவே போய்விட்டது.

அன்று போலவே இன்றும் இவர்கள் பிரிட்டன் தூதருக்கு எதிராகச் சீறி விழுந்து கொண்டிருக்கப் பாதுகாப்புச் செயலர் பிரிட்டன் தூதரைச் சமாதானப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதாவது வடக்குக் கிழக்கில் இராணுவ முகாம்களை அகற்றும்படி தமிழ் மக்கள் கோரவில்லை எனவும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினரே கேட்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். அது மட்டுமன்றி இராணுவ முகாமாக இருப்பதால் தமிழ் மக்களுக்கு பொருளாதார நன்மைகள் உண்டு எனவும் கூறியுள்ளார்.

இது உண்மைக்குப் புறம்பானது என்ற போதிலும் பிரிட்டன் தூதுவரை திருப்திப்படுத்தும் நோக்கம் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளையில் இராணுவ பேச்சாளரோ 2007 இல் வடக்கில் 50000 படையினர் இருந்ததாகவும், 2010இல் 35000 பேர் இருந்ததாகவும், தற்சமயம் 15000 பேர் இருப்பதாகவும் பாதுகாப்பு நிலைமைகளின் அடிப்படையில் மேலும் குறைக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

அடிப்படையில் இந்த அதிதீவிர தேசபக்தர்கள் எஜமானர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் வேலிக்குள் நின்று குரைத்துச் சிங்கள மக்களை ஏமாற்றி வருகின்றனர் என்பது தான் உண்மை.

# அணுஆயுத மயமாகும் தென்னாசியா

திருச்செந்தூரன்,
முதுகலை மாணவன்,
சர்வதேச உறவுகள் கற்கை நெறி

தென்னாசியா அணுவாயுத மயமாகி வருகின்றதா? என்ற கேள்வி தென்னாசிய அரசியலை அவதானித்து வரும் சாதாரணர்களுக்கும் எழுவது யதார்த்தமானது. ஏனெனில் அண்மை நாள்களில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தொடர்ச்சியாக ஏவுகணைகளைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்தப் போட்டியை அவதானிக்கும் போது தென்னாசியா அப்படியொரு நிலை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியிருப்பதாகவே சொல்லத் தோன்றுகின்றது.

அண்மையில் ஸ்ரொக்கொம் சர்வதேச சமாதான ஆய்வு நிறுவனத்தின் பிரதித்தலைவர் டானியல் நோர்த், அதன் 2011 ஆம் ஆண்டறிக்கையில், இந்தியா, பாகிஸ்தான் இடையே அதிகரித்து வரும் அணுவாயுதப் போட்டி காரணமாகப் பிராந்தியத்தில் அச்ச சூழல் தோன்றியுள்ளது'' என்றார். அந்த அறிக்கையில், இந்தியா 80-100 வரையான அணுகுண்டுகளையும், பாகிஸ்தான் 90-120 வரையிலான அணுகுண்டுகளையும் வைத்திருக்கின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டளவில் இந்த இரு நாடுகளும் அண்ணளவாக 60 அணுகுண்டுகளையே கொண்டிருந்தன. தற்போதைய சூழலில் இந்தியாவினைப் பாகிஸ்தான் மிஞ்சிவிட்டது என்பது தான் இந்தத் தரவிலிருந்து வெளிப்படுகின்றது.

கடந்த ஐந்து வருடங்களில் பாகிஸ்தான் 50 அணுகுண்டுகளைத் தயாரித்துள்ளது. 2010 ஆம் ஆண்டிலிருந்து பாகிஸ்தான் ஆண்டொன்றிற்கு 9-15 வரையிலான அணுகுண்டுகளை தயாரித்து வருகின்றது. இந்த வேகத்தில் பாகிஸ்தான் அணுகுண்டுகளைத் தயாரிக்குமாயின் அடுத்த தசாப்தத்தில்பிரான்ஸ், மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளை விஞ்சும் அளவுக்கு பாகிஸ்தான், அணு ஆயுத எண்ணிக்கையினை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனாலும் இந்தியா இப்போதைய நிலவரப்படி பாகிஸ்தானை முந்தியே செல்கின்றது எனக் கூறப்படுகின்றது. அதவாது இப்போது பாகிஸ்தானை விட 10 மடங்கு அணுகுண்டினை இந்தியாவினால் தயாரிக்க முடியும். பாகிஸ்தான் ஆண்டுக்கு 30-35 மெற்றிக்தொன் யுரேனியத்தினையே செறிவாக்குகின்றது. ஆனால் இந்தியா ஆண்டுக்கு 320-350 மெற்றிக்தொன் யுரேனியத்தினை செறிவாக்குகின்றது. இது பாகிஸ்தானின் யுரேனியம் செறிவாக்கும் திறனை விட இந்தியாவின் யுரேனியம் செறிவாக்கல் அதிகமாயிருப்பதைக் காட்டுகின்றது. இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் 2007 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட '123' ஒப்பந்தம், இந்திய அணுஆயுத தயாரிப்புக்கு உத்வேகம் அளித்துள்ளது. சீனா அண்மையில் பாகிஸ்தானின் லாகூர் பிரதேசத்தில், காகிஸ்கெட் என்னும் இடத்தில் யுரேனியம் செறிவாக்கல் நிலையம் ஒன்றினை பாகிஸ்தானுக்கு அமைத்துக் கொடுத்துள்ளது. இதனால் பாகிஸ்தானின் அணுவாயுத தயாரிப்பு மேலும் விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது இவ்வாறு இருக்க, இந்த இரு நாடுகளும் தனியே அணுகுண்டுகளை மட்டும் தயாரிப்பதில் நின்றுவிடாது, அதனைக் காவிச் செல்லும் ஏவுகணை தயாரிப்பிலும் அது தீவிரம் காட்டி வருகின்றது. கடந்த ஏப்ரல் மாதம் இருபதாம் திகதி இந்தியா அக்கினி - 5 இனைப் பரிசோதித்தது. இதற்கு பதிலடியாக அடுத்த வாரமே பாகிஸ்தான் காதிப் என்ற ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்தது. இதில் வேடிக்கையான விடயம் என்னவெனில் இந்தியாவின் அக்கினி 5 ஐயாயிரம் கிலோமீற்றர் ஏவுதிறன் கொண்டதாக அமைகின்ற வேளை, காதீப் 750கிலோமீற்றர் ஏவுதிறன் கொண்டதாகவே காணப்படுகின்றது. இதிலிருந்து இந்தியா நெடுந்தூர ஏவுகணைகளையும், பாகிஸ்தான் குறுந்தூர ஏவுகணைகளையும் தயாரிப்பதில் அண்மைக் காலத்தில் நாட்டம் காட்டி வருகின்றமை புலனாகின்றது. சர்வதேச அணுவாயுதப் பாதுகாப்பு மையத்தில் ஆய்வாளரான அனுபம் கிறிஸ்த்பத்தர் கருத்தின்படி, 'இந்தியாவினதும் பாகிஸ்தானதும் ஏவுகணைகளின் வீச்சு எல்லை இந்தியா - சீனாவினையும், பாகிஸ்தான் - இந்தியாவினையும் இலக்கு வைப்பதனை வெளிப்படையாக சுட்டிநிற்கின்றது' என்றார்.

இந்த இரு நாடுகளும் நீர்மூழ்கிக் கப்பல்களைத் தயாரிப்பதிலும் அண்மைக்காலமாக முனைப்புக்காட்டி வருகின்றன. எனினும் அதன் முயற்சிகள் நீண்ட காலத்தினை நோக்காகக் கொண்டு, ஆமை வேகத்திலேயே காணப்படுகின்றன. ஆனால் இந்தியா தற்போது அணுகுண்டு, ஏவுகணை தயாரிப்பு வேகத்திலும் பார்க்க அணுவாயுத ஏவுதிறன் கொண்ட நீர்மூழ்கிக் கப்பலை தயாரிப்பதிலேயே தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. இந்த முயற்சிக்கென இந்தியா 2007 ஆம் ஆண்டு ரஷ்யாவிடம் இருந்து 460 மில்லியன் அமெரிக்கா டொலர் பெறுமதியான இரண்டு அணு நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொள்வனவு செய்துள்ளது.

ஆக,இந்தியாவும் பாகிஸ்தானும் தம்முள் உள்ள முரண்பாடு மற்றும் தேசிய பாதுகாப்புக் காரணமாக அணுகுண்டு தயாரிப்பு, ஏவுகணை தயாரிப்பு, அணு நீர்மூழ்கி தயாரிப்பு, என்பவற்றின் தயாரிப்பதில் போட்டி போட்டு செயற்பட்டு வருகின்றன. அண்மைக் காலத்தில்அமெரிக்கவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவில் விரிசல் நிலை ஏற்பட்டு வருவதனால் அது பாகிஸ்தானில் அணு ஆயுத தயாரிப்பு முயற்சியினைக் குறைக்கும் என எதிர் பார்க்கலாம்.ஆனாலும் தனது அணுவாயுதத் தயாரிப்பு முயற்சிகளை பாகிஸ்தான் குறைத்துக் கொள்ள வாய்ப்பில்லை. ஏனெனில் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அணுவாயுத தயாரிப்பு விடயத்தில் வழங்கிய உதவியிலும் பார்க்க, பன்மடங்கு உதவியினை தற்போது சீனா பாகிஸ்தானுக்கு வழங்கி வருகின்றது. மறுபுறம் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் உறவுகள் நெருக்கமடைவதனால் அமெரிக்காவில் உதவியினைக் கொண்டு இந்தியாவும் தனது அணுவாயுத தயாரிப்பினை அதிகரித்து வருகின்றது. இவ்வாறான சூழலில் அமெரிக்கா இந்தியாவுடன் கொண்டிருந்த நட்பு காரணமாக இந்தியாவின் வேண்டுகோளுக்கு அமைய பாகிஸ்தானின் அணுவாயுத தயாரிப்பினை தடுக்க அல்லது கட்டுப்படுத்த எதிர்வரும் காலங்களில் முயலக் கூடும்.

ஸ்ரொக்கொம் சர்வதேச சமாதான ஆய்வு நிறுவனத்தின் தலைவர், 'பாகிஸ்தான் எந்த வேகத்தில் அணுகுண்டுகளைத் தயாரிக்கின்றதோ அந்த வேகத்தில் அணுகுண்டுகள் தீவிரவாதிகளின் கைகளுக்கு போய்விடும்' என அதன் 2011 ஆம் ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய ஆதாரத்தினைக் காரணமாகக் கொண்டு அமெரிக்கா பாகிஸ்தானின் அணுவாயுத தயாரிப்பினை கட்டுப்படுத்தும் முயற்சியில் இறங்கக் கூடும்.

இந்த நிலையில், தென்னாசியா அணுவாயுத மயமாவதை எவராலும் தடுக்க முடியாது என்றே குறிப்பிடத் தோன்றுகின்றது. ஏனெனில் அமெரிக்கா சீனாவுக்கு எதிராக இந்தியாவினை வளர்ப்பதும், சீனா அமெரிக்காவுக்கு எதிராகப் பாகிஸ்தானை வளர்க்கின்ற போக்கும் சமகால பிராந்திய அரசியலை உற்று நோக்கும் போது புலனாகின்றது.

அதற்காக அமெரிக்கா, இந்தியாவின் அணுவாயுத திட்டத்தினையும், சீனா, பாகிஸ்தானின் அணு ஆயுத திட்டத்தினையும் தடுப்பதிலும் பார்க்க, தம்மாலான உதவிகளையும், ஊக்கத்தையும் அளிக்கும் செயற்பாட்டிலேயே களமிறங்கியிருக்கின்றன. தென்னாசிய பிராந்தியம் எதிர்காலத்தில் அணுவாயுத அச்சமுள்ள பிராந்தியமாகத் திகழும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. 1982 ஆம் ஆண்டு அணுவாயுதப் பரவல் தடைச் சட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், அணுவாயுத மற்ற பிராந்தியமாகப் பிரகடனப் படுத்தப்பட்ட தென்னாசியா, தற்போது 2012 ஆம் ஆண்டில், அணுவாயுத மயமாக்கப்பட்ட பிராந்தியம் ஒன்றுக்கான சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது.



**2011 ஆம் ஆண்டு ஸ்ரொக்கொம் சர்வதேச சமாதான ஆய்வு நிறுவனத்தின் ஆண்டறிக்கையில் இந்தியா 80-100 வரையான அணுகுண்டுகளையும் பாகிஸ்தான் 90-120 வரையிலான அணுகுண்டுகளையும் வைத்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.**

# அலையவிடப்படும் அகதிகள்

கா.கணேசதாசன்

ஜூன் 20 ஆம் திகதி உலக அகதிகள் தினமாகும். 2000 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை இந்த தினத்தைப் பிரகடனப்படுத்தியது. ஆபிரிக்காவின் அதிகஷ்ட நாடுகளான சோமாலியா, எதியோப்பியா, நைஜீரியா போன்ற நாடுகளின் வறுமையைக் குறைப்பதற்கான வேலைத் திட்டங்களை விழிப்புணர்வுள்ளதாக இந்தத் தினம் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்டாலும், இப்போது உலகம் முழுவதும் இருக்கின்ற அகதிகளுக்கான ஒரு பொதுத் தினமாக இது அனுஷ்டிக்கப்படுகிறது.

உள் நாட்டில் ஏற்படும் போர், கலவரம், வறுமை, இயற்கைப் பேரிடர் போன்ற காரணிகளால் அகதிகள் உருவாக்கப்படுகின்றனர். இவர்கள் தம் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து உள் நாட்டில் வேறொரு பிராந்தியத்திலோ அல்லது பிற நாடுகளிலோ வாழத் தலைப்படுகின்றனர். உச்சமான மனித உரிமைகளும்,ஜனநாயக விருந்தோம்பல்களும் இருக்கும் நாடுகளில் மட்டுமே இவ்வாறு இடம்பெயர்ந்து செல்லும் அகதிகள் மனிதர்களாக மதிக்கப்படுகின்றனர்.

அடிப்படை மனித நேயப் பண்புகள் கூட இல்லாத ஆபிரிக்க மற்றும் மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள்,தமது நாட்டு அகதிகளை மிருகங்களையும் விட மோசமான நிலையில் வைத்தே கவனிக்கின்றன. இதற்கு நாம் சோமாலியாவுக்கோ,பிற ஆபிரிக்க நாடுகளுக்கோ உதாரணம் தேடிச் செல்லத் தேவையில்லை. நமது நாடு இதற்கு மிகப் பொருத்தமான எடுத்துக்காட்டு.

போர் மற்றும் அவ்வப் போது ஏற்படும் இயற்கைப் பேரிடர் போன்ற காரணிகளால் இலங்கையில் இடப் பெயர்வுகள் ஏற்படுகின்றன. இந்த நாட்டில் வாழும் தமிழர்கள் இது வரை மிக மோசமான இடப் பெயர்வுகளை சந்தித்திருக்கின்றனர். அவர்களின் வாழ்வுரிமையும், அரசியல் உரிமையும் 1983 ஆம் ஆண்டிலிருந்து பெரும்பான்மை சிங்கள அரசினால் மறுக்கப்பட்டு வருவதால் தமிழர்கள் இவ்வாறான இடப்பெயர்வுகளை சந்திக்க நேர்ந்தது. உரிமைப் போராட்டம் ஆயுத வடிவம் எடுத்ததால் தமிழர்கள், இலங்கை அரசின் வன்முறைகளால் பாதிக்கப்பட்டு உலகம் சுற்றும் அகதிகள் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இந்த நிலை 2009 ஆம் ஆண்டு வரைக்கும் நீடித்தது. அந்த ஆண்டில் 4 இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் அகதிகள் ஆக்கப்பட்டனர்.அவர்கள் அனைவரும் திறந்த வெளிச் சிறைச்சாலைகளான நலன்புரி நிலையங்களில் அடைக்கப்பட்டனர். அகதிகளின் உரிமைகளில் அக்கறை உடைய சர்வதேச தொண்டு நிறுவனங்கள் அவர்களை விடுதலை செய்யக் கோரி, கொடுத்த அழுத்தத்தால் கட்டம் கட்டமாக தமிழ் அகதிகள் தம் சொந்த இடங்களுக்கு மீளக்குடியமர்த்தப்பட்டனர். வாழ்வாதாரத்துக்கான அனைத்து மூலங்களும் வெறுமையாக்கப்பட்ட நிலையில் அந்த மக்கள் இப்போதும் சொந்த இடங்களில் அகதிகளாக வாழ்கின்றனர்.

இதைவிட வன்னியில் இறுதிப் போர் இடம்பெற்ற இடங்களுக்குரிய மக்கள் இன்னமும் மீள்குடியேற்றப்படாது ஒன்றுக்கு மேற்பட்ட நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கு குறைந்தளவிலான நிவாரண உதவிகள் தெளித்து விடப்படும் நிலையே இன்றும் நீடிக்கின்றது. போர் முடிந்து மூன்று ஆண்டுகள் கழிந்து விட்ட நிலையிலும் இந்தத் தமிழ் அகதிகளுக்கு விடுதலை எட்டாக்கனியாகவே இருந்து வருகிறது.

இந்த ஆண்டில் உலகம் முழுவதும் 4.4 பில்லியன் அகதிகள் இருப்பதாக ஐ.நா புள்ளிவிவரம் ஒன்று தெரிவிக்கின்றது. ஆனால் அதில் இலங்கையில் இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகி அகதிகளாய் அலையும் தமிழர்கள் உள்ளடக்கப்பட்டிருப்பார்கள் என்பது கேள்விக்குறியே. ஏனெனில் இலங்கை அரசைப் பொறுத்த வரை இந்த நாட்டில் அகதிகள் இல்லை.அது வெளியிடும் எந்த அறிக்கையிலும் அகதிகள் பற்றிய சரத்து இடம் பெறாது. ஆகவே சர்வதேச நிறுவனங்களின் கணிப்பிலும் இலங்கையில் அகதிகள் இல்லை என்ற முடிவு எட்டப்பட்டிருக்கும்.

# பால் நினைந்து ஊட்டும் தாய்

'எனக்குப் பசித்தால் கடவுளுக்குப் பசிக்கும்' என்ற பொருளில் ''யான் பசித்த போதெல்லாம் தான் பசித்ததாகி'' என்று பாடினார் வடலூர் வள்ளல். அபரிமிதமான கடவுள் நம்பிக்கை உடையவர்கள், கடவுளின் அன்பு நெருக்கத்தைப் பலமுறை அனுபவித்து இருப்பார்கள். ஆனால் இந்த நம்பிக்கை, மனித முயற்சிக்கு, உழைப்புக்கு விரோதமாகி விடக் கூடாது.

உழைக்காமலேயே உட்கார்ந்து கொண்டு குடும்ப வாழ்வில் இருந்தபடி ''கடவுள் எனக்குச் சோறு போட்டால் என்ன'' என்று கேட்பது அபத்தம், அறிவீனம். உழைப்பது நமது கடமை. நமக்குப் படி அளக்க வேண்டியது இறைவனின் கடமை என்பதுதான் சரியான வாழ்க்கை முறை.

'என் கடன் பணி செய்து கிடப்பது' என்று அறிவித்த நாவுக்கரசர் ''தன் கடன் அடியேனையும் தாங்குதல்'' என்று கடவுளுக்கு நினைவூட்டினார்.

சமயத்துக்கும் சமூகத்துக்கும் உழைத்த வீரத் துறவி விவேகானந்தர், ''பாடுபடுவது தம் கடமை; தமக்குப் படியளப்பது இறைவன் கடமை'' என்றே வாழ்ந்தார்.

ஒரு முறை விவேகானந்தர் ரயிலில் பயணம் செய்தபோது அவரது காவி உடையையும் துறவுத் தோற்றத்தையும் ஒருவர் கேலி செய்தார். உடல் உழைப்பின்றி சந்நியாசிகள் ஊரை ஏமாற்றுகின்றனர் என்று கிண்டல் செய்தார்.

உடல் உழைப்பு மட்டும் உழைப்பல்ல; அறிவைக் கொண்டு சமுதாயத்துக்குப் பயன்படும் வகையில் செயற்படுவதும் உழைப்பு என்றார் சுவாமி. ஆனால் மற்றவரோ சந்நியாசிகள் உழைக்காமல் ஊரை ஏமாற்றி உண்டு கொழுக்கின்றனர் என்று கருத்தை வலியுறுத்தினார்.

'நீர் எமக்கு உணவு வழங்குவதில்லை. கடவுள் எமக்குப் படியளக்கிறார். உணவு தருகிறார்'' என்றார் விவேகானந்தர். 'அதெல்லாம் இல்லை.. நீர் பிச்சை எடுப்பதால் உணவு தருகிறார்கள். நீர் பிச்சை கேட்காமல் கைகளைக் கட்டிக் கொண்டு பேசாமல் இருந்தால் கடவுள் உமக்குச் சோறிடுவாரா?'' என்றார் அந்த பிரச்சினைக்காரர் . ''இடுவார்'' என்றார் சுவாமி.

உணவு வேளை வந்தது. ரயில் நிலையத்தில் இறங்கி சுவாமி நின்றார். ''கடவுளாவது உணவு தருவதாவது..'' என்று அவர் கேலியாக நினைக்க ஆச்சரியம் ஒன்று நடந்தது.

'சுவாமி.. சுவாமி'' என்று கத்தியபடி விவசாயி ஒருவர் கையில் உணவு மூட்டையுடன் ஓடிவந்து வலுக்கட்டாமாகச் சுவாமியிடம் உணவைத் திணித்தார்.வம்புக்காரர் ஆச்சரியமாக அவரைப் பார்த்து. 'ஏன் இப்படிச் செய்கிறார்?'' என்று கேட்டார்.

''ரயில் நிலையத்துக்குப் பக்கத்தில் என் வீடு. நான் படுத்து உறங்கிக் கொண்டிருந்தேன். கனவு வந்தது. கனவில் இதே ஸ்வாமி வந்தார். இவர் பசியாக இருக்கிறார். உணவு கொண்டு போய்க் கொடு என்று ஒரு குரல் கேட்டது. நான் அலட்சியமாகப் படுத்து உறங்கினேன். மீண்டும் அதே குரல் கடுமையாகக் கேட்டது. எழுந்து உணவை அள்ளிக்கொண்டு என்னை அறியாமல் ரயில் நிலையம் நோக்கி வந்தேன். கனவில் கண்ட அதே சுவாமி இவர்தான்'' என்று கூறிவிட்டுப் பலமுறை வணங்கினார் விவசாயி. வம்புக்காரர் வாயடைத்துப் போனார்.

வேடிக்கைக் கதைகூட ஒன்று உண்டு. எப்போதும் கடவுளை வியந்து பேசும் ஆத்திகரை நாத்திகர் ஒருவர் கேலிசெய்ய நினைத்தார். ''கடவுள்தான் உனக்கு எல்லாம் செய்கிறார் என்று அளக்கிறாயே? ஒரு அத்துவானக் காட்டில் உணவோடு நீ இருந்தால் கடவுள் உனக்கு ஊட்டி விடுவாரா? ஒரு வாய் ஊட்டினால் கூட நான் உன் கட்சி'' என்று சவால் விட்டார்.

ஆள் அரவமில்லாத பொட்டல் காட்டில் தட்டு உணவோடு இருவரும் உட்கார்ந்திருந்தனர். நெடுநேரமாகக் கடவுள் வரவும் இல்லை. ஊட்டவும் இல்லை.

நீண்ட நேரம் கழித்து அந்த வழியாக ஒரு வழிப்போக்கன் கடும் பசியுடன் வந்தான். தட்டில் உணவுடன் மௌனமாக உட்கார்ந்திருக்கும் இவர்களைப் பார்த்ததும் அருகில் வந்தான். அவசரமாக உணவை அள்ளித் தின்னப் போனவன் திடீர் என்று யோசித்தான்.

''இந்த உணவில் விஷம் இருக்குமோ, அதனால்தான் இவர் உண்ணவில்லையோ'' என்று நினைத்தவன், இரண்டு கவளம் உணவை எடுத்து வலுக்கட்டாயமாக இருவர் வாயிலும் திணித்தான். பின்னர்தான் சாப்பிட்டான். அவர்கள் சாகாவிட்டால் தான் தின்னலாம் என்கிற எண்ணத்தில்.

எப்படியோ, கடவுள் ஊட்டி விட்டார். உண்மையில் அவர் பால் நினைந்தூட்டும் தாய். ஆனால் அடிக்கடி அந்த வேலையை அவருக்குத் கொடுக்கலாமோ?

உழைக்கத் தெரியாத பிள்ளைப் பருவத்தில்தான் தாய் பாலூட்டுவாள். உணவு தருவாள். வளர வளர தாய்க்கும் சேர்த்து பிள்ளை சம்பாதிக்க வேண்டாமோ? கடவுளையும் புரிந்து கொள்ளுங்கள். கடமையையும் புரிந்து நில்லுங்கள். அது தான் வாழும் வழி.



சுகி.சிவம்



# வாழ்வாதார மேம்பாட்டுக்கு உழைத்த பரு.கிழக்கு அபிவிருத்திச் சங்கம்



**பொது**மக்களின் மேம்பாட்டுக்கு உதவும் பொது அமைப்புகள் குறைந்த பருத்தித்துறை நகரப் பகுதியின் கிழக்குப் பகுதியில், அந்தப் பகுதி மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உழைத்திட அண்மைக் காலத்தில் தோன்றிய அமைப்புகள்தான் பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கமும், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கமும் ஆகும்.

பருத்தித்துறை மூன்றாம் குறுக்கு வீதிச்சந்தி, தும்பளை மணியகாரன் சந்தி, முனை லோட்டன் பிளேஸ், மூன்றாம் குறுக்கு வீதி கடற்கரைச் சந்தி ஆகிய எல்லைகளைக் கொண்ட ஒரு சற்சதுரமான பிரதேசம் தான் பருத்தித்துறை கிராம சேவையாளர் பிரிவு, கடற்றொழிலாளர் சமூகத்தைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தப் பிரதேசத்தில் அனைத்து சமூகத்தினரும் வசித்து வருகின்றார்கள். கடற்றொழில், அரச, தனியார்துறை உத்தியோகத்தர்கள், வர்த்தகம், கூலி, சுயதொழில் உள்ளிட்ட பல்வேறு தொழில்களைப் புரிவோர் அடங்குகின்றனர்.

இவ்வாறான ஒரு பகுதியில் நலிவுற்ற குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும், இந்தப் பகுதியின் அபிவிருத்திக்கும் சேவையாற்ற ஒரு பொது அமைப்பு இல்லாதிருந்தது. இந்தச் சூழ்நிலையில் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த மக்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும், ஏனைய இழந்த தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் இடர்பாடு இருந்து வந்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளையும், ஏனைய தேவைகளையும் பெற்றுக் கொள்ள முடியவில்லையே என இந்தப்பகுதி மக்கள் அப்போதிருந்த பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு பயஸ் இருதயதாஸ் அடிகளாரிடம் எடுத்துக் கூறினார்கள்.

மக்கள் தமது தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதற்கும் இந்தப்பகுதி மக்களை உள்ளடக்கிய பொது அமைப்பு ஒன்று அவசியம். அப்படியான அமைப்பு ஒன்றை மக்களாகிய நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆரம்பித்து அதனைச் செயற்படுத்தி அதன் மூலமாக உங்களது பிரச்சினைகளைத் தீர்த்து தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். அப்படியான அமைப்பு ஒன்றுக்கு நானும் எப்போதும் பக்கபலமாக இருப்பேன் என எடுத்துக் கூறிய பங்குத்தந்தை கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றை ஆரம்பித்தால் அதன் மூலம் பிரச்சினைகளுக்கும், தேவைகளுக்கும் பொறுப்பான அதிகாரிகளைச் சந்தித்துப் பேசி அனைத்தையும் தீர்த்துக் கொள்ள இலகுவாக இருக்கும் என ஆலோசனை வழங்கினார்.

பங்குத் தந்தையின் ஆலோசனைக்கமைய, அவரின் குருமனையில் வைத்து கடந்த 2006 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் திகதி அவரையே போஷகராகக் கொண்டு பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் என்னும் பொது அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சங்கத்தின் தலைவராக மூத்த சமுகசேவையாளர் வின்சன் டி போலும், செயலாளராக தோமஸ் மரியதாஸும் தெரிவானார்கள்.

பங்குத் தந்தையின் ஆலோசனைக்கமைய, அவரின்குரு மனையில் வைத்து கடந்த 2006 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் திகதி அவரையே போஷகராகக் கொண்டு பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் என்னும் பொது அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்தச் சங்கத்தின் தலைவராக மூத்த சமுகசேவையாளர் வின்சன் டி போலும், செயலாளராக தோமஸ் மரியதாஸும் தெரிவானார்கள். இவர்களுடன் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த வேறு சிலரும் நிர்வாகக் குழுவில் இடம் பெற்றிருந்தார்கள்.

பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் என்ற பெயருடன் உதயமான இந்த பொது அமைப்பு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு

கர்ணன்

கிராம அபிவிருத்திப் பிரிவில் 51 ஆவது சங்கமாகப் பதிவு செய்யப்பட்டது. இந்தச் சங்கத்திற்கென ஒரு நிலமோ, கட்டடமோ இல்லாத நிலையில் பருத்தித்துறை பங்குத் தந்தையின் குருமனையிலேயே சங்கத்தின் மாதாந்தக் கூட்டங்கள், சந்திப்புகள் என்பன நடைபெற்று வந்தன.

பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு நிதி உதவிகளைப் பெற்று ஆரம்பத்தில் நலிவுற்ற மீனவர்களுக்கு மீன்பிடி வலை உபகரணங்கள் வழங்குதல் போன்ற சிறு சிறு உதவிகளைப் பெற்றுக் கொடுத்து வந்தது.

இந்த நிலையில் சங்கத்தினால் மேற்கொள்ள வேண்டிய பணிகளைத் திட்டமிட்டு நல்லமுறையில் முன்னேற்றிச் செல்ல சங்கத்துக்கென கட்டடம் ஒன்று இல்லாதது பெரும் குறையாக இருந்தது. அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு கட்டடம் ஒன்றைப் பெற்றுத் தாருங்கள் எனச் சங்கம் கேட்டபோது, காணி ஒன்றை வழங்கினால் கட்டடம் பெற்றுத் தரமுடியும் என அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவித்திருந்தன.

அதற்கமைய சங்கம் காணி ஒன்றைப் பெற முயற்சிகளை மேற்கொண்ட போது பருத்தித்துறை கிழக்கில் இலங்கை கத்தோலிக்க திருச்சபைக்குச் சொந்தமான காணி ஒன்று இருந்தது தெரிய வரவே, கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றைக் கட்டுவதற்கு அந்தக் காணியைத் தந்துதவுமாறு பங்குத் தந்தை அருட்திரு பயஸ் இருதயதாஸ் ஊடாக யாழ்.ஆயர் பேரருட் திரு.தோமஸ் சவுந்தர நாயகத்திடம் விண்ணப்பிக்கப் பட்டது. அந்த விண்ணப்பத்தை யாழ்.ஆயர் ஏற்று திருச்சபைக்குச் சொந்தமான காணியில் 4 பரப்புக் காணியை பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு வழங்கியிருந்தார்.

நெக்டெப், சேவாலங்கா ஆகிய நிறுவனங்கள் கட்டடம் அமைப்பதற்கென அந்த நேரம் 22 லட்சம் ரூபாவை வழங்கின. அந்த நிதியில் இருந்து குறிப்பிட்ட ஒரு சில மாதங்களுக்குள் பருத்தித்துறை கிழக்கு கிராம மக்களின் பங்களிப்புடன் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கான கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

கடந்த 2006 ஆம் ஆண்டு முற்பகுதியில் பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட போதும் மிகக் குறுகிய காலத்தில் அதாவது அடுத்த வருடமான 2007 ஆம் ஆண்டு நிலத்துடன் கூடிய கட்டடம் ஒன்றைச் சங்கம் பெற்றுக் கொண்டமை சங்கத்தின் விடாமுயற்சியை எடுத்துக் காட்டுகின்றது. சங்கத்துக்கென கட்டப்பட்ட முதலாவது புதிய கட்டடத்தை பெரும் பகுதி நிதிப்பங்காளரான நெக்டெப் நிறுவனத்தின் அப்போதைய பணிப்பாளர் குறூஸ் திறந்து வைத்து சங்கத்தின் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

(தொடரும்)



இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் பற்ரீசியா ஏ. புட்டேன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்புக்குச் சென்று மட்டு - திருமலை மறை மாவட்ட ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளையை ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

## பாலையடிவட்டைக்கு மின் விநியோகம்

மட்டக்களப்பு, ஜூன் 21

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பிரதேச மின்அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட மீள்குடியேற்றம்செய்யப்பட்ட பகுதியான பாலையடிவட்டை பகுதிக்கு மின் விநியோகம் வழக்கப்பட்டுள்ளது.

முழு இலங்கைக்குமான ஒளியேற்றும் திட்டத்தின் கீழ் இந்த மின் விநியோகம் வழங்கப்பட்டுள் ளது.

இந்தப் பிரதேசத்துக்குச் சென்ற மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனிடம் இப்பிரதேச மக்கள் விடுத்தவேண்டுகோளின் பேரில் இந்த மின்விநியோகத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

மின்சாரத்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிடம் விநாயகமூர்த்தி முரளிதரன் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் சுமார் இரண்டு கோடியே 60 லட்சம் ரூபா இந்தத் திட்டத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மின்விநியோகத் திட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டதன் மூலம் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடையவுள்ளன என்று மின்சாரசபையின் பிரதேச அத்தியட்சகர் அனுசாந்த் தெரிவித்தார். (ச)

## மீனவருக்கு எரிபொருள் மானியக் கூப்பன்கள்

எருவில், ஜூன் 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மீனவர்களுக்கு எரிபொருள் மானியக் கூப்பன்கள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் அலுவலகத்தில் மாவட்ட கடற்றொழில் பிரதிப்பணிப்பாளர் எஸ்.ரி. ஜோர்ஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பி.எஸ். எம்.சார்ள்ஸ், பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளர் பொன். ரவீந்திரன், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், மீனவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மீனவர்களுக்கும் எரிபொருள் மானியக் கூப்பன்கள் வழங்கப்பட்டன. (ச-31)

## அம்பாறையில் மின்வெட்டு

**மக்கள் பெரும் சிரமம்**

அம்பாறை, ஜூன் 21

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக முன்னறிவித்தல் எதுவுமின்றி அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருகின்றது. இதனால் பொதுமக்கள் ப்ல்வேறு கஷ்டங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த மாவட்டத்தில் கடுமையான உஷ்ணம் நிலவி வருவதால் மக்கள் மிகுந்த அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுவது மேலும் பல சிரமங்களை ஏற்படுத்துகின்றது என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, சிறு குழந்தைகள், நோயாளிகள், மின் உபகரணங்களுடன் தொடர்புடைய தொழிலாளர்கள் ஆகியோர் மின்சாரத் துண்டிப்பு காரணமாக பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். (ச)

# அம்பாறை மக்களின் குறைகளை விரைவில் நிவர்த்தி செய்வோம்

## அங்கு சென்ற அமைச்சர்கள் உறுதியளிப்பு

அக்கரைப்பற்று, ஜூன் 21

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் அம்பாறை மாவட்டத்துக்குச் சென்று மக்களோடு நேரடியாகக் கலந்துரையாடலில் ஈடுபட்டு பல தகவல்களைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், சம்மாந்துறை ஆகிய தொகுதிகளுக்குச் சென்ற குழுவினர் குழுக்குழுவாகப் பிரிந்து கிராமங்கள் தோறும் சென்று மக்களுடன் நேரடியாகக் கலந்து பேசி குறைநிறைகளை அறிந்து கொண்டனர். இவற்றில் முக்கிய விடயங்கள் ஜனாதிபதியின் கவனத்துக்கு உரிய நடவடிக்கைக்காகச் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**ஆதரவாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டுக் கொண்ட அவர்கள் உரிய நடவடிக்கைக்காக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாகவும் கூறிச் சென்றனர்.**

சம்மாந்துறைக்குச் சென்ற அமைச்சர் டிலான் பெரேரா தலைமையிலான குழுவினர் கடந்த சனிக்கிழமை சம்மாந்துறை, நாவிதன்வெளி, இறக்காமம் உள்ளிட்ட பிரதேசங்களுக்குச் சென்று மக்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்து கொண்டனர். இதேபோல், பொத்துவில் தொகுதிக்கு வருகைதந்த அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா உள்ளிட்ட குழுவினர் பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று மக்களைச் சந்தித்து குறைநிறைகளை அறிந்துகொண்டனர்.

பொத்துவில் தொகுதிக்குள்வரும் அக்கரைப்பற்று பிரதேசத்துக்கு கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தலைமையிலான குழுவினர் கடந்த சனிக்கிழமை சென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர்கள் ஆதரவாளர்களைச் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது கட்சி ஆதரவாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டுகொண்ட அவர்கள் உரிய நடவடிக்கைக்காக ஜனாதிபதியின் கவனத்துக்குப் கொண்டுசெல்வதாகவும் தெரிவித்தனர்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்று முதலாம் பிரிவிலுள்ள அனைத்து வாக்களிப்பு பிரிவுகளிலும் உள்ள மக்களைச் சந்தித்து அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

இதன்போது உள்ளூர் அரசியல்வாதிகளாலும், அவர்களது ஆதரவாளர்களாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்கள் புறக்கணிக்கப்படுவது கட்சி ஆதரவாளர்களால் முக்கியமாகச் சுட்டிக் காட்டப்பட்டது .

விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கும்போது, தமது நெல்லை அரசு உத்தரவாத விலைக்குக் கொள்வனவு செய்யவேண்டும், விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில்எரிபொருள் வழங்கவேண்டும் என்ற கோரிக்கைகளையும் முன்வைத்தனர். (ச)

## டெங்கு ஒழிப்பில் மாணவர்கள்

அம்பாறை ,ஜூன் 21

அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பாடசாலை வளாகப் பகுதிகளையும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களுமாகத் துப்புரவு செய்து வருகிறார்கள். மாவட்டத்திலுள்ள கிராமசேவையாளர் பிரிவுகளில் குடியிருக்கும் மக்களின் வளவுகளைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டு துப்புரவு செய்யப்படுகிறது. வீதிக் கரைகளிலுள்ள குப்பைகள், புல் பூண்டுகளை அகற்றும் பணியில் உள்ளூராட்சி சபைகளின் சுத்திகரிக்கும் ஊழியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

கல்லோயா குடியேற்றப் பிரதேசத்திலுள்ள வாய்க்கால்களில் குடியேற்ற மக்கள் நீராடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த வாய்க்கால்களில் நீராடுபவர்களுக்கு 'எலிக்காய்ச்சல்' ஏற்பட்டுள்ளதை வைத்திய அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர். அதைத் தொடர்ந்து இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் குடியேற்ற வாசிகளுக்கு குழாய்நீர் வசதிகளுடன், குழாய்க்கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்படவிருக்கின்றன. மாவட்டத்திலுள்ள பொது இடங்களிலெல்லாம் டெங்கு நுளம்புகள் பரவுவதைத் தடுக்கும் வகையில் குடியிருப்பு சுற்றாடல்களைத் துப்புரவாக வைத்திருக்குமாறு சுவரொட்டிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கிழக்கு அபிவிருத்தி எட்டாக் கனியே

**ஈரோஸ் செயலாளர் கூறிகிறார்**

அம்பாறை, ஜூன் 21

கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி எட்டாக் கனியாகவே உள்ளது என ஈரோஸ் அமைப்பின் செயலாளர் நாயகம் இரா.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியிலுள்ள களுமுந்தன்வெளி விநாயகர் விளையாட்டுக் கழகத்துக்கு ஒருதொகுதி விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்து அக்கிராம மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தில் மட்டும் 59 ஆயிரத்து 712 விதவைகள் உள்ளனர். இதில் இளம் பெண்கள் அதிகம் உள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற நிதிகள் மக்கள் மத்தியில் முறையாகச் சென்றடைவதில்லை. இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாக உற்று நோக்கும்போது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு தரமான - திறமையான தலைவர் இதுவரை காணப்படாத நிலையே உள்ளது. இதனை தற்போது மக்கள் உணர்ந்துள்ளனர்.

எமது ஈரோஸ் அமைப்பு வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்திலும் பல அபிவிருத்திப் பணிகளையும் புனரமைப்பு வேலைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

மக்களை ஏமாற்றும் செயற்பாட்டில் எமது அமைப்பு ஒருபோதும் ஈடுபடமாட்டாது. இந்தக் களுமுந்தன் வெளிக்கிராம மக்களுக்கு 50 கல்வீடுகளையும், 50 மலசலகூடங்களையும், 5 பொதுக் கிணறுகளையும் நான் அமைத்துத் தருவேன் - என்றார். (ச)

## வற்றும் நீர்த்தேக்கங்கள்

நுவரெலியா, ஜூன் 21

தேசிய நீர்மின் கட்டமைப்புக்கு மின்சாரத்தை வழங்கும் காசல்-ரீ, மவுசாகலை நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைவடைந்து வருகின்றது.

மத்திய மாகாணத்தில் தற்போது நிலவும் மழையற்ற காலநிலை காரணமாக இந்த நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் 50 வீதத்தினால் குறைவடைந்துள்ளது எனமின் சாரசபை தெரிவிக்கின்றது.

மவுசாகலையின் நீர்மட்டம் 60 அடியாலும், காசல்-ரீயின் நீர் மட்டம் 43 அடியாலும் கீழ் இறங்கியுள்ளதென மின்சாரசபை தெரிவித்துள்ளது.

காசல்ரீநீர்த்தேக்கம் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் விமலசுரேந்திர நீர்மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி இயந்திரங்கள் 6 இல் ஒன்றில் மட்டுமே மின் உற்பத்தி நடைபெறு வதாக அந்த நிலையத்தின் பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (ச)

## தோட்ட வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

இரத்தினபுரி, ஜூன் 21

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள தோட்ட வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுபாடு நிலவிவருகிறது என தோட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த தோட்ட மக்கள் நோய் வாய்ப்பட்டு வைத்தியசாலையை நாடும்போது அங்கு தகுந்த மருந்து இல்லாத காரணத்தால், வைத்தியர்கள் வெளியில் மருந்து வாங்கிக் கொள்ளுமாறு துண்டு எழுதி கொடுப்பதால் நோயாளர்கள் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றனர் என தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

**வைத்தியர்கள் வெளியில் மருந்து வாங்கிக் கொள்ளுமாறு துண்டு எழுதி கொடுப்பதால் நோயாளர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர்**

தோட்ட மக்களுக்கு நாளாந்தம் சம்பளம் கிடைப்பதில்லை. அவர்களுக்கு மாதம் ஒரு முறைதான் சம்பளம் கிடைக்கும். எனவே அவர்களுக்கு உடனுக்குடன் பணம்கொடுத்து மருந்துகளை வாங்க முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது.

தோட்டத் தொழிலாளர்கள் தோட்டத்தில் வியர்வை சிந்தி காலை முதல் மாலை வரை வேலை செய்கின்றார்கள். அவர்களுக்கு திடீர் என்று நோய் ஏற்படும்போது அவர்கள் தோட்ட வைத்தியசாலைகளையே நாட வேண்டியுள்ளது.

எனவே தோட்ட வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்து வகைகளை பெற்றுக் கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் தோட்ட நிர்வாகம் அக்கறை கொள்ள வேண்டும் என்று தொழிலாளர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச)

## திருமலையில் சுதந்திரக் கட்சியை சீரமைக்கும் பணிகள்

திருகோணமலை, ஜூன் 21

ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைத்து, புனரமைக்கும் பணிகள் திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்த நடவடிக்கைகளில் பத்துக்கும் மேற்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உறவினர்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். எண்ணிய காரியங்கள் எண்ணம்போல நிறைவேறும். உடன்பிறப்புகள் வழியில், எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப்போகும். இரண்டு மூன்று நாள்களாக நீடித்த மனக்குழப்பங்கள் முடிவுக்கு வரும்.

**இடபம்:** உங்களைக் குறை சொல்லும் சிலரிடம் சமாளிப்பீர்கள். உறவினர்கள் சிலருக்காக மற்றவர்களிடம் உதவி கேட்டு அதைச் செய்து கொடுப்பீர்கள். ஓய்வெடுக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு ஏதாவது ஒரு வகையில் தொந்தரவு ஏற்படும்.

**மிதுனம்:** தடை, தாமதங்களால் எரிச்சல், கோபம் அடைவீர்கள். சபலங்களை, பேராசைகளைத் தவிர்க்க வேண்டிய நாள். சில வேலைகளை அவசரப்பட்டுச் செய்துவிட்டு, பின்னர் கவலை கொள்வீர்கள். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர், உங்களின் மீது காட்டலாம்.

**கடகம்:** எதிர்பார்த்த உதவிகள் எளிதில் கிடைக்கும் நாள். உடன்பிறப்புக்கள் மீதான பாசம் அதிகரிக்கும். நண்பர்கள் சிலருடன் மனம் விட்டுப் பேசி, உங்களின் சொந்த விடயங்களைச் சொல்வீர்கள். நீண்ட நாள்களாக, உங்களுடன் பேசாத ஒருவர் திடீரென தொலைபேசியில் பேசுவார்.

**சிங்கம்:** சக ஊழியர்கள் திடீர் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளு அதிகரிக்கும். மனைவி வழி உறவுகள் வழியில், சில செலவுகளைச் சந்திப்பீர்கள். நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர், அற்பத்தனமாக நடந்து கொள்வார்.

**கன்னி:** உங்களின் யோசனைக்கு நண்பர்கள் மத்தியில் மதிப்பு, மரியாதை இருக்கும். உறவினர் ஒருவருக்கு ஓடிச்சென்று உதவி செய்வீர்கள். நீண்டநாள் ஆசை ஒன்று நிறைவேறும். சிலரிடம் பொய் சொல்லி உங்களுக்கு வேண்டிய காரியத்தைச் சாதிப்பீர்கள். மாற்று மதத்தினர் விடயங்களில் எச்சரிக்கை அவசியம்.

**நாளை**

ஆனி 08 வெள்ளிக்கிழமை 22.06.2012
திதி: திருதியை மு.இ 10.57 வரை
நட்சத்திரம்: பூசம் பி.இ 04.49 வரை
சுபநேரம்: 05.54- 07.24 வரை
ராகு காலம்: 10.24- 11.54 வரை

**துலாம்:** எதிலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் தடுமாற்றம் ஏற்படும். நாடி வந்த ஒருவருக்கு, பிறரிடம் கடன் வாங்கிக் கொடுத்தாவது உதவி செய்வீர்கள். உறவினர்கள் சிலரின் பாச மழையில் நனைவீர்கள். தாயார் வழியில் அன்புத்தொல்லைகளைச் சந்திப்பீர்கள்.

**விருச்சிகம்:** நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும். சண்டைபோட்ட ஒருவரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். அதிக செலவாகும் என்று நினைத்த காரியம் ஒன்று, குறைந்த செலவில் முடிவுக்கு வரும். மறக்க முடியாத புதிய அனுபவங்களை எதிர்கொள்வீர்கள்.

**தனுசு:** தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்வீர்கள். பணவரவுகளை எதிர்பார்த்து ஏமாந்து போகலாம். சக ஊழியர்களுக்காக, சில செலவுகளைச் செய்து பெருமையாக மற்றவர்களிடம் பேசுவீர்கள். சில பொருள்களை, மறதியாக எங்காவது வைத்துவிட்டு தேடுவீர்கள்.

**மகரம்:** நண்பர்கள் வழியில் மனதுக்கு இனிய உதவிகள் கிடைக்கும். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர், திடீரென வருவார். சிரமத்தில் இருக்கும் ஒருவருக்கு அவசர உதவி செய்வீர்கள். வேலைப் பளு அதிகரிக்கும்.

**கும்பம்:** மற்றவர்களை நம்பி ஒப்படைக்க முடியாமல், நீங்களே செய்ய வேண்டிய வேலைகளால் அவதிப்படுவீர்கள். தொழில் ரீதியாக சிலரின் சந்திப்பு நிகழும். பிறர் மத்தியில் ஒருவர் உங்களை பாராட்டலாம். பணவரவுகளைப் பெறலாம்.

**மீனம்:** உற்சாகமான அனுபவங்களைப் பெறுவீர்கள். சிலரின் தந்திரமான செயற்பாடுகளைப் பார்த்து, கோபம் அடைவீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும். சில வேலைகளை தப்பும் தவறுமாகச் செய்துவிட்டு, மீண்டும் செய்ய நேரிடும். சிலரின் விமர்சனங்களை கேட்க நேரிடும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 7 | | 9 | 8 | 2 |
| 7 | | | 9 | 1 | | | | |
| | 6 | | | 8 | 2 | | 4 | 1 |
| | | | | | 6 | | 9 | |
| 5 | 9 | 1 | 8 | | 7 | 2 | 6 | 3 |
| | 4 | | 1 | | | | | |
| 6 | 7 | | 5 | 3 | | | 1 | |
| | | | | 6 | 8 | | | 7 |
| 3 | 8 | 4 | | 2 | | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 1 | 9 | 4 | 3 | 2 | 5 | 8 |
| 2 | 9 | 5 | 8 | 6 | 1 | 4 | 3 | 7 |
| 3 | 4 | 8 | 5 | 2 | 7 | 6 | 9 | 1 |
| 8 | 1 | 2 | 4 | 7 | 9 | 5 | 6 | 3 |
| 5 | 3 | 4 | 1 | 8 | 6 | 9 | 7 | 2 |
| 9 | 7 | 6 | 2 | 3 | 5 | 1 | 8 | 4 |
| 4 | 2 | 7 | 6 | 5 | 8 | 3 | 1 | 9 |
| 1 | 5 | 3 | 7 | 9 | 2 | 8 | 4 | 6 |
| 6 | 8 | 9 | 3 | 1 | 4 | 7 | 2 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்

## திருமதி கனகேஸ்வரி யோகராசா



புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சென்னையை வதிவிடமாகவும் கொண்ட கனகேஸ்வரி யோகராசா (08-06-2012) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோகராசா அவர்களின் அன்பு மனைவியும், விக்கினேஸ்வரராஜா (நேசன்-கனடா) அவர்களின் அருமைத் தாயும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், சௌந்தரராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும்,ஜெயநாயகி(ரகம்-கனடா) மற்றும் காலஞ்சென்ற கனகராசா அவர்களின் அன்பு மைத்துனியும், விஜயா, யோகசரஸ்வதி(யோகா) அவர்களின் அன்புச் சகலியும், சருஜன்(கனடா), நிருஜன்(கனடா), சரண்யா (கனடா) ஆகியோரின் அன்பு அத்தையும், யசோதரன்(பாரிஸ்), யசிகரன், முரளிதரன், பௌசிகரன், விஜயதரன், பிரதீபன், காயத்திரி ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், தனலெட்சுமி அவர்களின் உடன்பிறவாச் சகோதரியும், ஜெயந்தி, வாணி, கார்த்திகா, நந்தகுமார், சந்திரகுமார், ஜெயகுமார், லோககுமார் ஆகியோரின் அன்பு அன்ரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (20-06-2012) புதன்கிழமை முற்பகல் 10.00 தொடக்கம் பிற்பகல் 12.00 மணிவரை No.71, Arcot Road, Porur, Chennai&600116, India என்னும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு, பின்னர் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

30/1,இலந்தைக்குளம் வீதி,கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(19497)(2-6-9)

# அநுரகுமாரவின் உரையை அஸ்வர் இடைநிறுத்தியதால் சபையில் பெரும் அமளி

கொழும்பு, ஜூன் 21

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை உரையாற்றிக் கொண்டிருந்த ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் உரையை அப்போது சபைக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் இடைநிறுத்தியதால் நேற்று முன்தினம் சபையில் கூச்சல், குழப்பங்கள் ஏற்பட்டன. இதனால் சபை நடவடிக்கைகள் 5 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டன.


அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்ற நிலையியல் கட்டளைக்கு முரணாக உரையாற்றிக் கொண்டிருந்ததால் அவரது உரையை இடைநடுவில் நிறுத்துவதாகக் கூறினார்.

இந்த அறிவிப்பை ஏற்காத எதிர்க்கட்சிகள் கூச்சல், குழப்பங்களில் ஈடுபட்டன. அவரைத் தொடர்ந்து பேச அனுமதிக்குமாறு கூறின. இதனால் சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாதநிலை ஏற்பட்டதால் சபை நடவடிக்கைகள் 5 நிமிடங்கள் ஒத்திப்போடப்பட்டன.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் கடற்றொழில், நீர்வாழ், உயிரின வளங்கள் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதம் இடம்பெற்றது.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அம்பாந்தோட்டையில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் பற்றிப் பேசினார்.

இவர் இன்றைய விவாதத் தலைப்பின் கீழ் பேசாமல் வேறு விடயங்கள் பற்றிப் பேசுகிறார் என்று அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் விக்டர் அந்தோனி ஒழுங்குப்பிரச்சினை ஒன்றைக் கிளப்பி சபாபீடத்திடம் முறைப்பாடு செய்தார்.





அப்போது சபையைத் தலைமை தாங்கிக் கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அவர் அந்த முறைப்பாட்டுக்கமைய விவாதத் தலைப்பின் கீழ் உரையாற்றுமாறு அநுரவுக்கு உத்தரவிட்டார்.

அந்த உத்தரவின் பின் அநுர விவாதத் தலைப்பையும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையும் இணைத்துப்பேசினார். அவ்வாறு பேச முடியாது என்று அஸ்வர் கூறினார்.

இருப்பினும், அநுர தொடர்ந்தும் அவ்வாறே உரையாற்றினார். இதனால் விக்டர் அந்தோனி பல தடவைகள் ஒழுங்குப் பிரச்சினைகளைக் கிளப்பினார். அஸ்வரும் பலமுறைகள் அநுரவிற்கு எச்சரிக்கை விடுத்தார்.

தொடர்ந்தும் விவாதத் தலைப்பை விட்டுவிலகி உரையாற்றினால் நிலையியல் கட்டளை 73 ஆம் பிரிவின் கீழ் உங்கள் உரையை நான் இடைநிறுத்துவேன் என்று அஸ்வர் கூறினார்.

முடிந்தால் நிறுத்துங்கள் என்று அநுர கூறினார். இதன் பின்னரும் அநுர உரையாற்றினார். தான் இந்த உரையை இடைநிறுத்துவதாக அஸ்வர் உத்தரவிட்டு அருந்திக்க பெர்னாண்டோவைப் பேச அழைத்தார்.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சியினர் அநுரவுடன் இணைந்து கூச்சல், குழப்பத்தில் ஈடுபட்டனர். அநுரவைத் தொடர்ந்து பேசவிடுமாறு கூறினர். அஸ்வர் அதற்கு இணங்காது சபை நடவடிக்கைகளை 5 நிமிடங்களுக்கு ஒத்திப்போடுவதாக அறிவித்தார்.

சபை மீண்டும் கூடிய போது பிரதி சபாநாயகர் சந்திம வீரகொடி தலைமை தாங்கினார். அருந்திக்க பெர்னாண்டோவைப் பேச அழைத்தார்.

எதிர்க்கட்சியின் பிரதம கொரடா ஜோன் அமரதுங்க ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பி அநுரவைத் தொடர்ந்து உரையாற்ற அனுமதிக்குமாறு பிரதி சபாநாயகரிடம் கோரினார்.

பிரதி சபாநாயகர் உடன்படவில்லை. சபாபீடம் ஏற்கனவே வழங்கிய தீர்ப்பில் எதுவித மாற்றமும் செய்ய முடியாது எனக் கூறினார்.

சபாபீடத்தின் கருத்துடன் நான் ஒத்துப்போகின்றேன். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் முக்கியமான இந்தப் பிரச்சினை தொடர்பில் உரையாற்ற எனக்கு அனுமதி தாருங்கள் எனக் கேட்டார்.

சபாபீடத்தின் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யமுடியாது. நீங்கள் விரும்பினால் இதை சபாநாயகரிடம் முறையிடுங்கள் எனக் கூறி அனுமதி மறுத்து விட்டார். அதனைத் தொடர்ந்து அருந்திக்க பெர்னாண்டோ உரையாற்றினார்.

(ச-சி)

# யாழ். கட்டளைத் தளபதியே இப்படி என்றால் தமிழரின் குற்றச்சாட்டை எப்படி மறுப்பது?

## தன்னையே அவமதித்ததாக ஆளும் கட்சி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பேசுவதற்கு யாழ்ப்பாணம் சென்ற தன்னை அவமதிக்கும் வகையில் யாழ். கட்டளைத் தளபதி நடந்துகொண்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார். இந்த நிலையில் படையினர் தொடர்பில் தமிழ் மக்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை எப்படி மறுப்பது என்றும் அவர் சபையில் கேள்வி எழுப்பினார்.

கடற்றொழில் நீரியல் வளம் தொடர்பான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

கடற்றொழில் அமைச்சர் அண்மையில் மன்னார் மாவட்டத்துக்கு வந்திருந்தபோது, அந்த மாவட்ட மீனவர்கள் இன்னும் 'பாஸ்' முறைமை நடைமுறையில் இருப்பது தொடர்பில் அமைச்சரிடம் முறையிட்டனர்.

இந்தநிலைமை நீக்கப்படும் என்று கூறியபோதும், கடற்படையினர் 'பாஸ்' நடைமுறையை நீக்கவில்லை. இரவில் கடலில் கண்விழித்து மீன்பிடிக்கும் மீனவர்கள் பகலில் தூங்காது அடுத்த நாள் மீன்பிடிக்கச் செல்வதற்கான 'பாஸ்'களைப் பெறுவதற்காக கடற்படை முகாமில் காத்துக்கிடக்கின்றனர்.



> மீனவர்களின் பாஸ் நடைமுறை தொடர்பில் யாழ். கட்டளைத் தளபதியைச் சந்தித்துப் பேசியபோது அவர் 5 நிமிடங்கள் கூட ஒதுக்கி என்னுடன் பேசவில்லை.

இதுவொரு பரிதாபகரமான நிலையாகும். கடற்றொழில் அமைச்சர் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும்.

கடல் அட்டை பிடிப்பதற்காகவும் சங்கு எடுப்பதற்காகவும் அந்தத் தொழிலில் ஈடுபடும் சுழியோடிகளுக்கு கடற்றொழில் அமைச்சர் பத்திரங்களை வழங்கியுள்ளார்.

ஆனால், இந்தச் சுழியோடிகள் மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய கடலில் சுழற்சிமுறையில்தான் இந்தத் தொழிலைச் செய்ய வேண்டும். யாழ்ப்பாணக் கடலில் இந்தச் சுழியோடிகள் தமது தொழிலைச் செய்வதற்காகச் சென்றபோது இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக யாழ். கட்டளைத் தளபதியைச் சந்தித்துப் பேசியபோது அவர் 5 நிமிடங்கள்கூட எனக்கு ஒதுக்கி என்னுடன் பேசவில்லை. பொருத்தமான பதிலையும் வழங்கவில்லை.

நான் அரச நாடாளுமன்ற உறுப்பினராக (வன்னி) இருந்தும் அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. இந்த நிலையில் இராணுவத்தினர் மீது தமிழ் மக்கள் சுமத்தும் குற்றச்சாட்டுகளை எப்படி மறுப்பது?

அனுமதிப்பத்திரங்கள் உள்ள சுழியோடிகளை கடலுக்குச் செல்லவிடாது தடுக்கும் படையினர் கடற்றொழில் அமைச்சரால் அனுமதி வழங்கப்படாதவர்களுக்கு இத்தொழிலைச் செய்ய அனுமதிக்கின்றனர்.

இது அமைச்சரை அவமதிக்கும் செயலாகும். அமைச்சர் இந்த விடயத்தில் தலையிட்டு பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க வேண்டும் - என்றார்.

(ச-சி)

## நாடாளுமன்றில் தமிழ் மொழியில் பதிலளித்த பிரதிக் கல்வி அமைச்சர்

கொழும்பு, ஜூன் 21

இந்த உயரிய சபையில் தமிழ் மொழியில் பதிலளித்த பிரதிக் கல்வி அமைச்சரின் பெயர் வரலாற்றில் இடம்பெறும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் புகழ்மாலை சூட்டினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது மாத்தறை மாவட்டத்தின் திக்வல்ல கல்வி வலயத்துக்கு உட்பட்ட மா/மின்ஹாத் தேசிய பாடசாலையில் எழுதுநர், முகாமைத்துவ உதவியாளர், நிதியுதவியாளர், ஆவண உதவியாளர் ஆகிய கல்விசாராப் பணியில் தொகுதிப் பதவிகளுக்கு நீண்டகாலமாக நிலவும் வெற்றிடங்கள் தொடர்பில் கல்வி அமைச்சரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் அஸ்லம் கேள்வி எழுப்பியிருந்தார்.

எனினும், கேள்வி நேரத்தின்போது அஸ்லம் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. இதனால் இரண்டாம் சுற்றில் இந்தக் கேள்வியை அஸ்வர் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதிக் கல்வியமைச்சர் விஜித விஜயமுனி சொய்ஸா ''இந்தக் கேள்விக்கான பதிலை சபைக்கு ஆற்றுப்படுத்துகின்றேன்'' எனத் தமிழில் கூறினார். பிரதியமைச்சர் தமிழில் பதிலளித்ததையடுத்து, ''சபாநாயகரே இந்த உயரிய சபையில் தமிழ் மொழியில் பதிலளித்துள்ள இவரின் பெயர் வரலாற்றில் இடம்பிடிக்கும்'' - எனத் தெரிவித்தார் அஸ்வர்.

# ஆழ்கடல் மீன்பிடி வள்ளங்களை கண்காணிக்க புதிய பொறிமுறை

## கூறுகிறார் அமைச்சர் ராஜித

கொழும்பு, ஜூன் 21

ஆழ்கடல் கடற்றொழிலில் ஈடுபடும் படகுகளைக் கண்காணிப்பதற்கான புதிய கண்காணிப்பு முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

கடற்றொழில் நீரியல் வளம் தொடர்பான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் படகுகள் தகுதிகாண் சான்றிதழ் பெற்றிருத்தல் அவசியம். கடற்றொழில் அமைச்சின் கீழ் பதிவுசெய்திருத்தலும் கட்டாயமாகும். கடல் எல்லைகளைத் தாண்டிச் சென்று மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் படகுகளை இந்தப் புதிய முறையின் கீழ் கண்காணிக்க முடியும். தவறிழைக்கும் பட்சத்தில் படகுகள் பறிமுதல் செய்யப்படும்.

> ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் படகுகள் தகுதிகாண் சான்றிதழ் பெற்றிருத்தல் அவசியம். கடற்றொழில் அமைச்சின் கீழ் பதிவுசெய்திருத்தலும் கட்டாயமாகும்.

புதிய முறைமையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன. அந்த நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் விரைவில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்- என்றார்.

(ச-சி)

## சூதாட்டத்தில் ஈடுபட்டோருக்கு அபராதம்

கொழும்பு, ஜூன் 21

நட்சத்திர ஹோட்டலொன்றில் சட்டவிரோத சூதாட்டத்தில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்ட 11 நபர்களுக்கு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் தலா 50 ரூபா அபராதம் விதித்துள்ளது.

குறித்த நபர்கள் ஹோட்டலில் நிர்மாணத்துறையில் பணியாற்றும் தொழிலாளர்கள் என அடையாளம் காணப்பட்டனர். ஹோட்டல் வளாகத்திற்குள் அவர்கள் சூதாட்ட நிலையமொன்றை நடத்தி சட்டவிரோத சூதாட்டத்தில் ஈடுபட்டதாக நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்தனர்.

## இந்தப் போராட்டம் யாழ். நகரில் அல்ல; கொழும்பில்...



அம்பாந்தோட்டை, கட்டுவனவில் இரட்டைக் கொலை சம்பவத்தைக் கண்டித்து மக்கள் விடுதலை முன்னணியினர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## நிலம் வாடகைக்கு தேவை

உள்ளூர் நிறுவனம் ஒன்றிற்கு காட்சியறை அமைப்பதற்கு வெற்றுநிலம் வாடகை/குத்தகைக்கு தேவை. யாழ். பிரதானவீதி (கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி), பலாலி வீதி, பருத்தித்துறை வீதி,K.K.S வீதி, மானிப்பாய் வீதி ஆகிய பிரதான வீதி களில் யாழ். நகரில் இருந்து 2 km சுற்றுவட்டத் திற்குள் இருப்பின் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு:-**

**0772078636, 0776110047**

(சி/920) (15-06)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 06 ★ 03 ★ 1930



விண்ணில் 20 ★ 05 ★ 2012

### அமரர் ஞானேஸ்வரி இரத்தினம்

எமது அன்புத்தெய்வம் நோய்வாய்ப்பட்டிருந்த போது சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் உறவினர்களுக்கும், மறைவுச் செய்தி கேள்வியுற்றதும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தோர், எமது இல்லம் நாடி வந்தோர், மலர்வளையம் வைத்தோர், கண்ணீர்அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோர், மரணச் சடங்கிற்கான ஏற்பாடுகளை செய்தோர், புலம்பெயர் தேசங்களில் இருந்து எமது இல்லம் நாடி வந்து ஆறுதல் தெரிவித்தோர், அனுதாபச்செய்தி அனுப்பியும் மற்றும் சகலவழிகளிலும் ஒத்துழைத்த அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.06.2012) வியாழக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் இடம்பெறவுள்ளதுடன் (24.06.2012) அன்று வீட்டுக்கிரியைகள் இடம் பெறவுள்ளதால் அனைவரையும் கலந்து கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

8 ஆம் வட்டாரம்,
வேலணை மேற்கு, வேலணை


குடும்பத்தினர்.

(16888)(6-8-9)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் தாமோதரலிங்கம்

### (பொறியியலாளர்)



சுழிபுரம், பறாளாய் வீதியைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியாவை (கன்பரா) வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தாமோதரலிங்கம் கடந்த (17.06.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் (பிரபல சட்டத்தரணி) - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், அருட்செல்வத்தின் அன்புக் கணவரும், தாமரைச்செல்வி (வைத்தியர் - ஆஸ்திரேலியா), கலைச்செல்வி (கணக்காளர்-U.S.A), சிவச்செல்வி (U.S.A), கதிர்காமலிங்கம் (கணினி பொறியியலாளர்-ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிவர்த்தனகுமார் (Dr. -ஆஸ்திரேலியா), சிவசபேஷன் (கணக்காளர்-U.S.A), சோமேஷ் (சத்திரசிகிச்சை நிபுணர்-U.S.A), இந்திராணி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும், பிரவீன், காஜத்திரி, கௌரி, குருமயன், லவாணி, கீதாஞ்சலி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (24.06.2012) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தர்மதாசன் முத்திஸ்வரி
(மைத்துனர்)

பறாளாய் வீதி,
சுழிபுரம்.

(19657)(6-8-9)

### 40 வருடங்களாக கவனிப்பாறின்றி வீதிகள்

சங்கானை,ஜூன்21

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக் குட்பட்ட பல வீதிகள் சுமார் 40 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் உள்ளன. இதனால் இப்பாதைகளைப் பயன்படுத்தும் பொதுமக்கள் உட்பட வாகன சாரதிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சங்கானை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அராலி வீதியையும் குளத்தடி வீதியையும் இணைக்கும் பாதை, ஓடக்கரை வீதியிலிருந்து தேவாலய வீதியை இணைக்கும் பாதை போன்ற பல பாதைகள் சீர் செய்யப்படாமல் உள்ளன. இது சம்பந்தமாக பிரதேச சபைக்கு பொதுமக்கள் கையொப்பமிட்டு மனு ஒன்று வழங்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

(ம-29)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்21

யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று முற்பகல் 9 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் என்.தயாளன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி வ.சிவபாலன் கலந்து கொள்கிறார்.

(16)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்21

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு தினம் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல்8.30மணிக்கு கல்லூரியின் பவளர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் கு.வேல்சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் பி.முருகையா கலந்துகொள்கிறார். (16)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111



## மங்களகரமான திறப்பு விழா

இன்று [21.06.2012] வியாழக்கிழமை காலை 7.00 - 8.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

# GOLDEN LINKS

ஸ்தாபனத்தை திறக்க திருவருள் கைகூடியுள்ளது.
இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது சேவைகள்

- மோட்டார் டைனமோ Fan, ரான்ஸ்போமர் றீவைண்டிங்
- மின்சார உபகரணங்கள் பழுதுபார்த்தல்
- வீட்டுமின் இணைப்புக்கள் (திறீபேஸ்) மின் இணைப்புக்கள்
- நீர்க்குழாய் பொருத்துதல், பாத்றூம் கொமட் பிற்றிங்

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் : கோல்டன் லிங்க்ஸ் ,பிரதான வீதி, சங்கானை
077 9670403

(19658)(6-8-9)


## மரண அறிவித்தல்கள்

### சுதன் புண்ணியமூர்த்தி (சிவம்)



நாரந்தனை மத்தியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும்கொண்ட சுதன் புண்ணியமூர்த்தி கடந்த (15.06.2012) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னான் - காந்திப்பிள்ளை மற்றும் நாரந்தனை மத்தியைச் சேர்ந்த காலஞ்சென்ற சிங்கராயா - ரூபி ஆகியோரின் அன்புப் பேரனும், புண்ணியமூர்த்தி - சுலோசனா தம்பதியரின் அன்புப் புதல்வனும் சுவர்ணாவின் அன்புச் சகோதரனும், கோமளாவின் பாசமிகு கணவரும், தேவதாஸ் - மேரி (வவுனியா) தம்பதியரின் பாசமிகு மருமகனும், வினோதன், விமலி, நிறோசனா, வினோத், பிரதீஸ், ஜோர்ஜஸ்ரீபன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் ஜேர்மனியில் இன்று (21.06.2012) வியாழக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. தேவதாஸ்
(மாமன்)

தவசிக்குளம்,
வவுனியா.

(19604) (45.6.9)

### ஸ்ரீமுருகன் அருள் மார்க்கண்டு சுவாமிகள்

(முன்னாள் பட்டின சபை உப தலைவரும், அரச கட்டட ஒப்பந்தகாரரும், சமாதான நீதிவானும்)



மானிப்பாய், லோட்டன்வீதி, மார்க்கண்டேயன் லேனைப் பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மார்க்கண்டு சுவாமிகள் கடந்த (17.06.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - இலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வடிவம்மாவின் அன்புக் கணவரும், ரஞ்சினிதேவி (ஜேர்மனி), மனோகரன் (மனோ அம்பிஸ் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்), யமுனா (ஜேர்மனி), ஸ்ரீகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மசீலன் (ஜேர்மனி), சத்தியசீலன் (ஜேர்மனி), ஞானேஸ்வரி, கௌசி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், றொனி, யூலி, தமறா, றொஷாணி (ஜேர்மனி), சமுத்திரராஜ், கஜன்ராஜ், மதுராஜினி, நர்த்தனா, ஹேராம் (ஜேர்மனி), தன்சஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, இராசு (ஓய்வுபெற்ற சாரதி CTB) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2012) வியாழக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஸ்ரீ முருகன் அடியார்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மா. மனோகரன்
(மனோ அம்பிஸ் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்)

லோட்டன் வீதி,
மார்க்கண்டேயர் லேன், மானிப்பாய்.

(19654)(45.6.9)




மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# புகலிடக் கோரிக்கையாளர்களை இலங்கை நாடு கடத்தக்கூடாது

## அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் கோரிக்கை

புகலிடக் கோரிக்கையாளர்களை இலங்கை அரசு நாடு கடத்தக் கூடாது என்று அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் புகலிடம் கோரியுள்ள வெளிநாட்டுப் பிரஜைகள் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிலையத்தில் தங்களைப் பதிவு செய்துகொண்டுள்ளனர். ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட சில நாடுகளைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கையில் தஞ்சமடைந்துள்ளனர். இவ்வாறு புகலிடக் கோரிக்கை

**ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட சில நாடுகளைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கையில் தஞ்சமடைந்துள்ளனர்.**

விடுத்துள்ள வெளிநாட்டுப் பிரஜைகளை நாடு கடத்த இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது.

எனினும் புகலிடம் கோரியவர்களை நாடு கடத்தக் கூடாது என்றும் அவ்வாறு நாடு கடத்தினால் அதற்கு எதிர்ப்பை வெளியிட நேரிடும் என்றும் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.


இதேவேளை ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதிகள் தொடர்பான பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

## அத்வைதம் மனதில் வரவேண்டும்

நீ ஆசைப்படுவது உன்னிடம் இல்லையென்றால் பிறரிடம் அதைக் கேட்கலாம். நீ ஆசைப்படுவது உன்னிடம் இருக்கும்போது பிறரிடம் நீ ஏன் அதைக் கேட்க வேண்டும்? உன்னிடமுள்ள பஞ்ச பூதங்கள்தான் அவர்களிடமும் உள்ளன. பின் அவர்களிடமிருந்து ஏன் எதையும் எதிர்பார்க்கிறாய்? அது துவைதம், உன்னிடமுள்ள பஞ்சபூதங்கள் அவர்களிடம் இருந்தால் இரண்டும் ஒன்றேயாகும். ஆகவே உனக்கு வேறொன்றும் தேவையில்லை. எனக்கு எந்தப் பொருளும் தேவையில்லை. ஏகம் ஏவா அத்வீதியம் - ஒன்றே ஒன்று இரண்டல்ல. ஏகோஹம் பஹுஸ்யாம், பஹுஸ்யாம் பஹுஸ்யாம். ஒன்றே பலவாயிற்று. ஒரே தங்கம், பல நகைகளாக மாறியது. பஞ்ச பூதங்களிலுள்ள தெய்வத்துவம் எல்லாவற்றிலும் உள்ளது. எவ்வித வேறுபாடும் எங்களுக்கு இல்லை. இதுவே பதார்த்த அத்வைதம். (பொருள்களின் அத்வைத நிலை)

மனிதன் இவற்றைப் புரிந்துகொண்டு இவற்றின் பயிற்சியில் தேர்ச்சி பெற்றால் அவனது வாழ்க்கை நிறைவடையும். மனதில் துவைத பாவனையை வைத்துக் கொண்டு வாழ்க்கையில் அத்வைதம் கடைப்பிடித்தால் அமைதியின்மைதான் ஏற்படும்.

நன்றி:
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## 114 பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை

சட்டரீதியாக பயண அனுமதிப்பத்திரத்தைப் பெறாமல் சேவையில் ஈடுபட்ட 114 பஸ் உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பு புதுக்கடை, நீர்கொழும்பு, மஹர, மொரட்டுவ ஆகிய நீதிமன்றங்களில் இந்த பஸ் உரிமையாளர்களுக்கும், சாரதிகளுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினால் கடந்த மே மாதம் 25ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்ட விசேடசோதனைகளின் போது இந்த பஸ்களின் விவரங்கள் தெரியவந்தன. (ந)

## சமய சந்நிதிகளில்

தொல்புரம் , வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழா நாள்களில் தினமும் மாலை 6 மணி முதல் 7மணி வரை தெய்வீகத் தொடர் விரிவுரையை 'சொல்லின் செல்வர்' இரா. செல்வவடிவேல் நிகழ்த்தவுள்ளார். புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறும். (ந-28)

* * *

கொழும்புத்துறை,ஜூன் 20

நல்லூர் கைலாசப் பிள்ளையார் கோயிலின் கைலாசநாதர் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. 25 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திரு விழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடை பெறும். (ந-135)

* * *

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு தினமும் இடம்பெற்று வரும் சமயச் சொற்பொழிவு வரிசையில் 3 ஆம் திருவிழா வான இன்று மாலை 6.30 மணியளவில் 'செல்லும் பொருளும் செல்லாப் பொருளும்' என்னும் தலைப் பில் இலக்கியத் தமிழருவி இரா. கேதீசனின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.(ந)

## நாக பாம்பு தீண்டியது

தென்மராட்சி, ஜூன் 21

வளவு துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்ட குடும்பஸ்தரை நாகபாம்பு தீண்டியது.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை வரணி குடமியனில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை விக்னேஸ்வரன் (வயது-45) என்பவரே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளவராவார். (ந-9)

## கர்ப்பிணிகளுக்கு போஷாக்கு மா

தென்மராட்சி, ஜூன் 21

சாவகச்சேரி நகராட்சி மன்ற நுணாவில் பொது நூலகத்தில் நேற்றுமுன்தினம் குழந்தைகளுக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்கும் போசாக்கு மா வகைகள் வழங்கப்பட்டன.

நூலக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வு நகராட்சி மன்ற தவிசாளர் இ. தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

நுணாவில் மேற்கைச் சேர்ந்தவரும் சாவகச்சேரி நகராட்சி மன்ற பிரதம எழுதுநராகப் பணியாற்றியவருமான திருமதி வசந்தாதேவி தனபாலசிங்கத்தின் நினைவாக அவரது குடும்பத்தினரால் இந்த நிகழ்வில் ஒரு தொகுதி நூல்கள் நூலக அபிவிருத்திச் சபைத் தலைவர் சு. புத்திசிகாமணியிடம் கையளிக்கப்பட்டன. (ந-9)

## ஆலய வீதியில் சிரமதானம்

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவர்கள் வித்தியாலய அதிபர் தலைமையில் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயில் ஆலய வீதியைச் சிரமதானம் செய்துள்ளனர்.

புழுதடைந்த தேர் ஓடும் வீதியை கற்கள் பரவிசெப்பனிட்டு தார் ஊற்றும் பணியை பிரதேச சபையினர் கவனித்து வருகின்றனர். (ந-28)

## வாகனம் விற்பனைக்கு

ISUZUரக கூலர்
(பிளசர்) மொடல்
No. J - x x x x தொடர்
இலக்க வாகனம் உடன்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 198 6948
(சி/916) (45.6.9)

## தேவை

யாழ். மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள பிரபல எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு கணினி அறிவுள்ள பெண் பிள்ளைகள் தேவை. யாழ். மாநகரசபை பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. குறைந்தது ஒரு வருட அனுபவம் இருத்தல்வேண்டும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். சம்பந்தப்பட்டவர்கள் முழு விவரத்துடன் நாளை வெள்ளி, சனி, ஞாயிறு போன்ற தினங்களில் காலை 10.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

நிர்வாகி
ராஜன் உமையாள் எரிபொருள் விற்பனை நிலையம்
யாழ். மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(சி/921)(6-8-9)

## துயர் பகிர்கின்றோம்

மக்லியோட் வைத்தியசாலை இணுவில்
கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, மானிப்பாய்.

Dr.A. பவளத்துரை
(மகப்பேற்று நிபுணர்)

இணுவில் மக்லியோட் வைத்திய சாலையில் 1970 ஆம், 80 ஆம் ஆண்டுகளில் இக்கட்டான சூழ்நிலைகளில் அர்ப்பணிப்புடன், பொறுமையுடன் மக்களுக்கு மருத்துவ சேவை புரிந்த Dr.A. பவளத்துரை மகப்பேற்று நிபுணர் அவர்கள் அண்மையில் இறைவன் மடியில் சேர்ந்த செய்தி கேட்ட மக்லியோட், கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலைகள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்களாகிய நாம் ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுகின்றோம். கடவுளின் பலம் அவர்களோடு கூட இருந்து அவர்களை வழிநடத்துவதாக.

தொ. பேசி.
021 224 1569
022 225 5157
(19600) (45.6.9)

வைத்திய மேலதிகாரி, வைத்தியர்கள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்.
கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, மானிப்பாய்.

## தவறவிடப்பட்ட தங்கச் சங்கிலி

கடந்த (15.06.2012) யாழ். பல்கலைக்கழக வளாகத்திற்கும், கோண்டாவிலுக்கு மிடையில் தங்கச்சங்கிலி பென்ரனுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்

தொடர்பு:
077 998 2026
(19602) (45.6.9)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, நட்சத்திரம் மிருகசீரிடம் (2 ஆம் பாதம்) 80 பாவம், 1974.05.23 இல் பிறந்த மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

தொடர்பு: 077 175 4578
(19599) (45.6.9)

## தேவை

மணல்தறை வீதி, கந்தர்மடத்தில் இயங்கும் வியாபார நிறுவனத்துக்கு ஆண், பெண் பணியாளர்கள் தேவை.

தொ.பே. 075 0490 299

தொடர்பு:
23/2, மணல்தறை வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(19651) (45.6.9)

## இதய மகிழ்வோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொழும்பு தேசிய சமாதான சங்கத்தின் அனுசரணையில் 22.05.2012 அன்று நடத்தப்பட்ட சமய, சமூக சேவையாளர்களுக்கான கௌரவிப்பின் போது தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. இராஜரத்தினம் சிவபுண்ணியம் அவர்கள் சிறந்த சமய சமூக சேவையாளருக்கான விருது பெற்றுக்கொண்டமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. இராஜரத்தினம் சிவபுண்ணியம்



ஓய்வு நிலை உதவிஅரசாங்க அதிபராக இருக்கும் இவர் தற்பொழுது அகில இலங்கை சமாதான நீதிவானாகவும், தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் தருமபரிபாலனசபையில் நெல்லண்டை பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தின் உபதலைவராகவும், பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி சிவில் பாதுகாப்பு குழுவின் தலைவராகவும், பருத்தித்துறை அஞ்சல் அலுவலக அபிவிருத்தி ஆலோசனைக்குழுவின் செயற்குழு உறுப்பினராகவும், யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும், தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தின் கல்விப்பிரிவின் இணைப்பாளராகவும், அமரர் மணியம் கணபதிப்பிள்ளை நிதியத்தின் போசகராகவும் செயற்பட்டு வருவதனைக் கண்டு மனம் மகிழ்கின்றோம்.

இவருடைய சமய, சமூக நற்பணிகள் மேலும் தொடர தும்பளை இலக்கினாவத்தை சித்திவிநாயகப் பெருமானின் கருணையையும், தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மனின் நல் அருளையும் வேண்டி இதய சுத்தியோடு பிரார்த்தனை செய்கின்றோம்.

(சி/917)(6-8-9)

நெல்லண்டை மக்கள்

# யாழ். இராமநாதன் கல்லூரியின்



# சிவகாமசுந்தரி சமேத சிதம்பர நடேசர் ஆலய ம

### நமது சமய வாழ்வுக்கு தியானம் என்றும் நன்மை பயக்கும்

இலங்கையில் சைவ சமயம் வளர்ச்சியடையவும் கல்வி மேம்பாட்டுக்குமாக அரும் பெருந்தொண்டாற்றியவர் சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் ஆகும். அவர் கொழும்பு மாநகரில் ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வர ஆலயத்தை அமைத்தார். யாழ். திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியை அமைத்து அங்கு வழிபாட்டுக்காக ஒரு சிவாலயத்தையும் அமைத்தார். சுன்னாகம் மருனார்மடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரியை அமைத்து மாணவ மாணவிகளின் சமயக் கல்விக்காக ஆவன செய்து உதவிய பெருமகான்.

சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் தியான வாழ்வில் என்றும் நம்பிக்கை கொண்டவர். இதனால், சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் தியான மண்டபம் அமைத்து அதிலே பஞ்ச கிருத்திய நாயகனான ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரதிஷ்டை செய்து தினமும் தியானஞ் செய்து வந்தார். அங்கு கல்வி கற்ற மாணவியர், அதிபர், ஆசிரியர்கள் கூட இத்தியான மண்டபத்தில் வழிபாடு செய்து தியானமிருப்பது வழ்க்கம். அவ்வழியில் நங்கையர் பலரும் நன்மை பெற்றுள்ளனர்.

சுன்னாகம், மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் கல்வி கற்ற கனடாவில் உள்ள மாணவியர் தாம் கற்ற பாடசாலையில் உள்ள தியான மண்டபத்தைப் புனரமைக்க நற்பணிகள் பல புரிந்துள்ளனர். இதற்கான ஆக்கபூர்வமான பணியினை கனடாவில் உள்ள இப்பாடசாலையின் பழைய மாணவியான திருமதி எஸ்.ஸ்ரீதாஸ், யாழ்.இலங்கைப் பல்கலைக்கழகத்து ஓய்வுபெற்ற பேராசியர் எஸ்.சிற்றம்பலம், இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் ரேணுகா சண்முகரத்தினம் அவர்களின் சேவை மகத்தானது. இத்தியான மண்டபம் வருங்காலச் சந்ததியினருக்கு என்றும் வழிகாட்டியாக அமையும். புனரமைக்கப்பட்ட தியான மண்டபம் கோலாகலமாக பக்திபூர்வமாகத் திறக்கப்படும் சுபவேளையில் யாவும் மங்கலமாக அமைய ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரரைப் பிரார்த்திக்கின்றேன்.

டி.எம்.சுவாமிநாதன், நா.உ முகாமைத் தர்மகர்த்தா ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்.



### அதிபரின் வாழ்த்துரை

கொடிமேல் இடபமும் கோவணக் கீளும் ஓர் கொக்கிறகும்
அடி மேல் கழலும் அகதலத்தினில் நீறும் ஐவாயரவும்
முடிமேல் மதியும் முருகலர் கொன்றையும் மூவிலையு
வடிவேல் வடிவும் என் கண்ணுள் எப்போதும் வருகின்றனவே

என்ற அருட்பாடல் என்னுள்ளத்தை நிறைவிக்க இராமநாதன் கல்லூரியில் சிவலிங்கப் பெருமானையும், நடராஜப்பெருமானின் அற்புதக்கோலத்தையும் கண்டு மகிழ்ந்தேன். பரத நாட்டியக்கலைக்கு முதற்கடவுளான நடராஜப்பெருமான், சிவகாமசுந்தரி சமேதராக இராமநாதன் கல்லூரி மாணவர்களின் வழிபாட்டுக்காக கல்லூரியின் முகப்பில் மேல்மாடியில் அமைந்த ஆலயத் தில் அமர்ந்து அருள்பாலித்து வந்ததன் பேறாக எமது கல்லூரி நூற்றாண்டு கால வளர்ச்சியில் கலைத் துறையில் பெருஞ் சாதனைகளை நிலைநாட்டியுள்ளது.ஏனைய துறைகளிலும் மாணவர்கள் மேல்நிலையை அடைந்தனர்.

இந்தவகையில் நூற்றாண்டைக் கொண்டாட இருக்கும் இக்கல்லூரியானது நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களினாலும், முதுமையினாலும் பல அழிவுகளைச் சந்தித்தது. ஆலயமும் இதற்கு விதிவிலக்கு ஆகவில்லை. இதனைத் திருத்தித்தரும் பணியினை கனடாக்கிளை பழைய மாணவர்சங்கம் முன்னெடுத்தது. எனவே திருத்தவேலைகளுக்காக நடராஜர் சமேத சிவகாமசுந்தரி திருவுருவங்கள் 2009 ஆம் ஆண்டிலிருந்து சமாதி ஆலயத்தினுள் வைத்துப் பூசை வழிபாடுகள் நடைபெற்றன. 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பெற்ற திருத்தவேலை இன்று 21.06.2012 வியாழக்கிழமை எமது கல்லூரி நடராஜர் ஆலயம் கும்பாபிடேகம் நடைபெற்று, எம்பெருமான் இருக்கை கொண்டு அருள்பாலிக்கத் திருவருள் கைகூடியுள்ளது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருவதொன்றாகும்.

மாணவர்களின் வழிபாட்டுக்குரிய தலம் நிலைகுலைந்து போனதால் பெரிய குறைபாடுகள் உருவாகியுள்ளமையை உணர்ந்து கல்லூரியின் பழைய மாணவர்கள் ஆலயத்தையும் அதன் அயல் கட்டடங்களையும் புனர்நிர்மாணம் செய்து தர முன்வந்தமை போற்றுதற்கும் நன்றிக்குமுரிய விடயமாகும். கல்லூரி ஸ்தாபகரின் வழித்தோன்றல் திரு.டி.எம். சுவாமிநாதன் அவர்களும் தம்மாலியன்ற பங்களிப்பினை வழங்கியமை நன்றிக்குரியதாகும். இதற்குப் பங்களிப்பு வழங்கிய பழைய மாணவர்கள், பேராசிரியர் கலாநிதி சிற்றம்பலம் ஆகியோருக்கு மனம்நிறைந்த வாழ்த்துக்களை வாழ்த்துவதோடு நடராஜப்பெருமானின் அருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன். எத்தனையோ சிரமங்கள் மத்தியிலும் புதுப்பொலிவும், இளமையுடனும் நிமிர்ந்து நிற்கும் ஆலயத்தில் நடராஜப் பெருமான் சிவகாமசுந்தரி சமேதராக வீற்றிருந்து கல்லூரியை மிளிரச் செய்யவும், அருள்பாலிக்கவும், மேன்மைகொள் சைவநீதி விளங்கச் செய்யவும், நன்னிலையடையவும் வேண்டுமென வாழ்த்துவதோடு வணங்குகின்றேன். இப்பணியில் முன்னின்று உழைத்த அகில இலங்கை இந்துமாமன்ற தலைவர் திரு.க.நீலகண்டன், கௌரவ டி.எம் சுவாமிநாதன், பேராசிரியர் க.சிற்றம்பலம், திருமதி பா பாலசுப்பிரமணியம், முன்னாள் அதிபர் திருமதி ஆ.சிவஞானசுந்தரம் ஆகியோருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*" கருதரிய சிற்சபையில் ஆனந்த நடனமிடும் கருணாகரக்கடவுளே,*
*திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்"*

வாழ்க இராமநாதன் கல்லூரி!

வேணுகா சண்முகரத்தினம், அதிபர், யா/இராமநாதன் கல்லூரி.



### ஆசியுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானிய ஆதிக்கம் பொருளாதாரம், கல்வி என்ற பலமான பின்னணியில் மொழி, மத, பண்பாட்டுத் திணிப்புகளை மேற்கொண்டது. மொழி, மத, பண்பாட்டுச் சரிவு சேர் பொன். இராமநாதன் அவர்களை பாதித்ததனால் தமிழ் பெண்களுக்கு சைவத் தமிழ் பண்பாட்டுச் சூழலில் ஆங்கிலக் கல்வியை அளிப்பதற்காக 1913 ஆம் ஆண்டு இராமநாதன் கல்லூரியை நிறுவினார்.

இந்து பண்பாட்டுச் சூழலில் கல்வியுடன் சமயமும் இணையவேண்டும் என்ற சீரிய சிந்தனையில் சிவகாமி சமேதராய் நடராஜர் உறையும் ஆலயம் ஒன்றை மேல்மாடியில் அமைத்தார். நர்த்தனமிடும் நடராஜர் அருளாட்சி செய்யும் இந்த ஆலயம் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் போதும் பாதிப்பை பழமை காரணமாகவும் நீண்ட நாள்களாக புனரமைக்க முடியாமல் இருந்தது. கனடா, அவுஸ்திரேலியா, லண்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் வாழும் பழைய மாணவர்கள் நடராஜன் ஆலயத்தை புனரமைப்பதற்கு முன் வந்தமையினால் இன்று ஆலயம் புதுப் பொலிவு பெற்றுள்ளது. இன்று நாம் பெருமையுடன் காணும் இவ்வாலய புனருத்தாரணம் செய்ய அவர்கள் முன்வந்த போதும் அதைச் செயல்படுத்த நான் பல முயற்சிகளை மேற் கொண்டேன். இன்று பரோபகாரர்களின் உதவிகள், ஒத்துழைப்புகள் ஆதரவு என்பவற்றுடன் அந்த வள்ளலாரின் கோயில் கும்பாபிஷேகம் செய்வதையிட்டு ஆத்மார்த்தமாக ஆனந்த மடைகின்றேன்.

திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம், வலிகாமம் வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளரும், ஓய்வுபெற்ற முன்னாள் அதிபரும்.

### காவல் தம்பதியர்

யா/இராமநாதன் கல்லூரி, ஓர் அழகிய கல்விச்சாலை, கல்விக் கூடங்கள், தொழிற்கூடங்கள், ஆய்வு கூடங்கள், அழகியற்கூடங்கள் என்பவற்றுடன் அதிபர் விடுதி, மாணவர் விடுதி வரிசையில் அம்பிகா சமேத நடராஜப் பெருமான் இவ்வளாகத்தில் எழுந்தருளியுள்ளார். இக் கல்லூரியைச் சேர்ந்த அனைவருக்கும் குறிப்பாக விடுதியில் தங்கியிருந்து கற்கும் மாணவிகளுக்கு காவல் தம்பதியர் இவர்களே. இத்தம்பதியர் மீண்டும் தம் இருப்பிடம் புகும் இந்நாள் ஒரு நன்னாளாகும். இன்று நடைபெறும் புனருத்தாரண அபிஷேகத் திருவிழா மன மகிழ்விற்குரிய ஒன்றாகும். இவ்விழா சிறப்புற வாழ்த்துவதுடன், இராமநாதன் கல்லூரி வளாகத்தில் காப்பிடம் அனைவருக்கும் அம்பிகா சமேத நடராஜப் பெருமானின் திருவருள் கிட்டுமெனத் திடமாக நம்புகிறேன்.

- ஆ.ராஜேந்திரன், லைய் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்.

(சீ/912) (2-6-9)



### இராமநாதன் கல்லூரியில் அமைந்து

ஆத்மீகச் சிந்தனைகளுக்கு நிலைகளமாக அமைபவை ஆலயங்கள். ஆதி
நன்கு புரிந்து கொண்ட சேர் பொன்.இராமநாதன் அவர்களின் ஆத்மீகச்
சிதம்பரநடராஜர் ஆலயமாகும். ஆடவல்லானுக்கு ஆலயம் அமைத்துக் கல்
அவரது பல்வேறுபட்ட பணிகளுள்ளும் முதன்மை பெற்றது கல்விப்ப
சித்திக்கும் அடித்தளமாக அமைய வேண்டு மென்று விரும்பினார். இதன் பே
நிலப்பரப்பில் இந்து தமிழ்ப் பெண்களுக்கெனத் தனித்துவமான கல்லூரியைக்
ஆயிரம் மாணவர்கள் கற்கக்கூடியதும், குரு குலக்கல்வி பேணப்படும் வகையில் வி
கல்லூரியின் முகப்பில் மேல் மாடியில் மாணவர்களின் வழிபாட்டுக்கா
பெற்ற பூந்தோட்டத்தில் மலர் பறித்துச் சரங்களும், மாலைகளும் கட்டி, இறை
வேளைகளில் பூசையில் கலந்து கொள்வதும் விடுதி மாணவர்களின் அன்றா
மேனியினார் பூக்கொய்து பரமனுக்குப் பன் மாலை அணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரி'' என


ஒரு நூற்றாண்டுக்குப் பழைமை வாய்ந்த இவ்வாலயமானது, நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களின
கண்ணுற்ற துர்க்காதுரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் 1998 ஆம் ஆண்
ஆண்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது. முன்னாளதிபர் திருமதி சிவஞானசுந்தரம் அவர்களும்,
பணம் தேவைப்பட்டபோது புலம்பெயர் பழைய மாணவர்களிடம் உதவி கோரினர்.

இதனைச் செவிமடுத்து கனடாப் பழைய மாவணர்கள் சங்கம் திருத்தவேலைகளைச் செய்ய
டன் இணைந்து கொண்டனர். திருத்த வேலைகளுக்காக 2009 ஆம் ஆண்டு நடராஜர், சிவகாமசு
வழிபாடுகள் நடைபெற்றன. வழிபாட்டுக்குரியதலம் நிலை குலைந்ததால் கல்லூரியும் பல வழிக
வழிபாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, புதிய அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணமும்,
ஆலயத் திருப்பணிகள் அவசரமாக முடித்துத் தரப்பட்டன. ஐம்பது இலட்சம் ரூபாவைக் கனடாப் ப
திருத்தப்படவில்லையென்றே கூறலாம். தாமதித்த திருப்பணிகளை விரைவுபடுத்த சேர் பொன். இரா
மன்றத் தலைவர் க.நீலண்டன் அவர்களும், பொறியியலாளர் திரு.உருத்திரலிங்கம் அவர்களும்
இன்றேல் இன்று ஆலயம் கும்பாபிஷேகத்தைச் சந்திக்க வாய்ப்பில்லை. இறைவன் திருவருளால்
அழகும், இளமையும் பெற்று எழுந்து நிற்கின்றது. 21.06.2012 இல் குடமுழுக்குப் பெருவிழா சிவகாம
நடராஜப் பெருமான் சிவகாமசுந்தரி சமேதராக ஆலயத்தில் வீற்றிருந்து அருள்பாலிப்பாராக. அ
கண்டுகளித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் பூசை வழிபாடுகளிலும் கலந்துகொண்டு இவ்

- கலாநிதி

### எங்கள் குடும்பம் நான்கு தலைமுறை கண்ட புனித வித்தியா கூடம் யா/ இராமநாதன் கல்லூரி

குருவும் தாரமும் தலைவிதிப்படியே என்று ஆன்றோர் கூறியதை நினைத்துப் பார்க்கிறேன். ஒருவனின் வாழ்க்கையை உயர்த்துவதில் கல்விக்கூடம் எவ்வளவு முக்கியமானது. சிறுமியாக கல்லூரி வளாகத்தில் ஓடித்திரிந்த நான் இன்று பிரதி அதிபராக பணியாற்றுகின்றேன். எனக்கு அறிவூட்டி மனித சமூகத்தில் மனிதராக வாழவைத்த தாய்க்கு சேவை செய்வதில் புளகாங்கிதம் அடைகிறேன். எங்கள் ஸ்தாபகர் இராமநாத வள்ளலுக்கு லிகிதராக பணிபுரிந்தவர் எனது தாத்தா தம்பித்துரை கிளாக்கர். அவர் மகள் சாவித்திரி பரராஜசிங்கம் ஆசிரியராகவும், மூன்றாம் தலைமுறையில் நானும், நான்காம் தலைமுறையில் எனது மகளும் கல்வி கற்க வழிவகுத்த பெருமைக்குரிய கல்விச் சாலையின் புகழை பேசுவது பெருமை தருகிறது. எங்கள் பாடசாலை சகோதரிகள் பழைய மாணவிகள் என்ற உரிமையுடன் மலரை உருவாக்கி ஆலய புனருத்தாரண கும்பாபிஷேக நிகழ்வும், மலரும் வெளியிடுவது கல்வி வழங்கிய தாய்க்குச் செய்யும் கைமாறு ஆகும்.



எங்கள் ஸ்தாபகரின் புனித சேவையில் உருவாக்கப்பட்ட விடயங்களை பேணிப் பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும். இதில் முக்கியமானது கல்லூரியில் அமைக்கப்பட்ட இராமநாதேஸ்வர ஆலயம் ஆகும் . 2013 ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாவைக் காணவுள்ள பாடசாலை நூற்றாண்டு காலப் பெருமைக்குரியது.

ஒவ்வொரு துறையிலும் உள்ள பாரம்பரியத்தையும் அதைப்பற்றி நாம் அடைய வேண்டிய உணர்வை எடுத்துக் காட்டும் நன்னோக்கத்தில் அமைந்த ஒரு செயல்பாடே இந்த ஆலய புனர் நிர்மாணமும், கும்பாபிஷேக நிகழ்வும் ஆகும். கனடா பழைய மாணவ சகோதரிகள் பண உதவி மட்டுமன்றி நேரடி மேற்பார்வையுடன் பழைமை குன்றாத வகையில் உருவாக்கிய இந்தப் பணிக்கு நன்றி பகர்கின்றோம். விசேடமாக கனடா பழைய மாணவர் சங்க செயலாளர் திருமதி செல்வம் ஸ்ரீதரன் அவர்களின் பணி மெச்சத்தக்கது. மூன்று தசாப்த கால போர், இடப்பெயர்வின் பின் ஆலயம் திருத்தி அமைக்கப்பட வேண்டி யதை ஓய்வு பெற்ற அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானாசுந்தரம் அவர்கள் பழைய மாண வருக்கு சுட்டிக்காட்டிய மையாலேயே இந்தச் செயற்பாடு ஆரம்பமானது. அவருடைய தலைமைத்துவமும் வழிகாட் டலும் ஞாபகத்திற்குரியது.

பாதுகாப்பு என்ற சொல் இன்று அதிக கவனம் செலுத்தப்படும் ஒன்று. அரும் பொருள்களது பாதுகாப்பு என்பது வளர்ந்து வரும் அறிவியல் சார்ந்த துறையாகும். எங்களை விட அதிக கவனம் செலுத்தியவர்கள் எமது முன்னோர்கள். கோயில்களை பராமரிக்கும் முறைகள், சிற்பங்களை பராமரிக்கும் முறைகளின் நுட்பங்களின் ஊடாகவும் அவற்றை பாதுகாத்துள்ளதால் இன்றும் அவற்றை காண முடிகிறது. எனவே பாதுகாத்தல் என்ற பணிக்கு உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியுடன் எங்கள் கலைக்கூடத்தில் குடிகொண்டுள்ள நடராஜசமேத சிவகாம சுந்தரி அம்மையின் பாதம் பணிந்து மனநிறைவுடன் நிறைவு செய்கின்றேன்.

திருமதி நந்தினி சிவராஜன் (பழைய மாணவி),
பிரதி அதிபர், யா/இராமநாதன் கல்லூரி, மருதனார் மடம், சுன்னாகம்.


யாழ்.நகரில் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை
மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி அளிக்கப்படும்
L கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
இப்பொழுது சுன்னாகத்தில் கே.கே.எஸ். வீதி, மதவடி முன்பாக
021 224 2022, 071 4546956, 0777225292
பெண்களுக்கு நவீன காரில் பயிற்சி வழங்கப்படும்




L Kiruba Learners
(Govt. Approved Driving Training School)

அம்பாள்
AMBAL S

கே.கே.எஸ் வீதி, மருதனார்

# ின்



# ம மஹா குடமுழுக்குச் சிறப்பு மலர் – 21.06.2012

## அமைந்துள்ள ஆடவல்லான் நடராஜர் ஆலய வரலாறு

யங்கள். ஆதியில் தெய்வீகக் கலை வளரும் இடங்களாக ஆலயங்கள் அமைந்தன. இந்த உண்மையை ரின் ஆத்மீகச் சிந்தனையின் வெளிப்பாடே இக் கல்லூரியில் அமைந்த சிவகாமசுந்தரி சமேத அமைத்துக் கல்வி, கலைஞானம் வளர்ந்தோங்கச் செய்தவர் சேர் பொன்.இராமநாதன் அவர்கள். றது கல்விப்பணியே. கல்வி கடவுள் வழிபாட்டுடன் கூடியதாகவும் திரிகணர சுத்திக்கும் காரிய னார். இதன் பேறாக 1913 ஆம் ஆண்டு மருதனார் மடத்து வடகீழ்ப் பகுதியில் இருபத்தைந்து ஏக்கர் கல்லூரியைக் கட்டினார். இது இலங்கையின் முதல் பெண்கள் கல்லூரி என்ற பெருமையை உடையது. ம் வகையில் விடுதிச்சாலையுடன் கூடியதும், சகல வசதிகளும் கொண்டதுமாக இக் கல்லூரி விளங்கியது. ழிபாட்டுக்கான நடராஜர் ஆலயத்தையும் இணைத்துக் கட்டினார். ஆலயத்துக்கென அமைக்கப் ும் கட்டி, இறைவனுக்குக் கொடுப்பதும், திருமுறைகளைப் பண்ணோடிசைப்பதும், காலை, மாலை களின் அன்றாட நிகழ்ச்சிகளாகும். இதனை அழகாக திரு.சு.நடேசபிள்ளை அவர்கள் ''பொன்பூத்த கல்லூரி'' எனப் புகழ்ந்து பாடியுள்ளார்.

னர்த்தங்களினாலும், முதுமையினாலும் பொலிவிழந்து இடிபாடுகளுடன் காணப்பட்டது. இதனைக் 98 ஆம் ஆண்டில் மூன்று லட்சம் ரூபா செலவில் ஓரளவு திருத்தவேலைகளைச் செய்து 1998 ஆம் அவர்களும், ஆசிரியர்களும், பழைய மாணவர்களும் திருத்த வேலைகளுக்குப் பெரும்தொகைப்

ளைச் செய்ய முன்வந்தது. ஏனைய ஆஸ்திரேலியா, லண்டன் பழைய மாணவர்களும் அவர்களு ர், சிவகாமசுந்தரி சமேதராக லிங்கம் உட்பட விக்கிரகங்கள் சமாதி ஆலயத்துக்குள் வைத்துப் பூசை யும் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டது. திருத்த வேலைகள் பல்வேறு தடைகளை எதிர்கொண்டது. கரட்ணமும், பழைய மாணவர்களும், ஆசிரியர்களும் எடுத்த முயற்சியால் இறைவன் திருவருளால் வக் கனடாப் பழைய மாணவர்கள் செலவு செய்திருந்தனர். ஆயினும் கீழ் மாடிவேலைகள் முற்றாகத் ர் பொன். இராமநாதன் அவர்களின் வழித்தோன்றல் D.M.சுவாமிநாதன் நா.உ.அவர்களும், இந்து மா அவர்களும் பேராசிரியர் கலாநிதி க.சிற்றம்பலம் அவர்களும் ஒத்துழைத்தனர். இவர்களது ஆதரவு திருவருளால், நல்ல உள்ளம் படைத்தவர்களின் உதவியால் நடராஜர் ஆலயம் புதுப் பொலிவும், விழா சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானுக்கு நடைபெறுகின்றது. ஆடவல்லானான சிதம்பர லிப்பாராக. அத்தருணம் அடியார்கள் அனைவரும் வருகைதந்து குடமுழுக்குப் பெருவிழாவைக் கொண்டு இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- கலாநிதி திருமதி இ.கு.வை.கணேசபிள்ளை, ஓய்வுநிலை ஆசிரியை, இராமநாதன் கல்லூரி.

## ஆசியுரை



எமது இராமநாதன் கல்லூரி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவுள்ளது. அதேவேளை கல்லூரி மாணவர்களின் அன்றாட வழிபாட்டுக்கு இராமநாதன் கல்லூரியைக் கட்டும் பொழுதே ஆலயத்தையும் இணைத்துக் கட்டினார். கல்லூரி முகப்பின் மேல் மாடியில் அமைந்த இந்த ஆலயம் பெருந் தொகையான மாணவர் களை உள்ளடக்கக் கூடியதும் சகல வசதிகளும் பொருந்தியதுமாகும். அதோடு இணைந்து சரஸ்வதி மண்டபமும் இணைத்துக் கட்டப்பட்டுள்ளது. விடுதி மாணவர்கள் காலை, மாலை வேளைகளில் ஆலயத் தொண்டில் ஈடுபடுவதும் பண்ணோடு இசை பாடுவதும் ஒரு தனிச் சிறப்பு ஆகும். இந்து, தமிழ் கலாசாரம் பேணும் வகையில் இந்த ஆலயத்தை சேர் பொன். இராமநாதன் கட்டினார். இன்று தமிழ் பெண்களுக்கென முதல் பெண்கள் கல்லூரியின் வழிபாட்டிடம் காலத்தின் கோலத்தால் சீரழிந்து தன்னிலை குன்றியதும் இதனைத் திருத்தும் பணியைக் கனடா பழைய மாணவர் களுடன் லண்டன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் பழைய மாணவர்களும் இணை ந்து கொண்டமை மகிழ்ச்சிக்குரியதாகும். இதன் பேறாக எமது கல்லூரி நடராஜர் ஆலயத்தில் 2012 இல் கும்பாபிஷேக விழா நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியதாகும். கல்லூரி மேன் மேலும் வளர்ச்சி கண்டு சாதனைகள் படைக்க எல்லாம் வல்ல நடராஜப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றேன்.

- திருமதி வி.ஜெயராசா, செயலாளர், பழைய மாணவர் சங்கம், இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

## வாழ்த்துச் செய்தி

இந்த நாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைத் தொடர்ந்து இந்து மத மலர்ச்சி ஏற்படுத்திய பெருமகன் சேர் பொன். இராமநாதன் குறிப்பாக கல்லூரிகள் அமைத்து எமது மத பண்பாடு பேணி இந்துக் கல்வி வளர்ச்சிக்கு அன்னார் செய்த பெருமை அளப்பரியது. தெய்வத்திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற பெருமை மிக்க இந்து மகளிரை உருவாக்கிய சிறப்பு மிக்க கல்விக் கூடம் சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரி. அந்தக் கல்லூரியில் படித்த மாணவிகள் கனடா சென்றாலும் தங்களுக்கு அறிவு ஊட்டிய கல்வியன்னையை மறவாது நன்றியுணர்வுடன் பழைய மாணவிகள் சங்கம் அமைத்து திருமதி செல்வம் ஸ்ரீதாஸ் தலைமையில் தங்களின் கல்லூரியில் சேர் பொன். இராமநாதன் அமைத்த ஸ்ரீ நடராஜப் பெருமான் வழிபாட்டுத்தலம் அமைந்த கட்டடத் தொகுதியை சீரமைத்து இருப்பது மெச்சத்தக்க செயல். சேர் பொன். இராமநாதனின் இலட்சியத்தைப் பேணி செய்யப்பட்டிருக்கும் இந்தப் பணி எங்கள் மக்களுக்கு குறிப்பாக புலம் பெயர்ந்த எமது மக்கள் யாழ். சிவபூமிக்குச் செய்ய வேண்டிய பணிகளுக்கு நல்ல உதாரணம்.

எல்லாம்வல்ல எங்களின் நடராஜப் பெருமானின் அருளைப்பெற்று மேலும் மேலும் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி பல்லாண்டுகள் இந்து மகளிருக்கு சேவை செய்ய பிரார்த்திக்கின்றேன்.

கந்தையா நீலகண்டன், பொதுச் செயலாளர்,அகில இலங்கை இந்து மாமன்றம்.

விளம்பர அனுசரணையாளர்கள்



...ம்பாள் சேவிஸ் ஸ்ரேசன்
...MBAL SERVICE STATION
K.K.S Road, Maruthanarmadam.



Modern PC Systems
No.18.K.K.S. Road,
Chunnakam,
Sales and Service

## அருளாசிச் செய்தி



சிவனேயச் செல்வர், இராமநாதன் கல்லூரி வளாகத்தில் எழுந்தருளியிருக்கும் ஆடலரசனுக்கு இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. சைவ சமயத்தையும், தமிழ் மொழியையும் பெண் சமூகத்தினரும் நிறைவாகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்கின்ற வகையில் நாட்டின் வள்ளலாகிய சேர் பொன். இராமநாதனுடைய திரிகரண சுத்தியும், காரிய சித்தியும் அருளுகின்ற வகையில் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை இன்று கல்வியிலும் ஏனைய துறைகளிலும் பரிணாம வளர்ச்சியைக் கண்டிருப்பது மகளிர் கல்லூரியின் தனித்துவமாகும். சிவகாமி சமேத நடராஜப் பெருமானுக்கு இன்று நடைபெறும் இந்த அபிஷேகம் பாடசாலை சார்ந்த சமூகத்திற்கும் ஏனையோருக்கும் இறை இன்பத்தைத் தருவதாகும். இப் பணியை ஆற்றும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், சிற்றூழியர்கள், பழைய மாணவ சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் அனைவருக்கும் இறை ஆசிகள் கிடைப்பதாக.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு'' ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## ஆலய குரு உமாசுதசர்மா ஆசியுரை



சைவசமயம், மொழி, கலை, கலாசாரம் நிறைந்த யாழ்.நகரின் மத்தியில் மருதனார்மடம் என்னும் இடத்தில் கலைக்கே உருவான இராமநாதன் கல்லூரியில் சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமாளுக்கு புனருத்தாரணம் செய்யப்பட்ட மண்டபத்தில் நிகழும் மங்கள நந்தன வருடம் 21.06.2012 வியாழக்கிழமை முற்பகல் 10.00 - 11.00 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் செய்வதற்குத் திருவருள் பாலித்துள்ளது. இக் கும்பாபிஷேகத்தைத் தரிசிக்கும் அடியார்கள் சகலருக்கும் சிவகாமி அம்பாள் சமேத நடேசப் பெருமானின் அருளும் குருவருளும் கிடைக்க எனது ஆசிகள்.

''லோகா சமஸ்தாஸ் ஸுகிநோ பவந்து'' உலக மாந்தரனைவரும் இன்புற்று வாழ்க.

- ஆலய குருக்கள், கு.உமாசுதசர்மா.

## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



யாழ். குடாநாட்டில் மங்கையர்கள் சைவத்தமிழ்ப்பண்பாட்டு நெறிமுறை தவறாது கற்பதற்கு உருவாக்கப்பட்ட உன்னத கல்லூரியே இராமநாதன் கல்லூரி என்றால் மிகையாகாது. இக்கல்லூரி மிகப்பெரிய விடுதிச்சாலையோடு அமைக்கப்பட்டது. கல்லூரி அமைத்த வேளை மேல்மாடியில் சிவகாமி அம்பாள் சமேத நடராசப்பெருமான் கோயிலை இராமநாத வள்ளல் உருவாக்கினார். அற்புதமான அழகான மாடிக்கோயில் இக் கோயிலில் பூசை செய்வதற்கு, பிரசாதம் செய்வதற்கு, கோயிலைப் புனிதப்படுத்துவதற்கு இந்தியாவில் இருந்து குடும்பம் குடும்பமாக பலரை ஸ்தாபகர் கல்லூரி வளாகத்தில் குடியிருத்திய வரலாறு மறக்கமுடியாது. விடுதிச்சாலை மாணவர்கள் அதிகாலை ஐந்து மணிக்கு திருமுறைபாடும் ஓசை இன்னும் மனதில் பசுமையாக நிலைத்து நிற்கிறது. இக் கோயிலில் சைவப்பெரியார் சேர் பொன். இராமநாதன் நித்திய சிவபூசை செய்த சிவபூசைப்பெட்டியும் காசிலிங்கமும் கவனமாகப்பாதுகாக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் காலத்துக்குக்காலம் புனிதப்படுத்தப்பட்டு மகாகும்பாபிஷேகம் நிறைவேற்றிக்காத்துவருவது பாராட்டுக்குரியது. 1995 இல் ஏற்பட்ட பாதிப்பின் போது தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் இக் கோயிலை புனர்நிர்மாணம் செய்தமை குறிப்பிடத்தக்கது. நீண்ட கால இடைவெளிக்குப் பின் பாடசாலை பிரதான மண்டபம் திருத்தப்பட்டு ஆலயம் முற்று முழுதாக புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். இத் திருக்கோயில் கும்பாபிஷேகத்தோடு இராமநாதன் கல்லூரி மேன்மை பெற்று மேலும் சிறக்கப் பிரார்த்தித்து அமைகிறேன்.

- கலாநிதி ஆறு. திருமுருகன், *தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*

## இந்து நாகரிகத்துறை பேராசிரியரின் வாழ்த்துச் செய்தி



மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் அமைந்திருக்கும் திருவருள் மிகு அம்பிகை சமேத நடராஜப் பெருமானுக்கு ஆலய புனருத்தாரண அபிஷேகத்திருவிழா நடைபெறுவது என்பது மிகப்பெரியதொரு திருவட்பேறாகும். இந்த விழாவைச் சிறப்பிக்கும் முகமாக ஒரு சிறப்பு மலர் வெளியிடுவது எமது கல்லூரி சமூகத்திற்கும் சைவமக்களுக்கும் உள்ளத்திலே பேருவகையையும் உற்சாகமான மன எழுச்சியையும் அனைவரிடத்தும் உருவாக்கியுள்ளது.

சேர் பொன். இராமநாதன் அவர்கள் உயர்தர பாடசாலைகளை யாழ்ப்பாணத்தில் அமைக்கும் போதே இராமநாதன் மகளிர் கல்லூரியிலும், பரமேஸ்வரா ஆண்கள் கல்லூரியிலும் சிவாலயங்களையும் அந்த வளாகத்திலுள் அமைப்பித்ததன் நோக்கமாவது, கல்லூரிகளும் கடவுள் வாழும் கல்வி வழங்கும் வித்தியாலயங்கள் என்பதனை அனைத்து இளைய மாணவ சந்ததியினர்க்கும் உணர்த்தும் பொருட்டாகும். வேருக்கு நீர் ஊற்றுவதனால் தான் பெரிய விருட்சங்கள் தானாக தழைத் தோங்கும். எதிர்கால சந்ததியினர் மத்தியில் அவ்வாறு ஆலய வழிபாட்டினை வளர்த்தெடுப்பதற்கு இளைய வயதிலேயே அத்திபாரம் இடப்படவேண்டும். அதுவே எதிர்காலத்தில் எமது சமய, கலை, கலாசார, அற ஒழுக்க பண்பாட்டு விழுமியங்களைத் தாங்கும் பெருவிருட்சமெனும் கலைக்கோயிலாகக் கல்விக் கோயிலாக தழைத்தோங்கும். இதுவே எமது கல்லூரி (ஸ்தாபகரின் நினைவும் கனவும் ஆத்மீகத் தேடலுமாக இருந்ததனை அனைத்துக் கல்விச் சமூகமும் அறியும்.

இந்த உயரிய குறிக்கோளை மேன்மேலும் வளர்த்தெடுத்து கல்லூரிக்கும் எதிர்கால மாணவ சந்ததிக்கும் - சைவ உலகிற்கும் கையளிக்கும் சமய பண்பாட்டு நிகழ்வாக அமையும். எம்பெருமானின் அபிஷேகத்திருவிழா எமது கல்லூரி முன்னோர்களது உயரிய எண்ணங்களை வளர்த்தெடுப்பதாக அமைந்து விளங்கவேண்டுமென வாழ்த்தி அமைகிறேன். இத்தகையதொரு அரியதிருப்பணியை மேற்கொண்டு கல்லூரி வளர்ச்சிக்கும் - சிவத்தொண்டு சிறக்கவும் மாணவ சமுதாயத்துக்கு முன்னுதாரணமாக விளங்கும் கல்லூரி அதிபரையும் அவர்தம் குழுவினரையும், பழைய மாணவர் சங்க உறுப்பினர்களையும் - அவர்களைப் போன்ற இன்னும் பலரின் உழைப்பினையும் இந்த இடத்தில் மனமாரப் பாராட்டுகிறேன்.

எங்கள் அனைவரையும் ஆசீர்வதிக்கவேண்டியவர் ஸ்ரீ சிவகாமி சமேத நடராஜப் பெருமானேயாவார். அவரது பாதாரவிந்தங்களை வணங்கி இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதே வேளையில் எம்பெருமான் இந் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைகளும் மங்கலங்களுமுண்டாகும் வண்ணம் அருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்தித்து வழிபாடுகிறேன்.

'ஆழ்கதீயது - எல்லாம் அரன் நாமமே சூழ்க, வையகமும் துயர் தீர்கவே'

கலாநிதி கலைவாணி இராமநாதன், பேராசிரியர்: இந்து நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்.

## ஆசிச் செய்தி




சைவ மங்கையரின் கல்வியை வளர்ப்பதற்காக ஸ்ரீமான் சேர் பொன். இராமநாதன் அவர்கள் செய்த அருந்தொண்டு போற்றுதலுக்குரியது. சீரிய சிந்தனையாளனின் செயற்கருந்தொண்டுகள் எம் மண்ணில் நிலைத்து நிற்கின்றன.


அவர் உருவாக்கிய நடேசர் ஆலயம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது திருவருளே. பாடசாலைகளில் ஆன்மிக விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாய கடனாகும். இராமநாதன் கல்லூரியிலும் பரமேஸ்வராக் கல்லூரியிலும் சிவனுக்கு கோயில் அமைத்த வரலாற்றை மீளவும் ஞாபகமூட்டும் சந்தர்ப்பமாக இக் கும்பாபிஷேகம் விளங்கும் என்பதில் ஐயமில்லை. கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பழைய மாணவர்கள் அனைவரது பணிக்கும் வாழ்த்துக்கூறி நல்லாசி தெரிவித்து அமைகின்றேன்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

- உயர்திரு. ப.விக்னேஸ்வரன், மாகாணக்கல்விப் பணிப்பாளர், வடமாகாணம், மருதனார்மடம்.



# ஈவினை மத்தி அருள்மிகு
# ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானம்
# மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் - 21.06.2012



### ஆசியுரை

ஈவினை கற்பக விநாயகர் ஆலயம் பல வகைகளில் சிறப்புப் பெற்ற ஆலயம். பரம்பரை பரம்பரையாக வழிவந்த சிவாச்சாரியார்களினாலும் ஊர் மக்களாலும் நெறி முறையுடன் இன்று வரை போற்றிப்பேணப் பட்டு வருகின்றது.

இந்த ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு பல புதிய பரிவாரங் களுடன் புதுப்பொலிவுடன் இந்நாளில் கும்பாபிஷேகம் நிகழ்வதை மிட்டு விநாயகனின் திருவருளைப் போற்றி வணங்குகிறோம். மஹா கும்பாபிஷேகம் எல்லா வகையிலும் சிறப்பாக இனிது நிறைவேறவும் ஈவினைக் கற்பகனின் திருவருள் பாரெல்லாம் பொலிந்து மக்கள் எல்லோரும் நிம்மதியான சுக வாழ்வு வாழவும் விநாயகனைப் பிரார்த்தித்து மஹா கும்பாபிஷேகத்தை ஒட்டி வெளியிடப்படும் மலர் சிறப்புற அமையவும் வேண்டிக் கொள்கிறேன்.

ராஜராஜ ஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்
கீரிமலை ஆதீனம்.



### செயலாளரின் வாழ்த்துச் செய்தி

ஈவினை என்னும் கிராமத்திலே வானளாவ உயர்ந்து நிற்கும் கட்டடங்களையும் பசுமையான கண்ணிறைந்தகாட்சிகளையும், இயற்கை யான தலவிருட்சங்களையும் தன்னகத்தே சுமந்து நிற்கும் அமைதியான சூழலிலே சிவபெருமானின் மூத்த திருக்குமாரரான தும்பிக்கையான் பதியமர்ந்து தனை பக்தியோடு வழிபடும் அடியவர்களை அருட்கண்க ளாலே நோக்கிய வண்ணம் அருளாட்சி புரியும் கற்பக விநாயகன் எனும் நாமத்துடன், அடியவர்களின் வேண்டுதல்களை எல்லாம் நிறைவு செய்யும் நோக்குடன் ஈவினை வாழ் மக்களாலும் கற்பக விநாயகனின் பிரதம குருக்களின் ஒத்துழைப்புடனும் கற்பக விநாயகனின் ஆலயம் இவ்வளவு தூரம் வளர்ந்து நிற்கின்றது. கடந்தகாலங்களில் எம்மவர் தன் மூர்த்திகரத்தினால் தனை எவ்வாறு வளர்ச்சி பெறசெய்தாரோ அதே போன்று கிராமத்திற்கும் அடியவர்களுக்கும் வளர்ச்சிப்பாதையை ஏற்படுத்திய வண்ணம் உள்ளார். இதனை எமது கிராம மாணவர்களின் கல்வி சார் மற்றும் அடிப்படை கட்டுமான வசதிகளின் மூலம் கண்டு கொள்ளகூடியதாக உள்ளது. இதன் ஒரு கட்டமாக ஆலயம் தற்போது புனருத்தாரணத்துடன் கூடிய வரலாறு காணாத ஒரு வளர்ச்சியைப் பெற்று இன்று கும்பாபிஷேகம் காணுகின்றது. இந்நன்நாளில் கிராமமும் அடியவர்க ளுக்கும் அருளாசிகளை பெற கற்பகத்தான் தாழ்போற்றி வேண்டி நிற்கின்றேன்.

திரு. சு. சந்திரகுமார் (செயலாளர்)
ஈவினை மத்தி கற்பக விநாயகர் சைவ பரிபாலன சபை.



### பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

எவ்வினையும் வேரறுக்க வல்லோன் தாழ்வணங்கி நீர் வளமும் நில வளமும் ஒருங்கே அமையப்பெற்று உழு தொழிலை பிரதானமாக கொண்டு இல்லை எனாது வாரி வளங்கும் சிறப்பு மிக்க ஈவினையம் பதியிலே குடியிருந்து ஆலொடு அரசை தல விருட்சமாக கொண்டு அருளாட்சி புரிகின்ற ஈவினை மத்தி ஸ்ரீ கற்பக விநாயகர், தன் பரிவார மூர்த்தி களுடன் இன்று குடமுழுக்கு காணுகின்றார். காலத்தின் கட்டாயத்தாலும், தமது செயற்கரிய செயலினாலும் எம் பிரானின் விருத்தியை உணர்ந்த புலம்பெயர் மற்றும் உள்ளூர் கிராம அடியவர்கள் தமது ஒற்றுமையை நிரூபிக்கும் முகமாக அனைவரும் இணைந்து வரலாறு காணாத ஒரு புனருத்தாரணத்தை எம்பிரான் சந்நிதானத்தில் நிகழ்த்தி இன்று எம்பிரானுக்கு கும்பாபிஷேக விழாவினை சிறப்பாக நிகழ்த்தி எம்பிரானின் அருட் கடாட்ச கீற்றின் நிழல்களுக்கு உட்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். தன் புகழோடு தனை நாடும் அடியவர் புகழையும் நிலை நாட்டிக் கொண்டிருக்கும் எம்பிரானின் கும்பா பிஷேகம் சிறப்புற வாழ்த்துவதோடு, கற்பகத்தான் தாழ் பணிந்து வணங்கி அவனருள் பெறுவோமாக.

திரு. பா. பாலகணேசன் (பொருளாளர்)
ஈவினை மத்தி கற்பக விநாயகர் சைவ பரிபாலன சபை.

(C/918) (6,14,10)

### ஆலய வரலாறு

ஆதி காலத்தில் தற்போது ஆலயம் இருக்கும் இடத்தில் ஒரு குளம் இருந்தது. கிராம மக்கள் விவசாயிகளாக காணப் பட்மையால் பல தேவைகளுக்காக அக்குளத்திற்கு தினமும் வந்து சென்றனர். அவ்வேளை குளக்கட்டின் அருகில் இருந்த பயறி மரத்தின் கீழே மக்கள் சிறிய விநாயகர் சிலையை வைத்து வழிபட்டும் பின்னர் பொங்கல் செய்து மடைபரவி வழி பட்டும் வந்துள்ளார்கள். அச்சிலை இன்னமும் மூலஸ் தானத்தில் மூலவருக்கு அருகில் உள்ளது. பின்பு தியாக ராஜ ஐயர் ஊர்வர்களின் உதவியுடன் சிறிய கற் கோவி லாக கட்டி முடித்து 1928 இல் முதல் முதலில் கும்பாபி ஷேகம் நடத்தப் பட்டது. இத்தகைய நீண்ட வரலாற்றை கொண்ட எமது ஆலயம் சுமாரான வளர்ச்சிகளுடன் 1958,1978 களில் கும்பாபிஷேகத்தை சந்தித்தது. இங்கி தமாக தியாகராஜ ஐயர் பரம்பரையினரால் பராமரிக் கப்பட்டு வந்த ஆலயத்திற்கு 1987ம் ஆண்டு நிர்வாக சபை, தொண்டர் சபை என்பன ஆரம்பிக்கப்பட்டு நிர்வகிக்கப் பட்டு வருகின்றது, படிப்படியான ஆலய வளர்ச்சிப் பாதையில் 1993 இல் புதிய சித்திரதேர் வெள்ளோட்டமும் பின் 1999 இல் புனருத்தாரணத்துடன் கூடிய மகா கும்பாபிஷேகமும் சிறப்புற நடத்தப்பட்டது. தொடர்ந்து 2005 இல் ஆலய குருக்கள் பிரம்ம ஸ்ரீ தியாக கெங்காதர குருக்கள் அவர்களின் அரிய முயற் சியால் ஈவினை வாழ் அடியவர் திரு சி.செல்வரத்தினம் (சொக்கா மாமா) அவர்களின் உபயத்துடன் 2005ம் ஆண்டு இராஜ கோபுர அடிக் கல்லுக்கான குழிவெட்டப்பட்ட போது யானை வடி வத்தை கொண்ட ஒரு பாரிய கல்லை வெளிப்படுத்தி தனது புதுமையை நிரூபித்தார். நாட்டுச் சூழல் காரணமாக வியாழவரி வரை முற்றாக்கப்பட்ட இராஜ கோபுர வேலைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக் கிறது. 2012 இல் கஜலக்ஷ்மி, ஸ்ரீ கனகதுர்க்கை, சண்டி கேஸ்வரர் போன்ற புதிய பரிவாரங்களை உள்ளடக்கியும் ஏனைய பரிவாரங்கள் மறு சீரமைக்கப் பட்டும், யாகசாலையும் வசந்தமண்டபம், பழைய மணிக் கோபுரம் என்பன புனர்நிர் மாணிக் கப்பட்டும், புதிதாக மணிக்கோபுரம் கட்டப்பட்டும் அடியவர்களின் உதவியுடன் தற்போதைய ஆலய பிரதம குரு பிரம்ம ஸ்ரீ தியாக கெங்காதர குருக்கள் அவர்களின் நெறிப் படுத்தலின் கீழும் அந்தண சிவாச்சாரியார்களின் ஆசியுடனும் இன்று குடமுழுக்கு காணுகின்றார் எம்பெருமான்.



### ஆசியுரை

1950களில் நான் சிறுவனாக இருக்கும் போதே ஐயாவுடன் (து.தியாகராஜா ஐயர்) கோயிலுக்கு வருவேன். ஐயா இந்தக் கோயிலை நான்காவது பரம்பரையாகப் பார்த்து வந்தார். அன்றிலிருந்து இந்த ஆலயத்தின் ஒவ்வொரு வளர்ச்சிப் படிகளை வகுத்தும் பார்த்தும் வரு கிறேன். மிக அண்மைக் காலமாக எம்பெருமான் ஆலயம் பெரிய வளர்ச்சி அடைந்துள்ள து என்றே சொல்ல வேண்டும்.

கஜலக்ஷ்மி, ஸ்ரீ கனகதுர்கை, சண்டிகேஸ்வரர் போன்ற புதிய பரிவாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விநாயகரின் ராஜ மூர்த்தமான பஞ்சமுக விநாயகர் விக்கிரகம் வந்துள்ளது. அத்தோடு 350 கிலோ எடை யுள்ள பெரிய வெண்கல காண்டாமணியுடன் கூடிய கோபுரம், யாக விமானம், ஆதி மூல திரிதளம், சபை விமானம், வசந்த மண்டபம் எனப் பல கட்டடங்கள் புதிதாக அமைக் கப்பட்டுள்ளன. ஆலயத்தில் மாபிள் பதிக்கப்பட்டுள்ளது, வர்ணப் பூச்சு மிகச் சிறப்பாக உள்ளது.

சோதிட ஆகம கிரியாஜோதி, சிவாகம ரத்னா,
கலாநிதி தியாக. கெங்காதரக்குருக்கள்
பரம்பரை ஆலயக் குருக்கள்
ஈவினை கற்பக விநாயகர் தேவஸ்தானம்.



### தலைவரின் ஆசியுரை

பல தசாப்த வரலாற்றைக்கொண்ட எமது ஆலயத்தின் வரலாற்றுச்சான்றுகளை பகிரும் முகமாக இவ்வினிய கும்பாபிஷேக நன்னாளில் எம்பெருமான் துணை நிற்க, ஆலயத்தின் நிர் வாக சபையின் சார்பிலும், அடியவர்கள் சார்பி லும் வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு மூலமூர்த் தியின் ஆசிகளையும் வேண்டி நிற்கின்றேன்.

மேலும் எம்பெருமான் சந்நிதானம் ஒரு குறுகிய காலப் பகுதியில் அனைவரின் ஒத்தழைப்புடனும் புனர் நிர்மாணத்துடன் கூடிய பாரிய அளவிலான வளர்ச் சியையும் ஒரு மாற்றத்தையும் எட்டியுள்ளது. இப்பாரிய மாற்றத்தை எமது நிர்வாக காலத்தில் ஏற்படுத்து வதற்கு நாம் முயற்சி எடுத்த போது ஆரம்பத்திலே இந்து கலாசார திணைக்களத்தினூடக நிதியை பெற் றுத்தந்த கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் திருப்பணிளை செய்த எமது கிராம மக் களுக்கும், எவ்வித சிரமமும் பாராது மிகுந்த ஊக்கத் துடன் உற்சாகம் அளித்து சகல வழிகளிலும் உதவிய நல் உள்ளங்களுக்கும் எம்பிரானின் அருளாசிகள் கிடைக்க வேண்டி எதிர்காலத்தில் மேன்மேலும் எம்மவர் சந்நி தானம் வளர்ச்சி காணவும், திருப்பணிகள் நிறை வேறுவ தற்கு அடியவர்கள் எமக்கு நல்கிய உதவியைத் தொடர்ந் தும் நல்கி இவ்வினிய குடமுழுக்கு திருநாளில் எம் பிரானின் அருளாசிகளை பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வீர்களாக.

மேன்மை கோள் சைவ நீதி விளங்குக உலகமேல்லாம்

திரு இ. அரிகரன் (தலைவர்)
ஈவினை மத்தி கற்பக விநாயகர் சைவ பரிபாலன சபை


## விளம்பர அனுசரணை

V. M. K. Brothers
Palaly Road, Kondavil Junction,
Kondavil.

கலைஞன் ஸ்ருடியோ கிராபிக்ஸ்,
போட்டோ, வீடியோ படப்பிடிப்பாளர்.
புத்தூர், புன்னாலைக் கட்டுவன்,
077-6257876

Vigneswara Paints & Electricals
170, Palaly road, Kondavil.

ஸ்ரீமுருகன் கபே
(சைவ உணவகம்)
புத்தூர் வீதி, ஈவினை, வாகையடி.

Tilko Jaffna City Hotel
70/6, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
021-7200707

அம்பாள் களஞ்சியம்
புத்தூர் வீதி, அச்செழு.
021-2225969

.ஜெயலக்ஸ்மி ரெக்ஸ்ரைல்ஸ்
இல. 17A, நவீன சந்தை மேல் மாடி,
யாழ்ப்பாணம். 077-9353100

CITY TEX
256, Point Pedro Road,
Nallur, Jaffna. Tel: 0779587086.

சாரகாஸ் சென்ரர்
789, K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.

இராஜபுரம்
இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்
இல. 105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.0212226953

SITHEVINAYAHAR TELECOM & STATIONARY Fancy, Telephone Card,
Punnalaikadduvan South Junction, Chunnakam.
T.P/Fax: 0212240924

மாயவன் ஸ்ரோர்ஸ்
புத்தூர் வீதி, அச்செழு.

கிருபா லேணர்ஸ்
யாழ்ப்பாணம், சுன்னாகம்,
கிளிநொச்சி, விசுவமடு, நெல்லியடி.

சரவணா ரெக்ஸ்
யாழ்ப்பாணம், நல்லூர்,
நெல்லியடி.

# அமைச்சர் சம்பிக்கவின் கருத்துக்கு கருணாநிதி, திருமா எம்.பி. கொதிப்பு

ஒரு முள்ளிவாய்க்கால் சம்பவமே போதும், நூறு முள்ளிவாய்க்கால் படுகொலைச் சம்பவங்கள் நடைபெற யாரும் முயற்சிக்க வேண்டாம் என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்திருப்பதற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதியும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.





முள்ளிவாய்க்கால் துயரத்துக்குப் பின் வட இலங்கையில் தமிழர் நிலங்கள் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. தங்கள் பூர்வீக வீடுகள், நிலங்களை இழந்த தமிழ் மக்கள், இப்போது அறவழிப் போரில் மீண்டும் குதித்துள்ளனர்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், கடந்த மாதம் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் 14ஆவது தேசிய மாநாட்டில், வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பாரம்பரிய நிலம் என்பதை உறுதிப்படுத்தியாக வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

அவரது பேச்சுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, 'சம்பந்தனின் பேச்சு மீண்டும் சிங்களவர்களை சண்டைக்கு இழுப்பதாக உள்ளது. அதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். இவ்வாறு பேசுவது தொடர்ந்தால் இன்னும் நூறு முள்ளிவாய்க்கால் படுகொலைகளை நீங்கள் சந்திக்க நேரிடும்," என்று சம்பிக்க ரணவக்க பேசியுள்ளார்.

அதற்கேற்ப யாழ்ப்பாணத்தின் தெல்லிப்பழையில் நேற்று முன்தினம் காலை நடந்த நிலமீட்புப் போராட்டத்தில் பங்கேற்ற நூற்றுக்கணக்கான தமிழர்கள் மீது இராணுவம் தாக்குதலும் நடத்தியுள்ளது.

அமைச்சரின் பேச்சு, இலங்கையில் எத்தகைய சூழலில் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதை உலகுக்கு பறைசாற்றுவதாக அமைந்துள்ளது. மேலும் சிங்கள இனவாதத்தின் உச்சமாகவும் கருதப்படுகிறது. அவரது இந்த பேச்சுக்கு தமிழ்த் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி தன் கண்டனத்தைத் தெரிவித்துள்ளதோடு, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதமும் எழுதியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நூறு முள்ளிவாய்க்கால் படுகொலைச் சம்பவங்கள் நடைபெற வைப்பதற்கு யாரும் முயற்சிக்க வேண்டாம் என்று இலங்கை அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளது எங்களது கவனத்துக்கு வந்துள்ளது.

அவரின் பேச்சு கடுமையாக கண்டிக்கத்தக்கது. இது வன்முறையைத் தூண்டிவிடும் வகையில் அமைந்துள்ளது.எனவே இந்த விவகாரத்தை இலங்கை அரசிடம் கொண்டு சென்று இதுபோன்று பேசுவதைக் கட்டுப்படுத்துமாறு அறிவுறுத்த வேண்டும்.

மேலும் தமிழர்கள் விடயத்தில் இலங்கை எத்தகைய கடுமையான நிலையை எடுத்துள்ளது என்பது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பார்வைக்கும் கொண்டு செல்ல வேண்டும். தமிழர் வாழ்வுரிமை காப்பாற்றப்பட வேண்டும்-என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திருமாவளவன் ஆவேசம்**

இலங்கை அமைச்சர் சம்பிக்க ரணவக்க பேச்சுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், கடந்த மாதம் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாட்டில், வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பாரம்பரிய நிலம் என்பதை உறுதிப்படுத்தியாக வேண்டும் எனப் பேசியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து; சம்பந்தனின் பேச்சு மீண்டும் சிங்களவர்களை சண்டைக்கு இழுப்பதாக உள்ளது. அதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். இவ்வாறு பேசுவது தொடர்ந்தால் இன்னும் நூறு முள்ளிவாய்க்கால் படுகொலைகளை நீங்கள் சந்திக்க நேரிடும் என்று ரணவக்க பேசியுள்ளார்.

அவரின் இந்தப் பேச்சைக் கண்டித்து விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் - என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## கருத்தரங்கு

ஆறுதல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ''வட மாகாண கல்வி அபிவிருத்தி மற்றும் கற்றல் அடைவு மேம்பாட்டின் அறை கூவல்களுக்கு முகங்கொடுத்தல்'' எனும் தலைப்பிலான இரு நாள் கருத்தரங்கு எதிர்வரும் 23 ஆம்,24 ஆம் திகதிகளில் இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள ஆறுதல் பணிமனையில் நடைபெறவுள்ளது.

முதலாம் அமர்வு காலை 9 மணிக்கும், இரண்டாம் அமர்வு பிற்பகல் ஒரு மணிக்கும் நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கில் இடைநிலை வகுப்புகளில் கணித விஞ்ஞான பாடங்களில் மாணவர் அடைவின் செல்நெறி, இடைநிலை வகுப்புகளின் ஆங்கில பாடத்தில் மாணவர் அடைவின் பெறுமதி, ஆரம்ப வகுப்புகளில் தமிழ் மொழித் தேர்ச்சியின் செல்நெறி, 21 ஆம் நூற்றாண்டின் அறிவு சார் சமூக மாற்றத்துக்கு முன்பள்ளிகளின் பங்கு, மாணவர் ஆளுமை விருத்தியில் இணைபாடவிதானச் செயற்பாடுகளின் வகிபங்கு, கல்வி மேம்பாட்டுக்கு வேண்டிய மனித வளத்தின் வினைத்திறன் மிக்க முகாமையும் பயன்பாடும், கல்வி மேம்பாட்டுக்கு வேண்டிய பௌதிக வளத்தின் வினைதிறன்மிக்க முகாமையும் அதன் பயன்பாடும், கல்வி மேம்பாட்டுக்கான கல்வி நடைமுறைகள் கல்விச் செயலொழுங்கு என்பவற்றின் பொருத்தப்பாடு கல்வி மேம்பாட்டில் சமய நிறுவனங்களின் வகிபங்கு, கல்வி மேம்பாட்டில் ஊடகங்களின் பங்கு, கல்வி மேம்பாட்டில் சமூகம் சார் அமைப்புகளின் வகிபங்கு, இடைநிலைக் கல்வி மேம்பாட்டில் மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களின் வகிபங்கு, கல்வி மேம்பாட்டில் அதிபர்களது வகிபங்கு, கல்வி மேம்பாட்டில் ஆசிரியர்களின் வகிபங்கு ஆகிய தலைப்புகளில் கல்வி அதிகாரிகள், பேராசிரியர்கள், பிரபல ஆசிரியர்கள் பலர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (வ-14)

'சி.எஸ்.என்' நிறுவனத்துக்கு வழங்கியது அநீதியானது;

# கிரிக்கெட் ஒளிபரப்பு உரிமை குறித்த 'ரெண்டரை' மீண்டும் நடத்துங்கள்

## எம்.ரீ.வி. சனல் தனியார் நிறுவனம் கோருகிறது

இலங்கை கிரிக்கெட் அணி சொந்த மண்ணில் பங்குபற்றும் கிரிக்கெட் போட்டிகளை ஒளிபரப்புவதற்கான உரிமை கால்ரன் ஸ்போட்ஸ் நெட்வேர்க்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட விடயம் நியதிக்குப் புறம்பாகவும், அநீதியாகவும் இடம் பெற்றுள்ளது என்று எம்.ரீ.வி சனல் தனியார் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒருதரப்பினர் மட்டும் நன்மையடையும் விதத்தில் வழங்கப்பட்டுள்ள ஒளிபரப்பு உரிமையை உடனடியாக இரத்துச் செய்து இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு கூடுதல் இலாபம் கிடைக்கும் வகையில் மீண்டும் விலை மனுக்கோரலை நடத்துமாறு எம்.ரீ.வி ஊடக வலையமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

அடுத்த மூன்று வருடங்களுக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் உள்நாட்டில் நடத்தும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் தேசிய தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமை கால்ரன் ஸ்போட்ஸ் நெட்வேர்க்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதென இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அண்மையில் பல தடவைகள் அறிவித்தது. அவர்கள் எடுத்த இந்தத் தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி எம்.ரீ.வி சனல் தனியார் நிறுவனம் கடந்த மே மாதம் 22 ஆம் திகதி இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

ஒளிபரப்பு உரிமை வழங்கப்பட்ட முறைமை மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்குமாறு அதில் நாம் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்குப் பதிலளிக்கும் வகையில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித் ஜயசேகர ஜூன் மாதம் 7ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தில், உரிய நடைமுறையின் அடிப்படையிலேயே குறித்த ஒளிபரப்பு உரிமை வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.


எம்.ரீ.வி சனல் தனியார் நிறுவனம் இந்த விடயம் தொடர்பாக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு மீண்டும் ஒருமுறை கடிதம் ஒன்றின் மூலம் தெளிவுபடுத்தியது.

ஒளிபரப்பு உரிமை வழங்கப்பட்டமை நியாயமற்ற விதத்திலும், வெளிப்படைத்தன்மையற்றதாகவுமே இடம்பெற்றுள்ளதாக பல விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தது.

மக்களின் தொடர் கவனத்தை ஈர்த்துள்ள கிரிக்கெட் நாட்டின் முன்னேற்றத்திற்கு அதிக பங்களிப்பு செலுத்துவதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தவகையில் கிரிக்கெட் போட்டிகளின் உள்நாட்டு தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமையை வழங்கும் விடயத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தால் அதிக வருமானத்தை ஈட்ட முடியும். கடும் நிதிநெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அதிலிருந்து விடுபடுவதற்கு ஒளிபரப்பு உரிமையை வழங்கும்போது அதனை அதிக தொகைக்கு விற்பனை செய்ய முடியும் என விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இந்த உடன்படிக்கையை இரத்துச் செய்து அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கும் வகையிலான விலை மனுக்கோரலை மீண்டும் நடத்த வேண்டும் என்று எம்.ரீ.வி ஊடக வலையமைப்பு அறிவுறுத்தியுள்ளது. (வ)

# சிறப்பு முகாமிலுள்ள ஈழத்தமிழருக்காக தந்தி அனுப்பும் புதுவிதப் போராட்டம்



செங்கல்பட்டு,பூந்தமல்லி பகுதிகளில் 'சிறப்பு முகாம்' என்ற பெயரில், வழக்கு முடிந்த பின்னரும் கூட சிறைப்படுத்தி வைத்திருக்கும் தமிழீழத் தமிழர்களை, ஏற்கெனவே அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி தமிழக அரசுக்கு தந்தி கொடுக்கும் போராட்டம் சென்னையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கடந்த மாதம் தங்களை விடுவிக்கக் கோரி செங்கல்பட்டு முகாம் சிறைவாசிகளான ஈழத்தமிழர்கள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர். போராட்டத்தைப் பேச்சின் மூலம் முடிவுக்குக் கொண்டு வந்த தமிழக அரசு, கடந்த 15 ஆம் திகதி சிறைவாசிகளை படிப்படியாக விடுதலை செய்வதாக ஒத்துக் கொண்டது. ஆனால், எவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

தமது வாக்குறுதியைக் கைவிட்ட தமிழக அரசைக் கண்டித்து, தற்போது மீண்டும் செங்கல்பட்டு முகாம் சிறைவாசிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். தற்போது, 5 ஆவது நாளாக சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை 7 பேர் மேற்கொண்டுள்ளனர். 4ஆம் நாளிலிருந்து உண்ணாவிரதத்தில் இருந்து வரும் சதீஷ்குமார், பராபரன் மற்றும் மதன் ஆகியோரது உடல் நிலை மோசமாகி சோர்வாகக் காணப்படுகின்றனர். (வ)

## இலங்கைப் பணிப்பெண் மீது குவைத்தில் வன்புணர்வு

குவைத்தில் பணிபுரிந்த இலங்கைப் பணிப்பெண் ஒருவர் குவைத் நாட்டு பிரஜைகள் மூவரால் கடத்தப்பட்டு கடுமையாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று குவைத் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடையில் பொருள்களைக் கொள்வனவு செய்து முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை, அவரை இடைமறித்த மூவரால் காரில் கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வன்புணர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த நபர்களிடம் இருந்து தப்பிக்க முயற்சித்த போதும் முடியாது போய்விட்டது என்று இலங்கைப் பணிப்பெண் பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்த பாலியல் வன்புணர்வுச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை குவைத் பொலிஸாரால் கைது செய்யப்படவில்லை. (வ)



# கைத்தொலைபேசிப் பாவனையால் அதிகம் பாதிக்கப்படுவது ஆண்களா? பெண்களா?






நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் பெண்கள் பல்வேறு வழிகளில் பாதிப்படைந்து வருகிறார்கள். இதில் முக்கிய பங்கு வகிப்பது கைத்தொலைபேசிப் பாவனையாகும். இன்று எங்கு பார்த்தாலும் எல்லோருடைய கைகளிலும் இருப்பது கைத்தொலைபேசிகள் ஆகும்.

பெண்கள் இதனால் பாதிப்படைவ தற்குமுக்கிய காரணம் அவர்கள் மற்றவர்கள் கூறும் விடயங்களை எளிதில் நம்பிவிடுவதுதாகும். நாம் அனைவருமே அன்றாடம் கண்களால் பல்வேறு விடயங்களை அவதானிக்கின்றோம்.

நாம் தற்போது பாடசாலை மாணவர்கள். எமக்கு இந்தக் கைத்தொலைபேசி என்ற ஒன்று தேவையேயில்லை. இதன்மூலமாக தேவையற்றவர்களுடன் ஏற்படும் நட்பின் காரணமாக, வாழ்க்கையில் பல்வேறு விடயங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்படலாம். நாம் படிக்கின்ற காலத்தில்தான் கற்க முடியும். பின்பு கவலைப்பட்டு எந்தப் பயனும் இல்லை.

நமது பாடசாலையில் அண்மையில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. அதற்கு பெரிய பிரமுகர்கள் வந்திருந்தனர். அவர்கள் எமக்குக் கூறிய ஆலோசனைகளில் ஒன்று, ''உங்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தால் அவர்கள் உங்களுடன் நண்பர்கள் போன்று பேசுவார்கள். ஆனால் நீங்கள் இது பிழையான இலக்கம் என்று கூறி நிறுத்தி விடுங்கள்'' என்பதுதான்.

கைத்தொலைபேசிப் பாவனை காரணமாகப் பாதிப்படைவது பெண்கள் மாத்திரமல்ல. ஆண்களும்தான். இந்தவாரப் பத்திரிகையைப் பார்த்தீர்களானால் ஆபாசப் படங்களைப் பார்த்ததில் இளைஞர்கள் பிடிபட்டனர் என்ற செய்தி மிகவும் மன வேதனை அடையச் செய்கிறது. இதிலிருந்து நமது யாழ்ப்பாணக் கலாசாரம் எவ்வாறு பின்னோக்கிச் செல்கிறது என் பதை அவதானிக்க முடிகிறது.


வீதிகளில், கோயில் திருவிழாக்களில் பாடசாலை முடிவடைந்த வேளைகளில் இளைஞர்கள் காதில் ஒன்றைக் கொழுவியவாறு கையில் இருக்கும் செல்போன்களில் பாடல்களை ஒலிபரப்புதல், மாணவிகளைப் புகைப்படம் எடுத்தல் போன்ற செயற்பாடுகளின் காரணமாகப் படிக்கும் மாணவிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர். யாழ்ப்பாணத்தில் கலாசாரம் மிகவும் சீரழிந்து சின்னாபின்னமாகியுள்ளது. மாணவர்களாகிய நாமே நமது கலாசாரத்தைக் கட்டிக் காப்பாற்ற வேண் டும். இது நமது கடமையாகும்.

ஜெகபாலினி.ஜெ
தரம் 11 'ஏ'
யா.இந்து மகளிர் கல்லூரி.

**!** கைத்தொலைபேசிக்கு வரும் தெரியாத அழைப்புகளுக்குப் பதிலளிப்பதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அழைப்பைத் துண்டித்துக் கொள்ளுங்கள். இவ்வாறான தெரியாதவர்களின் நட்பாலேயே பெரும்பாலான பிரச்சினைகள் எழுகின்றன.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....



கைத்தொலைபேசி பாவனையால் அதிகம் பாதிகப்படுவது ஆண்களா? பெண்களா?

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.


## மெழுகுவர்த்தி



வாழ வழியில்லாமல்
கனலையே தனக்கு
காவலாக்கிக் கொண்டு
வாழ்ந்து முடிக்கும்
மெழுகுவர்த்தி

கணவன்
கைவிட்ட பின்பும்
கயவர்கள் சூழ்
உலகில் வாழ
வழி தெரியாமல்
கட்டிய
கந்தல்ச் சேலையுடன்
வாழ்ந்து முடிப்பவளே
உண்மையில்
பத்தினிப் பெண்

சா.ஜிந்துஜா
கோண்டாவில்



## என் தோழனின் வரிகள்...

தோழி! அன்று
உனது
புன்னகையின் பொருளை
நான் உணராது
உன்னை அழவைத்த என்னால்
உன்னுடன் சிரிக்க முடியவில்லை

ஆனால்....
இன்று
பிரியமான தோழி....
உனது
பிரிவு என்ற SMS ஐப் பார்த்ததும்
உனது பிரிவை ஏற்க முடியவில்லை
இருந்தாலும்
உனது பிரிவு எமது நட்பை
இன்னும் வலுப்படுத்தும்
என்ற நம்பிக்கையில்
உனக்கு பிரியாவிடை கொடுக்கிறேன்
இந்தத் தோழன்

அன்று நீ அழுதாய்!
இன்று நான் அழுகின்றேன்!
மகிழ்வாகத்தான்
இருக்கிறது
உனது எதிர்காலம் பற்றி
எண்ணும்போது....

தோழனே உன் நட்புக்கு நன்றிகள் பல
விதியழைக்கும் காலம் வரை
உன் நட்பின் நினைவுகளுடன்
வாழ்வேன் இத்தோழி....

தோழி நர்மி
யாழ்.பல்கலைக்கழகம்



## விண்ணை முட்டும் விலைவாசி....

விலைவாசி ஏற்றத்தால் விடிந்தாலே
வீட்டில் போராட்டம்....
கால் வயிற்றுக் கஞ்சியுடன் பள்ளி செல்லும்
பிஞ்சுப் பாலகர்கள் எத்தனையோ பேர்...?
அதுகூட இன்றி பட்டினி கிடக்கும்
அநாதைகளும் எத்தனையோ பேர்...?
ஒருவேளை உணவுக்கு எம்மவர்கள்
படும்பாடு பெரும்பாடு....!
யார்க்கெடுத்துரைப்போம் - யாம்
பட்டினியால் ப(ா)டும் பாட்டை!!

ஏழை வீட்டுப் பாணும் விலையேற்றம்
போடி வீட்டுப் பொருள்களும் விலையேற்றம்
எரிபொருள்களும் விலையேற்றம்
எரிவாயுவும் விலையேற்றம்
பால்மாவும் விலையேற்றம்
பிறீமாவும் விலையேற்றம்
விலையேற்றம் மட்டும்
விதிவிலக்கின்றின் விண்ணை முட்ட
விதி பிதுங்கி நாம் வீதியில் நிற்கின்றோம்.

தனியொருவருக்கு உணவில்லை எனில்
இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்
என்றார் அன்று பாரதியார் - இன்று
பட்டினியால் பரிதவிக்கும் ஏழைகளுக்கு
இப்புவியில் உணவளிக்க வல்லார் யார்...?

விண்ணைத் தொடும்
விலைவாசி உயர்வுக்கு
விரைவாகத் தீர்வு வேண்டும் - அன்றேல்
பட்டினியால் பல உயிர்கள்
மடிந்திடுமே பாரினில்...!
விரைந்திடுவீர் செயற்படுவீர்
விலைவாசி உயர்வு நீக்க...!!

ஆன் அன்ரனி கணேஸ்
தேசிய கல்வியியற் கல்லூரி.
யாழ்ப்பாணம்.



## வாழ்க்கை வளம் பெற...

★ இறைவனின் அன்புக்கு இணையான அன்பு தாயன்பு
★ அதிகாலையில் எழுகின்ற பறவைதான் நெடுந்தூரம் பறக்கும்
★ எங்கு அன்பு இருக்கிறதோ அங்கே வாழ்வு இருக்கிறது.
★ அன்பு கொடுப்பவரையும் வெறுப்பவரையும் குணமடையச் செய்கிறது.
★ கண்களால் கற்றுகொள்வதை விட ஒருவன் காதுகளால் அதிகம் கற்றுக்கொள்கிறான்.
★ கண் எங்கு இருக்கிறதோ அங்கே இதயம் இருக்கிறது என்று அர்த்தம்
★ நாவை அடக்கப் பழகிய குழந்தை விரைவில் பேசக் கற்றுக் கொள்ளும்
★ பெண்களின் உரிமைகளில் எல்லாம் பெரிய உரிமை தாயாக இருப்பது தான்
★ இதயத்தில் ஒரு வலி இருப்பதை விட எலும்பில் ஒரு வலி இருப்பது மேல்

சு.லக்ஸ்னா
கெற்பேலி மத்தி, மிருசுவில்

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக் கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :-.........................

முகவரி :- ..........................

.......................................

........................ ........................
திகதி கையொப்பம்

## கடை வாடகைக்கு

யாழ். ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் சந்திக்கு அருகில் மலசலகூட வசதி மற்றும் வாகன தரிப்பிட வசதியுடன் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
0789132306, 0779439813 (13610)

## தேவை

சாவகச்சேரியில் தனியார் வைத்தியசாலையில் வேலை செய்வதற்கு பெண் உதவியாளர்கள் தேவை.

தொடர்பு: 0750431391

(14750) (15-14-06)

# பொது இடத்தில் புகை பிடித்தோர் 10 ஆயிரம் ரூபா செலுத்தினர்

யாழ்ப்பாணம்,ஜூன் 21

யாழ். நகரில் பொது இடத்தில் புகைபிடித்த மாணவனுக்கு யாழ். நீதிமன்றம் 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. மேலும் இருவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. மட்டக்களப்பைச் சேர்ந்த மாணவன் தற்போது யாழ். நகரில் ஜும்மா ஒழுங்கையில் வசித்து வருகிறார். இவர் பொது இடத்தில் புகைபிடித்த குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதனை அடுத்து 4 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

தவிர கோப்பாய் மற்றும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 2 பேரும் பொது இடத்தில் புகை பிடித்த குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டதை அடுத்து தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தது யாழ். நீதிமன்றம்.

(ஒ-45)

## வேலையாள்கள் தேவை

01. பக்கவடிவமைப்பாளர் (கிராபிக்ஸ் டிசைனர்) (ஆண்/பெண்)
02. பயிலுநர்கள் (கலர்லாப், ஸ்ரூடியோ)
03. பராமரிப்பாளர்கள்.

தொடர்பு:
KONICA C.T.P. சிறிராம்
158, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-929) (15-14-06)

## யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை
## J/Mahajana College Tellippalai

T.P. 021 221 4004
021 222 3981

1910 - 2010

E.Mail :
Jayamahajana2010@gmail.com
Jayamahajana2010@yahoo.com

### யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை
### நிறுவுனர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

24.06.2012 காலை 8.30 மணி இடம்: பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்

தலைமை
**திரு.கு.வேல்சிவானந்தன்**
அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

பிரதம அதிதி
**திரு. த.பூ. முருகையா**
முன்னாள் புகழ் பூத்த கணித ஆசிரியர்,
மாவட்ட முகாமையாளர்,
தேசிய வீடமைப்பு அதிகாரசபை.

விசேட அதிதி
**திரு. ஆ. இராஜேந்திரன்**
வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம்.

சிறப்பு அதிதி
**திரு. ச. கைலாசநாதன்**
பிரதிக்கல்விப்பணிப்பாளர் - மாணவர் கல்வி அபிவிருத்தி
வலிகாமம் கல்வி வலயம்.

**திரு. எஸ். சண்முககுலகுமாரன்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்.

கௌரவ அதிதி
**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

நினைவுப் பேருரை
**திருமதி. வானதி காண்டீபன் M.Sc. Ed.**
மகாஜனன்
பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தமிழ்த்துறை தேசியகல்வி நிறுவனம்

நன்றியுரை
**திரு. செ. உமாகாந்தன்**
செயலாளர், பழைய மாணவர் சங்கம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
கல்லூரிச் சமூகத்தினர்.

(சி-925)(14.34)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கமலர் சக்திவேல்



சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமலர் சக்திவேல் 19.06.2012 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சக்திவேல் (ஓய்வுபெற்ற வங்கியாளர்) அவர்களின் மனைவியும், சிவபாலன் (அமெரிக்கா), கனநாதன் (பிரான்ஸ்), ஜெயலக்ஷ்மி (ஓய்வுபெற்ற நடன ஆசிரியர்) ஆகியோரின் தாயும், பத்மினி, நளினி, காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் மாமியும், சிவஷாந்தன், சுகன்யா, சிவஷாந்தி, நரேன், பிரஷாந்தன், கேஷினி, புருஷோத்தமன், சுபாஷினி, ஜெயப்பிரகாஷ், ரகுவரன், ரகுராம், ரகுராய் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (22.06.2012) வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு வட்டுக்கோட்டை வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி,
சித்தங்கேணி

தகவல்:
பேரன் (பிரஷாந்தன்
சண்முகநாதன்)

(சீ/846)(6-8-14)



கடந்த 18.06.2012 அன்று பிரசுரிக்கப்பட்ட மரண அறிவித்தலில் காலஞ்சென்ற

**கார்த்திகேசு சிற்றம்பலம்**

அவர்களின் மகளுடைய பெயர் தவறவிடப்பட்டுள்ளது. அவருடைய மகள் திருமதி வாகீஸ்வரி எனும் பெயரையும் சேர்த்து வாசிக்கவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(19609) (15-14)

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
09.10.1972

மறைவு:
22.05.2012



### அமரர் செல்லத்துரை டேமியன்

''உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்''

செபம்

இரக்கம் நிறைந்த அன்புத் தெய்வமே!

மரணம் எமக்குத் துயரத்தை தருகின்ற போதிலும் அது எமக்கு நிச்சயமானது என அறிந்திருக்கின்றோம். எனவே உமது அழைப்பை ஏற்று உம்மிடம் வந்துள்ள உமது அடியான் செல்லத்துரை டேமியன் அவர்கள் இவ்வுலகில் தெரிந்தும் தெரியாமலும் புரிந்த குற்றங்களை மன்னித்து உமது நித்திய பேரின்ப வீட்டில் இடம் கொடுத்தருள வேண்டுமென்று உம்மை இரந்து மன்றாடுகின்றோம். ஆமென்.

இவரின் ஆத்ம இளைப்பாற்றுக்காக இன்று (21.06.2012) வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு அந்திரான் டச்றோட் தூய அன்னை வேளாங்கன்னி ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியிலும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அந்திரான்,
சண்டிலிப்பாய்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(19608) (14-34)

## மரண அறிவித்தல்



சிங்கராஜா ஒழுங்கை,
கல்வியங்காடு.

### செல்லப்பா பத்மநாதன்

3ஆம் கட்டை, சிங்கராஜா ஒழுங்கை, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பத்மநாதன் நேற்று (20.06.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நிர்மலன் (சின்னவன் - P.N)
குடும்பத்தினர்.

(19616) (14-34)

வடமாகாண 19 வயதுப் பெண்களுக்கான எல்லே

# வீறுகொண்ட விக்ரோறியாவிடம் மண்டியிட்டது மணற்காடு றோ.க.

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடமாகாண 19 வயதுப் பெண்களுக்கான எல்லேப் போட்டியில் தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாக சம்பியன் கிண்ணத்தை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி சுவீகரித்துக்கொண்டது.

வடமாகாண கல்வித் திணைக்களம் பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் மாகாண மட்ட பெரு விளையாட்டுப் போட்டிகளின் ஓர் அங்கமான எல்லேப் போட்டிகள் மன்னார் முருங்கன் ம.வி. மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன. இதில் 19 வயதுப் பெண்களுக்கான இறுதிப் போட்டியில் மணற்காடு றோ.க. பாடசாலையும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.



முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி வீராங்கனைகளின் ஆட்டத்தில் அனல் பறந்தது. மணற்காடு றோ.க.வின் களவியூகங்களை தகர்த்தெறிந்து ஓட்டங்களைப் பெற்றது விக்ரோறியா. இறுதியில் 50 பந்து வீச்சுகளில் விக்ரோறியா அணி 15 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணி சார்பில் ரஜிதா 6 ஓட்டங்களையும், கோபிகா, சுகன்யா ஆகியோர் தலா 3 ஓட்டங்களையும் பானுப்பிரியா, பிரணவி, அனியா ஆகியோர் தலா ஒவ்வொரு ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பதிலளித்தாடிய மணற்காடு றோ.க. ஓட்டங்களைப் பெறத் திணறியது. விக்ரோறியா அணியின் சிறப்பான களத்தடுப்புக் காரணமாக அந்த அணி 4 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது. இதனால் 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மணற்காடு றோ.கவை வீழ்த்தி, இரண்டாவது முறையாக மாகாண மட்டச் சம்பியனானது விக்ரோறியா. (ந)

## வென்றன சென்.நீக்கிலஸ் பாடுமீன்

பண்டத்தரிப்பு, ஜூன் 21

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படுகின்ற உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் லீக் போட்டிகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகமும், குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. இதில் நாவாந்துறை சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கணக்கில் சென்.றோக்ஸ் அணியை வீழ்த்தியது. நாவாந்துறை சென் நீக்கிலஸ் சார்பில் அஜித் இரு கோல்களையும்,அமிலன் ஒரு கோலினையும் அடித்தனர்.

சுற்றுத்தொடரின் மற்றுமொரு போட்டியில் அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழகமும்,குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகமும்மோதிக்கொண்டன. இப்போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கணக்கில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. (ந-130)

## நியூ ஸ்ரார், நியூ போய்ஸ் பொற்பதி ஐக்கியம் வெற்றி

பண்டத்தரிப்பு, ஜூன் 21

பண்டத்தரிப்பு ஐக்கியம் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படுகின்ற யாழ் மாவட்ட அணிகளுக்கிடையிலான அணிக்கு 8 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுத்தொடரின் காலிறுதி ஆட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலாவது காலிறுதிப் போட்டியில் சுன்னாகம் நியூ ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் சங்கானை யுத் அணியினரும் மோதிக்கொண்டனர். முதலில் துடுப்பெடுத்தாடிய நியூ ஸ்ரார் அணியினர் 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 66 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் கிரி 20 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சங்கானை யுத் அணியினர் 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 58 ஓட்டங்களை மட்டுமே பெற்று 8 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவினர். சங்கானை யுத் சார்பில் பிரசன்னா மட்டுமே சிறப்பாக ஆடி 28 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். சுன்னாகம் நியூ ஸ்ரார் அணியின் பந்துவீச்சில் ஜிந்தா 3 இலக்குகளை கைப்பற்றியிருந்தார். இதனடிப்படையில் சுன்னாகம் நியூ ஸ்ரார் அணியினர் அரையிறுதிக்குத் தகுதி பெற்றனர்.

இரண்டாவது காலிறுதிப் போட்டியில் கோண்டாவில் நியூ போய்ஸ் அணியினரும் சித்தன்கேணி வேல்ட் அணியினரும் மோதிக்கொண்டனர். இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சித்தன்கேணி வேர்ல்ட் அணியினர் 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 40 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டனர். கோண்டாவில் நியூ போய்ஸ் சார்பில் சிறப்பாக பந்து வீசிய நிமல் 4 இலக்குகளையும், தர்மா 3 இலக்குகளையும் வீழ்த்தினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கோண்டாவில் நியூ போய்ஸ் அணியினர் கஜந்தா (18), றெனஸ் (19) ஆகியோரின் உதவியுடன் ஒரு இலக்கினை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை இலகுவாக அடைந்தனர். இந்த வெற்றியின் மூலம் கோண்டாவில் நியூ போய்ஸ் அணி அரையிறுதிக்குள் நுழைந்தது.

மூன்றாவது காலிறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை கலைநகர் விளையாட்டுக் கழகமும், பொற்பதி ஐக்கியம் விளையாட்டுக் கழகமும் விளையாடின. முதலில் துடுப்பெடுத்தாடிய கலைநகர் விளையாட்டுக் கழக அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 59 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். பதிலளித்து ஆடிய பொற்பதி ஐக்கிய அணியினர் 6 ஆவது பந்துப் பரிமாற்றத்திலே வெற்றி இலக்கை அடைந்தனர். அதிரடியாக துடுப்பெடுத்தாடிய சுபாஸ்கரன் 35 ஓட்டங்களைப் பெற்றார். இதனடிப்படையில் பொற்பதி ஐக்கியம் விளையாட்டுக் கழகம் மூன்றாவது அணியாக அரையிறுதிக்குள் நுழைந்தது. (ந-130)

## பறிகொடுத்த சம்பியனை மீண்டும் பெற்றது தெல்லிப்பழை மகாஜனா



வலி.வடக்கு, ஜூன் 21

2009, 2010ஆம் ஆண்டு களில் மாகாணச் சம்பியனாகிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, 2011ஆம் ஆண்டு வடமராட்சிஹெஷ்ஸ்த பெண்கள் பாடசாலையிடம் பறிகொடுத்த சம்பியன் கிண்ணத்தை இந்த வருடம் மீண்டும் தனதாக்கிக் கொண்டது.

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (16ஆம் திகதி) இடம் பெற்றது.

இறுதிப் போட்டியில்தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும்மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்ட போதிலும் மகாஜனக் கல்லூரியின் கடந்த கால அனுபவம் கை கொடுக்க, வெற்றி அதன் பக்கம் திரும்பியது. மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக் களையும் முறையே 25:17, 25:14 புள்ளிகள் என்ற அடிப்படையில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வெற்றி கொண்டு மாகாணச் சம்பியனாகியது. (ந-86)

# குமரையா வெற்றிக் கிண்ணத்தை வெல்லப்போவது ஊரெழு றோயலா? மயிலங்காடு ஞானமுருகனா?

பண்டத்தரிப்பு, ஜூன் 21

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் அமரர் ஈ.கே.குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான அரையிறுதி ஆட்டங்களில் வெற்றி பெற்ற ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியும் இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பல்கலைக்கழக அணி அரையிறுதியில் தோற்று சுற்றுத் தொடரை விட்டு வெளியேறியது.

சுற்றுத் தொடரின் முதலாவது அரையிறுதி ஆட்டம் கடந்த சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில்ஆனைக்கோட்டை யூனியன் அணியினரும், மயிலங்காடு ஞானமுருகன் அணியினரும் மோதிக்கொண்டனர். போட்டியின்முதல் பாதி முழுவதும் ஊரெழு றோயல் அணியினரே ஆதிக்கம் செலுத்தினர். போட்டி ஆரம்பித்து சில நிமிடங்களுக்குள்ளே றோயல் வீரர் பகீர் முதலாவது கோலினைப் போட்டார். தொடர்ந்தும் சிறப்பானஆட்டத்தை வெளிப்படுத்திய பகீர் மேலும் ஒரு கோலைப் போட முதல் பாதி முடிவில் ஊரெழு றோயல் அணியினர் 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றனர்.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானதும் ஆனைக் கோட்டை யூனியன் அணியினரின் ஆட்டத்தில் புதிய உத்வேகம் தெரிந்தது. யூனியன் வீரர்கள் பின்களத்திலிருந்து பந்துகளை சிறப்பாக முன்னகர்த்தியிருந்த போதும் அதனை கோலாக்கும் முயற்சிகள் கைகூடவில்லை. ஆனைக்கோட்டை யூனியன் வீரர்கள் அதிக ஆக்ரோஷத்துடன் விளையாடியதால் தவறான ஆட்டம் ஒன்றிற்காக அவ்வணி வீரர் ஒருவர் மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கப்பட்டார். யூனியன் வீரர்களின் மேலும் ஒரு தவறான ஆட்டத்திற்காக ஊரெழு றோயல் அணியினருக்கு தண்டனை உதை ஒன்று வழங்கப்பட, அதனை றோயல் வீரர் தங்கநாதன் கோலாக மாற்றினார். இறுதியாக ஆட்ட நேர முடிவில் 3:0 என்ற கணக்கில் ஆனைக் கோட்டை யூனியன் அணியை வென்ற ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணியும், மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதிக்கொண்டன. எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பவே ஆட்டத்தின் முதல் பாதியில் பல்கலை அணியினர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். பல்கலை வீரர் தனிஸ்ரன் ஒரு கோலினை பெற்றுக் கொடுக்க முதல் பாதி நேர முடிவில் பல்கலை அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இரண்டாம் பாதி மிகவும் விறுவிறுப்பானதாக அமைந்தது. இரு அணிவீரர்களும் சம பலத்துடன் விளையாடினார்கள். இந்த வேளை ஞானமுருகன் வீரர் தசரதன் சிறப்பான முறையில் பந்தை நகர்த்தி ஒரு கோலினைப் பெற்றுக் கொடுக்க ஆட்டம் சமநிலை யடைந்தது. ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் தலா ஒவ்வொரு கோல் போட்டிருந்ததால் போட்டியின் முடிவு சமநிலை தவிர்ப்பு உதை மூலம் தீர்மானிக்கப்பட்டது. இம்முறையும் முன்னைய போட்டியைப் போல சமநிலை தவிர்ப்பு உதையும் 8 ஆவது உதை வரை விறுவிறுப்பானதாக அமைந்திருந்தது. 8 ஆவது உதை நிறைவில் மயிலங்காடு ஞானமுருகன் அணியினர்4 கோல்களையும், பல்கலை அணியினர்3 கோல்களையும் பெற்றிருந்தமையால் மயிலங்காடு ஞானமுருகன் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. சுற்றுத்தொடரில் இதுவரை தோற்றிராத அணியான பல்கலை அணியின் தொடர் வெற்றிகளுக்கு மயிலங்காடு ஞானமுருகன் அணியினர் முற்றுப்புள்ளி வைத்து இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றனர். (ந-130)

# மறுக்கப்பட்டது உக்ரேன் கோல்




ஐரேப்பிய கிண்ண உதை பந்துத் தொடரில் நேற்றுமுன்தினம் டொனாஸ்க்கில் நடந்த 'டி' பிரிவு ஆட்டத்தில் உக்ரேன் - இங்கிலாந்து அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் 48 ஆவது நிமிடத்தில் இங்கிலாந்தின் ரூனி கோல் அடித்தார். இந்தக் கோலுக்கு 62 ஆவது நிமிடத்தில் உக்ரேன் வீரர் மார்கோ டெவிக் பதிலடி கொடுத்தார். டெவிக் அடித்த பந்து இங்கிலாந்து கோல் காப்பாளர் ஜோ ஹார்ட்டால் தடுக்கப்பட்டு அவரைத் தாண்டி அந்தரத்தில் கோலை நோக்கி மெல்ல மெல்ல சென்றுகொண்டிருந்தது. ஆனால் பந்தை பின்னாலேயே விரட்டிக்கொண்டு வந்த செல்சி அணித்தலைவர் ஜான் டெர்ரி மிக அருமையாக தடுத்தார். ஆனால் அதற்கு முன்னரே பந்து எல்லைக் கோட்டை தாண்டி விட்டது. எனினும் நடுவர் கசாய் உக்ரேனுக்கு சாதகமாக கோல் கொடுக்க மறுத்து விட்டார்.

இந்த ஐரோப்பிய கிண்ணத் தொடரில் தான் முதல்முறையாக 5 நடுவர்கள் பணியாற்றிவருகின்றனர். இதில் எல்லைக்கோட்டை பந்து தாண்டுகிறதா? என்பதை கண்காணிக்க இரு கோல்கம்பம் அருகேயும் கூடுதலாக இரு நடுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்படி 5 பேர் பணியாற்றியும் உக்ரேன் அடித்த கோல் மறுக்கப்பட்டது பெரிய சர்ச்சையை




கிளப்பியுள்ளது. இந்த நிலையில் 'கோல் லைன் டெக்னோலஜி' கொண்டு வர வேண்டும் என்ற கருத்து மீண்டும் எழுந்துள்ளது.

சுவீடனிடம், பிரான்ஸ் தோற்ற நிலையில் இந்த ஆட்டம் சமநிலையில் முடிந்தால் உக்ரேன் அணி காலிறுதிக்கு முன்னேற கொஞ்சம் வாய்ப்பு - இருந்திருக்கும்.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் 'கோல்லைன் டெக்னோலஜி' செயல்படுத்தப்படும் என்று 'பிபா' தலைவர் ஜோசப் பிளேட்டர் கூறியுள்ளார்.

# பங்களாதேஷை வீழ்த்தியது தென்னாபிரிக்கா



சிம்பாப்வே முக்கோண 'ரி-20' தொடரில் தென்னாபிரிக்க அணி இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொண்டது. நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அந்த அணி பங்களாதேஷ் அணியை வெற்றிகொண்டது.

ஹராரே விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது இலக்குக்காக ரிச்சாட் லீவி, அணித்தலைவர் ஹசிம் அம்லா இருவரும் 6.2 பந்துப் பரிமாற்றங்களில் 70 ஓட்டங்களைக் குவித்தனர். இரண்டாவது இலக்குக்காக கொலின் இன்க்ராம், ஹசிம் அம்லா இருவரும் 7.1 பந்துப் பரிமாற்றங்களில் 85 ஓட்டங்களையும், 3 ஆவது இலக்குக்காக அல்பி மோர்க்கல், ஹசிம் அம்லா இருவரும் 5.2 பந்துப் பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களையும் குவித்தனர்.


4 ஆவது இலக்குக்காக ஹசிம் அம்லா, ஜே.பி.டுமினி இருவரும் பிரிக்கப்படமுடியாத 24 ஓட்டங்களை 8 பந்துகளில் பெற்றுக் கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஹசிம் அம்லா 53 பந்துகளில் 88 ஓட்டங்களைப் பெற்றார். ரிச்சாட் லீவி 21 பந்துகளில் 37 ஓட்டங்களையும், கொலின் இன்க்ராம் 22 பந்துகளில் 29 ஓட்டங்களையும், ஜே.பி.டுமினி 7 பந்துகளில் 23 ஓட்டங்களையும், அல்பி மோர்க்கல் 18 பந்துகளில் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

210 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்று 39 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

அந்த அணி சார்பாக அணித்தலைவர் முஷ்பிக்கூர் ரஹீம் 32 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும், மஹமதுல்லா 23 பந்துகளில் 34 ஓட்டங்களையும், மொஹமட் அஷ்ரபுல் 31 பந்துகளில் 33 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்ட நாயகனாக துடுப்பாட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்ட தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஹசிம் அம்லா தெரிவானார். (5)

# அடுத்த குளூஸ்னர் திஸ்ஸர பெரேரா?



இலங்கை அணியின் இளம் சகலதுறை வீரரான திஸ்ஸர பெரேரா, தென்னாபிரிக்காவின் முன்னாள் நட்சத்திரச் சகலதுறை வீரரான லான்ஸ் குளூஸ்னரை ஞாபகமூட்டுவதாக இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளரான கிரஹாம் போர்ட் தெரிவித்துள்ளார். திஸ்ஸர பெரேரா துடுப்பெடுத்தாடும் விதம் தனக்கு லான்ஸ் குளூஸ்னரை ஞாபகமூட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

1992 ஆம் ஆண்டு கிரிக்கெட் பயிற்றுவிப்புப் பணியை ஆரம்பித்த கிரஹாம் போர்ட் பயிற்சியளித்த முதலாவது அணியில் லான்ஸ் குளூஸ்னர், ஷோன் பொலக், மல்கொம் மார்ஷல் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். அதன் பின்னர் போர்ட் 1999ஆம் ஆண்டு தென்னாபிரிக்கத் தேசிய அணிக்கும் பயிற்றுவித்திருந்தார்.

திஸ்ஸர பெரேரா பந்தை அடித்தாடும் விதம் தனக்கு லான்ஸ் குளூஸ்னரை ஞாபகமூட்டுவதாகத் தெரிவித்த அவர், திஸ்ஸர பெரோராவிற்கு தற்போது 23 வயது மாத்திரமே ஆகிறது எனவும், அவர் தொடர்ந்தும் வளர்ந்து வர அவர் இன்னமும் சிறந்த வீரராக மாறுவார் எனவும் தெரிவித்தார்.

திஸ்ஸர பெரேரா போன்ற ஒரு வீரரைக் கொண்டிருப்பது இலங்கைக் கிரிக்கெட்டிற்கு மிகவும் சிறப்பானது எனத் தெரிவித்த போர்ட், பந்துவீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு ஆகிய மூன்று பிரிவாலும் போட்டிகளை அணிக்காக வென்று கொடுக்கக்கூடிய திறன் திஸ்ஸ பெரேராவிற்கு உண்டு எனத் தெரிவித்தார்.

திஸ்ஸர பெரேராவின் கடின உழைப்பைப் பாராட்டிய இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன, அவரது கடின பயிற்சியே அவரை இந்தளவுக்குக் கொண்டுவந்துள்ளது எனவும், அவர் தொடர்ந்தும் சிறப்பான பயிற்சிகளை மேற்கொண்டு எதிர்காலத்தில் சிறந்த வீரராக மிளிர வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் தொடர் நாயகன் விருது வென்ற திஸ்ஸர தனது பெறுபேறுகள் குறித்துத் தெரிவித்த போது தான் பந்துவீச்சுச் சகலதுறை வீரராகவே அணியில் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும், பந்துவீச்சே தனது பிரதான நோக்கமாக அமையும் எனவும் தெரிவித்தார். (5)

# தொடர் இங்கிலாந்து வசமானது



இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான இரண்டாவது ஒரு நாள் சர்வதேச ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 8 இலக்குகளால் வெற்றிபெற்றுள்ளது.

லண்டனில் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக முதலாவது இலக்குக்காக 63 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், அதிரடி வீரர் கிறிஸ் கெயில் 51 பந்துகளில் 53 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்த போதிலும், தொடர்ச்சியாக இலக்குகள் வீழ்த்தப்பட்டதால் அந்த அணியால் ஓட்டங்களைக் குவிக்க முடிந்திருக்கவில்லை.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக டுவைன் பிராவோ 82 பந்துகளில் 77 ஓட்டங்களையும், கிறிஸ் கெயில் 51 பந்துகளில் 53 ஓட்டங்களையும், பொலார்ட் 52 பந்துகளில் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அன்டர்சன் 38 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஸ்ருவேர்ட் புரோட் 43 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

239 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 45 பந்து பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இங்கிலாந்து அணி சார்பாக முதலாவது இலக்குக்காக அலஸ்ரெயர் குக், இயன் பெல் ஆகியோர் 122 ஓட்டங்களைக் குவித்தனர்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக அணித்தலைவர் அலஸ்ரெயர் குக் 120 பந்துகளில் 112 ஓட்டங்களையும், இயன் பெல் 64 பந்துகளில் 53 ஓட்டங்களையும், ஜொனதன் ட்ரொட் 68 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக அணித்தலைவர் டெரன் சமி 46 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக அலஸ்ரெயர் குக் தெரிவானார்.

இந்த ஆட்டத்தில் பெறப்பட்ட வெற்றியை அடுத்து 3 ஆட்டங்கள் கொண்ட தொடரை இங்கிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

(5)

**Engineering-USA** 4,300.Rs Per Module | **BIT Degree** 4,800.Rs Per Semester | **Diploma** 1,000.Rs Per Course Discount | **CIMA** UK 10,000.Rs Per Level Discount

(சி-913)

A/L 2012 பரீட்சைக்கு தோற்றுவோரும் கட்டணம் இன்றி விண்ணப்பிக்கலாம்

SMS Your name & Course to 775520940 & Get Schol.

Qualified Lectures panel, 12 Years Experience

மேலதிக விபரங்களுக்கு நேரில்

**MCAI CAMPUS**

Supported by Jaffna Computer Society

கல்வியங்காட்டில் 243, Adiyapatham Road Bus Route 750 / 751



## தேவை

எமது நிறுவனத்திற்கு இரண்டு வருட அனுபவமுடைய எயார்கொண்டிசன், Fridge திருத்தக்கூடியவர்கள் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விவரங்களிற்கு

**NEW ASIAN CENTER**

**56/15,** ஸ்ரான்லி வீதி (சம்பத் வங்கி அருகில்) யாழ்ப்பாணம்.

**T.P 0778249949**

(சி/922) (15-14)


## சச்சினை முந்தினார் டோனி

உலகின் பணக்கார விளையாட்டு நட்சத்திரங்கள் பட்டியலில், இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் டோனி, சச்சின், உசைன் போல்ட், ஜோகோவிச் ஆகியோரை பின்தள்ளி 31 ஆவது இடம் பிடித்தார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், இரு வாரங்களுக்கு ஒரு முறை வெளியாகும் பிரபல 'போர்ப்ஸ்' பத்திரிகை, உலகின் பணக்கார விளையாட்டு நட்சத்திரங்களின் பட்டியலை வெளியிட்டது. இதில் இந்திய கிரிக்கெட் அணி தலைவர் டோனிக்கு 31 ஆவது இடம் கிடைத்துள்ளது. இவரது வருமானம் ரூ. 148 கோடியாக கணக்கிடப்பட்டுள்ளது.

(5)


## வேலையாள்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள நிறுவனத்துக்கு **Digital Album Desiners** உடன் தேவை. ஒருவருட அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விவரங்களுக்கு 23.06.2012 க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

**SRI RAM ELECTRONICS**

ஸ்ரான்லி வீதி, (மக்கள் வங்கி அருகில்)

யாழ்ப்பாணம். தொ.பே. 0776048646

(19660)(6.14.34)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி தனலட்சுமி நடராசா

தோற்றம்:- 07-06-1932

மறைவு:- 24-06-2009

மூன்று ஆண்டுகள் ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம் அன்பும் பாசமும் நிறைந்த
போக்கிஷம் நீங்கள் நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல் ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கட்டப்பிராய் லேன்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்

(19563) (15-14-06)

என்றும் நினைவுகளுடன்
தர்மலிங்கம் (ஜீவா - மகன்)


## முக்கிய அறிவித்தல்

கே.கே.எஸ். வீதி அகலிப்பு பணியை முன்னிட்டு ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் ஆகிய எமது நிறுவனம் எதிர்வரும் 25.06.2012 ஆம் திகதியில் இருந்து 25, ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கும் என்பதனை எமது வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,**
**212, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**
T.P:0212225542, 0215671527

(சி/924)



## வெளிவந்துவிட்டது

க.பொ.த. (உயர்தரம்)
இரசாயனவியல்
**பொது இரசாயனம்**
(2011இல் மீள்நோக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்துக்கு அமைவானது)
ஆசிரியர்: க. வாணிமுகுந்தன் B.Sc. Dip. in Ed
தொ.இல.: 0777172715
அனைத்துப் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான விநியோகஸ்தர்
**அன்னை புத்தகசாலை**
யாழ்ப்பாணம்

(19495)(6.14.34)



## Architectural CAD Centre

கட்டட பட வரைதல் பயிற்சி (19655)

Advance Dip.in Engineering Drawing &

**Auto CAD**

2D-Drawing & 3D-Modeling

Lecturer By: M.N.N. Mujanthan [D/A]
Cert. in 2D-Drawing & 3D-Modeling in Auto CAD
Open University of Sri Lanka-Nugegoda
Cert. in Auto CAD (2D & 3D Drawing)-(1st Class)
University of Colombo- Sri Lanka 0776873032
Cert. in Auto CAD (2D-3D) (1st Class-Batch Top)
Inf.Tech.Park- Ministry of Rehabilitation.
Dip. in Eng. Drawing & Auto CAD (1st Class)
IIS- International University – Dublin 0719978819

Personal-Group Classes (Colombo-Vavuniya-Jaffna)



## Service Station

**உடன் விற்பனைக்கு**

புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு அண்மையில் நல்ல நிலையில் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பார ஊர்திகள் சுத்திகரிப்பு நிலையம் (சேவிஸ் ஸ்ரேசன்) உடன் விற்பனைக்கு உண்டு.

★ 4.5 பரப்பு விஸ்தீரணம் கொண்டது

விலை : 13.5 Million

உடனடித் தொடர்புகளுக்கு

T.P. 0770365676, 0777696443
E-Mail : citystarkb@gmail.com

(சி-923)(6.14.34)



## Deutch மொழிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன

with Grammer உடன் இலகுவான முறையில் German மொழியை கற்போம்.

- வவுனியா Oxford கல்வி நிலையம், Station Road, Vairavapulliyankulam, Vavuniya.
- யாழ். Academy of Logic பலாலி வீதி, இலுப்பையடிச் சந்திக்கு அருகில்

T.P. 0779707322

(19659)(6.14.34)



## Receptionist தேவை

அலுவலகம் ஒன்றிற்கு யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளில் வசிக்கும் பெண் (Receptionist) வரவேற்பாளர் தேவை.

**தொடர்புகளுக்கு**
**0756574136**

(19496)(6.14.34)



# புதிய நகைக்கடை திறப்பு விழா

நிகழும் மங்களகரமான நந்தன வருடம் ஆனி மாதம் 07ஆம் நாள் இன்று (21.06.2012) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிமுதல் 12.15 மணிவரையுள்ள புனர்பூச நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

**K.T. பிளாசா என்னும் புதிதாக அமைக்கப்பெற்ற கட்டடத்தில்**

## ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்

என்னும் நகைக் கடை ஸ்தாபனம் இறைவன் திருவருள் துணை கொண்டு ஆரம்பிக்க இருப்பதால் அத்தருணம் வாடிக்கையாளர்கள், உறவினர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து ஸ்தாபனத்தை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

திரு. திருமதி ஆ. குணசேகரம்
திலகராணி குடும்பத்தினர்.




**K.T. பிளாசா, பிரதான வீதி, சங்கானை.**

(சி-910)(6.14.34)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.